T04216
R001J06



THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATI MAHAL LIBRARY + TANJORE +

ஸ்ரீ தந்வந்தரயே நம:

ஆசார்ய தீஸடரால்
செய்யப் பெற்ற

# சிகித்ஸா கலிகா.

திருச்சி, வைத்யவிசாரத
ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி அவர்களின்
மொழிபெயர்ப்புடன்.

4216.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின்
முகபத்திரிகையான
வைத்யசந்த்ரிகையின்
மறு பதிப்பு.

விலை அணா 0—14—0

21245
General
தமிழ்
4216.

உ

# சிகித்ஸா கலிகா.

*தீஸடாசார்யர் இயற்றியது.*

[மொழிப்பெயர்ப்பு வைத்யவிசாரத,
S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ, திருச்சி.]

---

[சிகித்ஸா கலிகா என்ற நூல் தீஸடாசார்யரால் ஸம்ஸ்கிருதத்தில் ஸரளமான பாஷையில் அழகான விருத்தங்களில் ச்லோகங்களாக இயற்றப்பட்டுள்ளது. இது **400** ச்லோகங்கள் கொண்டது. வைத்தியர்களின் அன்றாட உபயோகத்திற்காக சிறந்த மருந்து யோகங்களும் கைதேர்ந்த சிகித்ஸை முறைகளும் இதில் கூறப்பட்டுள்ளன. இவர் பிரஸித்திபெற்ற அஷ்டாங்கஹ்ருதயம் செய்த வாக்படரின் புதல்வர் எனக்கூறுவர் இவரது புதல்வர் சந்திரடர் என்பவர் சிகித்ஸா கலிகாவிச்குச சிறந்த உரை எழுதியுள்ளார். வைத்ய சாஸ்திரத்தின் சாரமெல்லாம் இதிலடங்கியுள்ளது. தீஸடரின் காலம் சுமார் கி. மு. பத்தாவது நூற்றாண்டின் ஆரம்ப காலம் என சில காலகுறிப்பு எழுதும் ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இந்த மொழிப்பெயர்ப்பு மூலத்தை ஒட்டியது. கீழ்க் குறிப்பில் சந்திரடரின் உரைக்கிணங்க சில முக்கிய விவரணங்களும் கொடுக்கப்படுகின்றது. S. V. R.]

### கடவுள்–குரு வணக்கம்.

सूर्याश्विधन्वन्तरिसुश्रुतादीन्
भक्त्यानमस्कृत्य पितुश्च पादान् ।
कृता चिकित्साकलिकेति योगैः
माला सरोजैरिव तीसटेन ॥

ஸூர்யன், அசுவினி தேவதைகள், தன்வந்தரி, சுச்ருதர், முதலான வைத்யாசார்யர்களையும் பூஜ்யரான தகப்பனாரையும் பக்தியுடன் நமஸ்கரித்து தீஸடனாகிற என்னால் சிகித்ஸா–கலிகா– (சிகித்ஸைப் பூங்கொத்து) என்கிற பூமாலை மருந்து யோகங்கள் என்ற

## முன்னுரை.

ஹாரீதர், ஸுச்ருதர், பராசரர், போஜர், பேலர், பிருகு, அக்னி வேசர், சரகர் முதலிய வைத்யாசார்யர்களால் உபதேசிக்கப்பட்டவைகளும், தன்வந்தரி வழிவந்தவர்களால் நன்கு விஸ்தரிக்கப்பட்டு அதிகப் பிரஸித்தி அடைந்தவைகளும் நல்ல குணமுள்ளவைகளுமான சிறந்த யோகங்கள் இதில் கூறப்படுகின்றன,

சாஸ்திரங்களில் ஸ்வல்ப பரிசயமுள்ள வைத்யருக்கு ஸுசுருதர் போன்றவர்களின் சாஸ்திர சமுத்திரத்தில் புத்தி கலக்கமுற்று தடங்கிப்போகும். என்போன்றவர்களால் எழுதப்பெற்ற யோகத் தொகுப்பில் படியாதவனும், படித்தவனும் ஒழுங்கே தன் புத்தியை செலுத்தமுடியும்,

## சிகித்ஸையின் அதிஷ்டானமும், கிரந்தத்தின் நோக்கமும்.

பிருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், என்ற இவ்வைம் பூதங்கள் ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்கள், த்வக், தோஷங்கள், தாதுக்கள், மலங்கள், மர்மங்கள், சிரைகள் முதலியவைகளால் வியாபிக்கப்பட்டிருப்பது இந்த ஜீவனுள்ள சரீரம். இதில்தான் ரோகங்கள் ஏற்படுகின்றது.

இந்த ரோகங்கள் பலவிதமாகப் பிரிக்கப்படுகின்றன. வாதம் பித்தம் கபம் என்ற மூன்று தோஷங்களால் உண்டாகுவதால் மூன்றுவகை எனவும், சில குணமடையக் கூடியவை, சில சிகித்ஸையினுல் காலம் கடத்தத் தகுந்தவை, சில குணமடையாதவை என மூன்றுவகை எனவும் பிரிக்கப்படுகின்றன.

தனித்த (வேறு தோஷத்துடன் சேராத) தோஷத்தால் உண்டானவையும் வேறு வியாதி உபத்திரவங்கள் இல்லாதவையும், ஜீர்ண சக்தியும் புலனடக்கமும், பொருள்வசதியுமுள்ளவனுக்கு வருபவையும் வெகு நாட்பட்டதாக இல்லாதவையுமான வியாதிகள் வைத்யனின் நன்முறையிலுள்ள சிகித்ஸையினுல் குணமடையும். எதுவரை வைத்தியனின் சிகித்ஸை நடைபெறுகிறதோ அதுவரை தணிந்து பின்னர் உற்பத்தியாகுபவையும், தோஷங்கள் துவந்துவமாகி உண்டாகுபவையுமான வியாதிகள் சிகித்ஸையினுல், காலம் கடத்தத் தகுந்தவை.

தீவினைப்பயனுக உண்டானவையும், முத்தோஷங்களாலும் உண்டானவையும், வெகு நாட்பட்டவையும், வேறு வியாதி உபத்ரவங்களுடன் கூடியவையும், ஜீர்ண சக்தி நசித்து, பொருள் வசதி குன்றி இருப்பவனுக்கு வருபவையும் வைத்தியனின் சிகித்ஸையினுல் ஸ்வஸ்தமாகா.

சரீரம், மனம் இவ்விரண்டையும் கெடுக்கும் வியாதிகளில் சில தீவினைப்பயனுலும், சில வாதம் முதலிய தோஷங்களின் சீர்கேடாலும், சில இவ்விரண்டு காரணங்களாலும் உண்டாகின்றன. உதரம், மூலம், உன்மாதம், அபஸ்மாரம், ரக்த பித்தம், முடம், செவிடு, ஊமை, பிரமேகம், பவுத்திரம், பிரதரம், (பெரும்பாடு) வாத வியாதிகள், வெண்குட்டம், க்ஷயம், இரவில் கண் தெரியாமை, திமிரம், வாயிலும் மூக்கிலும் முளை, வீக்கம், அபசீ, புற்று, காகணகம், சங்ககம், புண்டரீகம், முதலிய குஷ்டங்கள். ரக்தார்புதம், விரண விஸர்ப்பம், கம்பவாதம், பக்ஷவாதம், கண்டமாலை, மென்னிப் பிடிப்பு, தண்டாபதானகம், வாதரக்தம் இந்த நோய்கள், பிறர் சொத்தை அபகரித்தல், பெரியோர் ஸ்திரீகளின் சேர்க்கை, முதலிய பாபங்களால் ஏற்படுகின்றன. இவை வைத்யனின் சிகித்ஸையால் குணமடையா. இவைகள் தானம். பிராணிகளிடத்தில் தயை, தேவதை, பசு முதலியவைகளிடத்தில் பக்தியும், வணக்கமும், ஜபம், தபம் இதுபோன்ற புண்ணிய கருமங்களால்தான் தணிவடையும். தனது சீர்கேட்டிற்குக் காரணங்களானவைகளால் கெட்ட வாதாதி தோஷங்கள் தன் நிலை விட்டு வெளியாகி ஆங்கு தடங்கலுற்று வியாதிகளை உண்டுபண்ணினுல் அவைகள் மருந்துகளாலும், சுத்தி முறைகளாலும் குணமடையும் தீவினைப்பயன், தோஷங்களின் சீர்கேடு இவ்விரண்டும் சேர்ந்து ஏற்படும் வியாதிகள் தானம் முதலியவைகளால் தீவினைப்பயன் நசித்ததும், ஔஷதங்களால் தோஷங்களின் கெடுதி அகன்றதும் ஸ்வஸ்தமாகின்றன. இது மிக சிரம ஸாத்தியம். ஆக ஔஷத சிகித்ஸை என்பது முன் செய்த தீவினைப் பயனுக வந்த வியாதிகளுக்காக அல்ல (சீர்கெட்ட வாதாதி தோஷங்களால் உண்டானவைகளுக்குத்தான்). ஆகையால் பல வகைப்பட்ட வாதாதிகளால் ஏற்பட்ட வியாதிகளால் துன்புறுபவர்களுக்கு, தோஷங்களின் நிலை, சரீர நிலை, தேசம், காலம், சரீரத்தின் திடம், நோயின் நிலை, மனுேபலம், வியாதியஸ்தனுக்கு ஏற்றது, உதவாதது, மருந்து, நோயாளியின் ஜீர்ண சக்தி, வயஸ், அவனது பிரகிருதி இவைகளைப் பரீக்ஷித்து சிகித்ஸை செய்யப்படவேண்டும்.

## சரீரக் கூறு, ஆரோக்கிய நிலே.

**மூன்று தோஷங்கள் :—** ஜீவனுள்ள சரீரத்தில் ஏற்படும் அசைவு, உணர்ச்சி இவ்விரண்டிற்கும் காரணமாயிருப்பது வாயு. சரீரத்தில் எந்நேரமும் இடைவிடாது கதகதப்பை (சூட்டை) அளித்து வருவது பித்தமாகும். சரீரத்திலுள்ள ஒவ்வொன்றையும் பிணைத்து புஷ்டி திருப்தி அளிப்பது கபமாகும். இவை ஒவ்வொன் றும் அதனதன் இயற்கை நிலேயில'ருந்துகொண்டு தேகத்தைத் தாங்கிக் காப்பாற்றுகின்றன.

**ஏழு தாதுக்களும், மலங்களும் :—** ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்ரம் என ஏழு தாதுக்கள். மலம், மூத் திரம் முதலியவை மலங்கள்.

இந்த தோஷங்கள், தாதுக்கள், மலங்கள், மூன்றும் சமமாக இருக்கும்போழுது ஆரோக்கியமும், இவை சம நிலேமை விட்டு மாறும்போழுது வியாதியும் உண்டாகின்றன. அதனல் இவைகளே சமநிலேமையில் பாதுகாப்பதே சிகித்ஸையின் ரகசியமாகும்.

**சிரைகளும், அவைகளின் காரியமும் :—** சிரைகள் நாபியி லிருந்தும் கிளம்பி, நாபிக்குக் கீழ் பத்தும், நாபியின் மேல் பத்தும், இரு பக்கங்களிலும் இரண்டிரண்டும் ஆக இருபத்து நான்கு பிரிவு களாகப் பிரிந்து உடல் முழுவதும் வியாபித்திருக்கின்றன. இவை களின் வழியாக வாத பித்த கபங்கள் சரீரம் முழுவதும் பரவுகின் றன. இந்த இருபத்து நான்கு மூல சிரைகளுக்கும் மெல்லிய துவாரமுள்ள எழுநூறு கிளே சிரைகள் இருக்கின்றன. அன்ன சத்தை கிரஹித்து சரீரம் 'முழுவதும் சஞ்சரிக்கும் இவைகளால் சரீரம் போஷிக்கப்படுகின்றது. ஜலப்பிரவாஹத்தை ஏற்று வரும் நூற்றுக்கணக்கான நதிகளால் ஸமுத்ரம் போஷிக்கப்படுவதுபோல்.

தலேயிலிருந்து கால் வரை மனித உடல் முழுவதும் வியாபித் துள்ளவையும், நாபியிலிருந்து நான்கு பக்கமும் வியாபித்துள்ளவை யுமான இந்த எழுநூறு சிரைகளால் சரீரமானது—தோற்கயிறுகளால் மிருதங்கம்போல் நன்கு வரிந்து கட்டப்பட்டிருக்கிறது. இவை களின் வழியாக தோஷங்கள் சரீரம் முழுவதும் பரவி சரீரம் முழு வதிலுமோ, அல்லது பாதி சரீரத்திலோ, அல்லது கைகால்களில் மாத்திரமோ, அல்லது தனிப்பட்ட அவயவத்திலோ வியாதியை உண்டுபண்ணுகின்றன.

ஹிருதயம், குதம் (ஆஸனவாய்), தொப்புள் இம்மூன்றும் மர்மங்களுள் பிரதானமானவை. ஏனெனில் மனதை கெடுக்கும் காமம்; குரோதம் முதலியவைகளும்; ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் ஹிருதயத்தில் இருக்கின்றன. தொப்புளிடத்தி லிருந்தும் சிரைகள் வெளிக்கிளம்பியுள்ளன. குதத்தில் பெருங் குடல் கட்டப்பட்டிருக்கின்றது. ஆக ஹிருதயம், நாபி, குதம் இம் மூன்றும் மர்மங்களில் முக்கியமானவை. சுருக்கமாக இவைகளே (பூதங்கள் முதல் மர்மங்கள் வரையிலுள்ளவை) சரீரமாக இருக் கின்றன. இவை சிறிதளவே இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

## தோஷங்களின் கோபத்திற்குக் காரணமும் பரிஹாரமும்.

சரீரத்தில் வாதம், பித்தம், கபம் இவைகள் கேடடைந்து பிரகோபமடைவதன் காரணம், பிரகோபமடைந்த தோஷங்களின் அறிகுறி அதற்குள்ள சிகித்ஸை இவைகளே இனி கூறப்பட வேண்டும்.

**வாதகோபத்திற்கு காரணங்கள் :—** வரட்சியளிப்பவை, கசப்பு, துவர்ப்பு, உரைப்பு இந்த சுவையுள்ளவை,பட்டினிகிடத்தல் மல மூத்திர வேகங்களைத் தடைசெய்தல், தேகப்பயிற்சி, புணர்ச்சி, நீச்சு, முரடர்களுடன் சண்டை, இரவில் கண்விழிப்பு, சாமை, புல்லரிசி, தினை முதலியவைகளை சாப்பிடுதல், இக்காரணங்களா லும், மழை கால ஆரம்பத்திலும், உணவு ஜீர்ணமான பிறகும் சரீரத்தில் வாயு பிரகோபமடையும்.

**பித்தகோபத்திற்கு காரணங்கள் :—** உரைப்பு, புளிப்பு, சுவை உள்ள பதார்த்தங்கள், உஷ்ணமானவை, வாதாஹிகள், (ஜீர்ண காலத்தில் புளிப்பாகுபவை) தீக்ஷ்ணமானவை, உப்பு சுவையுள்ளவை, கோபம், பட்டினி கிடத்தல், வெயிலில் இருத்தல் புணர்ச்சி, எள்ளு, ஆளிவிதை, தயிர், கள்ளு, காடி, புளிப்புகள் (கடலைப்புளிப்பு முதலியவை) இவைகளாலும், உணவு ஜீரண மாகும்போதும், சரத்ருதுவிலும், கிரீஷ்மருதுவிலும், நடுப்பகலிலும், இரவிலும் பித்தம் பிரகோபமடையும்.

**கப கோபத்திற்கு காரணங்கள் :—** எளிதில் ஜீர்ணமாகா தவை, இனிப்பானவை, மிகக்குளிர்ந்தவை, தயிர், பால், புது அரிசிச்சாதம், பாலிலும், எள்ளிலும், கருப்பஞ்சாறிலும் செய்த

பட்சணங்கள், உப்பு சுவைமிகுந்தவை முதலிய ஆகாரங்கள், பகலில் அதிகத்தூக்கம், பத்யமானதும், அபத்யமானதுமான ஆகாரங் களை ஒருங்கே உண்ணுதல், அளவில் குறைத்தும், கூடுதலாகவும் அளவின்றி காலத்திலும், அகாலத்திலும் உண்ணுதல், முதல் சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாகாதிருக்கையிலேயே மறுபடியும் உண்ணுதல். பால்பாயாஸம், அரிசிமாவில் பணியாரங்கள் இவை களை அதிகமாகச் சாப்பிடுதல் முதலியவைகளாலும், வஸந்த ருதுவி லும் பகல் இரவு ஆரம்பத்திலும் கபம் கோபமடைகின்றது.

வாயு முதலிய தோஷங்கள் முன் கூறப்பட்டுள்ள கோப காரணங்களால் கோபமடைந்து சரீரம் முழுவதும் பரவி சரீரத்தில் நோய்களை உண்டுபண்ணுகின்றன.

அவ்விதம் கோபமடைந்த வாத பித்த கபங்களில் அறிகுறியை சுருக்கமாகக் கூறுகிறேன். இவைகளைக்கொண்டு நோய்களை பரீக்ஷை செய்ய வேண்டும்.

**கோபமடைந்த வாதத்தின் அறிகுறிகள் :—** கண், தலை, நெற்றிப்பொட்டு, காதுகள், கண்களின் நடுபாகம், புருவங்கள், ஹிருதயம், தாடை, மென்னி, தோள், தலை எலும்புகளின் நடுசேந்தி, இவைகளில் வலி, இரவில் அதிகமாகவும், பகலில் குறைவாகவும், சிலசமயம் நின்றும் ஏற்படும். புஜங்கள், காலில் கெண்டை இவை களில் மரத்தும் சுருக்கு வலியுமுண்டாகும். இடுப்பு தொடை யிடுக்கு, கல்லீரல், மண்ணீரல், அக்ன்யாசயம் (க்லோம்: **Pancreas**) முதுகு அடிவயிறு, அண்டகோசம், மார்பு, மேல்வயிறு, அக்குள், தோள் முன்னெலும்பு, தொப்புள், மூத்திரப்பை, ஸ்தனங்கள், பிடரி, குதத்திலுள்ள மடிப்புகள், ஆண்குறி பெண்குறிப்பக்கம், இரு பார்சுவங்கள் இவைகள் கனத்து அதிகமாக வலிக்கும். நாக்கில் ருசியறியாமை, மலம் இறுகிப்போதல், உடல் இளைத்தல், இரவில் தூக்கமின்மை, தோல் வரட்சி, ஜீர்ணசக்தி ஒரு நிலையில் இல்லாமை இவை வாதம் கோபமடைந்ததின் அறிகுறிகளாகும்.

**கோபமடைந்த பித்தத்தின் அறிகுறிகள் :—** தலைசுற்றுதல் மயக்கம், வாய் உலர்ந்துபோதல், வியர்வை சரீரத்தில் கொதிப்பதி கரித்தல், மூர்ச்சை, முகம், கண்கள், நகங்கள், தோல், மூத்திரம், மலம் இவை மஞ்சளாக இருத்தல், பிதற்றல், மலமிளகிப்போகுதல் அரோசகம், ஜ்வரம், அதிகநாவரட்சி, குளிர்மையை அதிகமாக விரும்புதல் இவை பித்தகோபத்தின் அறிகுறிகளாகும்.

**கோபமடைந்த கபத்தின் அறிகுறிகள் :—** அவயவங்கள் கனத்தல், ஜீர்ணசக்தி குறைவு, வெளுத்தல், வாயில் நீர் ஊறுதல் சோம்பல், வாய் தித்தித்தல், காரணமில்லாமல் நமைச்சல், கண்கள் வெளுத்த மஞ்சள் நிறமடைதல், அதிகமாக மயிர் கூச்சமடைதல், புத்தி சக்திக்குறைவு, வாந்தி, இருமல், சளி, தூக்கம் முதலியவை, உதடுகள், தொண்டை, நாக்கு, பல்லீறுகள், உள்நாக்கு, மூக்கு, கண்கள், காது (உள்புறமும் வெளிப்புறமும்) இவைகளில் அரிப்பு இவை கப ரோகத்தின் அறிகுறிகள்.

இரண்டு தோஷங்கள் சேர்ந்து உண்டாகும் வியாதிகளில் சேர்ந்த இரு தோஷங்களின் அறிகுறிகளும் முத்தோஷ கோபத்தில் முத்தோஷக் குறிகள் சேர்ந்தும் காணப்படும்.

ஆக சரகம் முதலிய பெரும் நூல்களைப் பார்க்காத மந்தபுத்தி யுள்ள வைத்யனும் மேல் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள வாதாதி தோஷங்களால் உண்டாகும் அறிகுறிகளைக்கொண்டு வியாதிகளைத் தனித்து அறிய முடியும். புத்தியுள்ளவர்களுக்கோ இது மிக சுலபமாக இருக்கும்.

ரோகங்களின் அறிகுறிகளை நன்கு அறிந்துகொள்ளாதவன் எவ்விதம் மருந்துகளால் சிகித்ஸை செய்ய முடியும்? அதனால் சாஸ்திரத்தை நன்கு அறிந்தவனும், குறிகளை நன்கு புரிந்துகொண்டவனுமே ரோகங்களில் மருந்துகளால் ஆகக்கூடிய சித்தியைப் பெற முடியும்.

## தோஷ கோபங்களில் பொதுவான சிகித்ஸை.

மனிதனின் சரீரம் வியாதியடையும்பொழுது தோஷங்கள், தாதுக்கள், மலங்கள் இவைகளே காரணமாகின்றன. அதனால் அவைகளின் சீர்கேட்டை நன்கு அறிந்த பின்னர் மருந்துகளால் அவைகளை போக்கவேண்டும்.

கோபமடைந்த வாயு அனுவாஸனவஸ்தி, பரிஷேகம், நிரூஹ வஸ்தி, சாப்பிட்டவுடன் பலமளிக்கும் எளிதில் ஜீர்ணமாகக்கூடிய மாம்ஸரஸம் சேர்ந்த ஆகாரம் இவைகளால் தணிவடைகின்றது. திராக்ஷை, திரிபலை (கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி) சேவதைவேர் இவைகளாலும் லகுவான விரேசனத்தாலும், ரக்தம்

எடுப்பதாலும், நெய், பால், சர்க்கரை, மற்றும் இனிப்பான பதார்த்தங்கள் இவைகளால் பித்தம் தணிவடைகின்றது. கோபமடைந்த கபமும் பட்டினி கிடத்தல், வமனம், யவையன்னமுண்ணுதல், சிரோவிரேசனமான நஸ்யம், கட்பலாதி கணத்தைக் கல்க்கமாக்கி வாயில் அடக்கிக்கோள்ளுதல், வேன்னீர் உபயோகித்தல் இவைகளால் தணிவடைகின்றது.

இந்த விதமாக சுருக்கமாக தோஷங்கள் கோபமடையக் காரணங்கள். அவைகளின் அறிகுறி, அதற்குச் சிகித்ஸை இவைகள் கூறப்பட்டன. இனி சில மருந்துகணங்கள் மூலம் சிகித்ஸை கூறப்படுகின்றது.

**வாதஹரகணம் :—** சித்தரத்தை, நேரிஞ்சில், ஓரிலைவேர் மூவிலை வேர், அமுக்கருக்கிழங்கு, சிற்றாமணக்குவேர், பூனைக்காலி வேர், முக்கரட்டைவேர், சீந்திற்கோடி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, யானைக்குறுந்தோட்டி, தண்ணீர்விட்டான்கிழங்கு, இவை ராஸ்னாதி கணம் எனப்பட்டவை; வாதரோகங்களைப் போக்கவல்லவை.

*[பேராமுட்டி, யானைக்குறுந்தோட்டி இவ்விரண்டும் தமிழ் நாட்டில் நல்லதாகக் கிடைப்பதில்லை. பேராமுட்டி, சிற்றாமுட்டி இவைகளின் குணம் ஒரேவிதமானதென நிகண்டுகளில் கூறப்படுவதால் சிற்றாமுட்டியையே பேராமுட்டிக்குப் பதிலாக உபயோகிப்பர். பேராமுட்டி 4—8 அடி உயரமுள்ள செடி. இலைகளின் ஓரம் ரம்பம் போன்றது. மேல் ரோமம் உள்ளது. மஞ்சள் பூவும், சீப்பு போன்ற கோடுள்ள காயும், கருப்பு விதையும் உள்ளது என நிகண்டுவில் கூறப்படுகின்றது.* **Abutilon Indaecum** *என இதன் விஞ்ஞானப் பெயர். ஹிந்தி —* **कंघी** *நாகபலா எனும் யானைக்குறுந்தோட்டி பூமியிலேயே பாம்புபோல் படரும் செடி. இதன் அமைப்பும் பேராமுட்டியைப் போல்தான். சிறந்த ரஸாயன திரவ்யங்களில் ஒன்று. இதன் விஞ்ஞானப் பெயர்* **Sida Humilis.** *வடநாட்டு பெயர்கள்—* **भुई चिकणा, फरीदबूटी]**

## பித்த ஹரகணம்—காகோல்யாதிகணம்.

காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மஹாமேதா, ருஷபகம், ஜீவகம், ருத்தி, விருத்தி, அதிமதுரம், பத்மகம், கர்கடகசிருங்கீ, மூங்கிலுப்பு, சீந்திற்கோடி, காட்டுளுந்துவேர், காட்டுப்பயறுவேர், கீரைப்பாலை, தாமரைப்பூ, இவை காகோல்யாதிகணம். பித்த ரோகங்களைப் போக்கவல்லது.

[காகோலி முதலிய எட்டு சரக்குகள் அஷ்டவர்க்கம் எனப் பிரஸித்திபெற்றவை பல இடங்களில் பலவிதமாக இப்பெயர் களுடன் சரக்குகள் கிடைக்கின்றன. இவை நல்ல புஷ்டிகர மானதால் புஷ்டிகரமான பஞ்சாப் மிசிரி, சாலாமிசிரி முதலிய சில சரக்குகள் இப்பெயரில் விற்கப்படுகின்றன. முக்கியமாக காகோலி என்பது பஞ்சாப் மிசிரி எனவும், க்ஷீரகாகோலி என்பது சதாபர் எனும் சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு எனவும் வியவஹாரத் தில் உள்ளது. ஆனால் இவ்வெட்டிற்கும் பிரதிநிதியாக (காகோலி, க்ஷீரகாகோலி—அமுக்கராக்கிழங்கு, மேதா, மஹாமேதா— தண்ணீர்விட்டான் கிழங்கு, ஜீவகம், ருஷபகம் பால்முதுக்கன் கிழங்கு, ருத்தி, விருத்தி. நிலப்பனைக்கிழங்கு) நான்கு திரவியங் கள் அனேகமாக எல்லா வைத்யர்களாலும் உபயோகப்பட்டு வருகின்றன. பத்மகம் என்பதற்கு பதிமுகம் எனப்பொருள் கொண்டு, மலையாளத்திலிருந்து வரும் சிகப்பு நிறமுள்ள மரச் சக்கைகளை உபயோகப்படுத்துகின்றனர். ஆனால் வடதேசத்தார் இமாலயப் பிராந்தத்தில் கிடைக்கும் விரைமுச்சை மணமுள்ள ஒரு மரத்தை **पद्माख** எனப்பெயருள்ளதை பத்மகம் எனக் கூறுகின்றனர். அதன் விஞ்ஞானப்பெயர்—**Prunus Cerasoides** கர்கடகசிருங்கியும் இருவகை காணப்படுகின்றது. ஒன்று கடுக்காய்ப்பூ கடுக்காய் மரத்தின் பால் கட்டுவதால் உண்டாவது மற்றொன்று நண்டுக்கொம்பு ஆட்டுக்கொம்பு போன்ற உருவத் துடன் லேசாக மெல்லிய தோலுடனும், உள் பூச்சிக்கூடுடன் கூடியது. இதைக் கர்கடசிருங்கி (கர்கட—நண்டு, சிருங்கி— கொம்பு போன்றது) **काकड़ासींगी** (ஹிந்தி) எனக்கூறுவர்.]

## கபஹரகணம், பிப்பல்யாதிகணம்.

அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கோடிவேலிவேர், அதிவிடயம், சுக்கு, ஜீரகம், வட்டத்திருப்பி, பெருங்காயம், அரே ணுகம், மருள்வேர், கடுகு, கடுகுரோகிணி, மிளகு, மலைவேம்பு, வெட்பாலையரிசி, ஓமம், ஏலம், சிறுதேக்கு, வாய்விடங்கம், இவை பிப்பல்யாதிகணம். ஜடா அக்னியைத்தூண்டி, கப ரோகங்களைப் போக்கவல்லது.

**வாத பித்த ஹரகணம்—ஸ்திராதிகணம் :—** ஓரிலைவேர், மூவிலைவேர், முக்கரட்டை வேர், நெரிஞ்சில், சிற்றாமணக்குவேர்,

சிறுகாஞ்சூரி, பால்முதுக்கன்கிழங்கு, யானைக்குறுந்தோட்டி, தண்ணீர்விட்டான் கிழங்கு, இவை வாத பித்த ஹரகணமாகும். ஸ்திராதிகணம் எனப்பெயர்.

### வாதகபஹரகணம்—கட்பலாதிகணம்.

கட்பலம், கோரைக்கிழங்கு, மல்லி, சிறுதேக்கு, கர்கடக சிருங்கீ, பர்பாடகம், சுக்கு, வசம்பு, கடுக்காய், தேவதாரு, வாசனைப் புல், இவை கட்பலாதிகணம். வாத கபநோய்களைப் போக்க வல்லது.

*[கட்பலம் என்பது காய்பல் कायफल என ஹிந்தியிலும், Myrica Nagi என விக்ஞான பாஷையிலும் பிரஸித்தம் கசப்பும் துவர்ப்புமுள்ள சிவந்த கனமான பட்டை. இப்பெயரில் வட நாட்டில் கிடைக்கிறது இதன் காயில் பழச்சத்துக் குறைவாகவும் விதை பெரியதாகவுமிருக்கும். இதன்பட்டைத்தூள் மூக்கில் நஸ்யமிட உடன் தும்மல் வரும் இதன் பட்டை மருந்துகளில் அதிக உபயோகம்]*

**பித்த கபஹரகணம் : திராயந்திகாதிகணம்** — திராயந்தீ, வெட்பாலையரிசி, ஆடாதோடை, சீந்திற்கொடி, கடுகுரோகிணி, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, சிறுகாஞ்சூரி வேர், நாட்டுநிலவேம்பு, சரக்கொன்னை, பத்மகம், பர்பாடகம் இவை பித்த கபஹரகண மாகும்.

*[திராயந்தீ என்பதற்கு தரா அல்லது பம்பந்தரு என்றும் பூண்டு என்று பொருள். தமிழ்நாட்டில் வழங்கப்படுகின்றது. வடநாட்டில் ஈரானிலிருந்துவரும் गाफ़िस காபிஸ் எனும் யூனனி திரவ்யம் உபயோகிக்கப்படுகின்றது. சிலர் ஸிம்லா பக்கத்தி லுள்ள கனேக் மலையில் கடு (कडू) என்ற பெயராலும், ஜம்மு (காச்மீர்) பக்கத்தில் வைஷ்ணவீதேவீ சிகரத்தில் தீதா (तीता) என்னும் பெயராலும் கிடைக்கும் படரும் பூண்டுதான் திராயந்தீ எனக் கூறுகின்றனர். இது மிகவும் நல்ல குணமுள்ளதாகத்தெரி கிறது. இது கிடைக்குமிடம்-வைத்ய வித்யாதராஜீ வித்யாலங்கார், ஸோலன் போஸ்டு, ஸிம்லா ஜில்லா.]*

**திரிபலை :—** தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய் இம் மூன்றும் திரிபலையாகும். குஷ்டம், பிரமேகம், விரணம், கண்ட மாலை, வாய்—கண் நோய்கள் இவைகளில் சிறந்தது.

**திரிகடு :—** சுக்கு, திப்பிலி, மிளகு, இம்மூன்றும் திரிகடு எனப்பெயர். இது ஸந்நிபாதம் (ஜன்னி) முதலியவைகளால் பிரக்ஞை இழந்தவனுக்கு பிரக்ஞை உண்டாகச் சிறந்ததெனப் பெரியோர்களால் கூறுகின்றனர்.

**பஞ்சகோலம் :—** திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடி வேலிவேர், சுக்கு இவ்வைந்தும் பஞ்சகோலமாகும். இது அக்னி யைத்தூண்டி நல்ல பசியளிக்கவல்லது.

**பஞ்சவல்கலம் :—** இத்தி, ஆல், அத்தி, வேதஸம், அரசு, இவ்வைந்து மரங்களின் பட்டை, பஞ்சவல்கலம் எனப்படும். விரணம், வீக்கம் இவைகளைப் போக்கும்.

*[வேதஸம் என்பதற்கு நொச்சி—விசேஷமாக கருநொச்சி தான் நம்து வழக்கில் இருக்கின்றது. வடநாட்டில்* वेदमुश्क *பேத முச்க் எனும் புனுனி திரவ்யமே வேதிஸமென்க் கருதுகிறார்கள். பேதமுச்க் 15—30 அடி உயரமுள்ள ஒரு மரம். இதன் பட்டை கிராஹி—சீதள—ஜ்வரஹர குணங்கள் உள்ளது. இதன் பூவின் அர்க்கமும், பட்டை கஷாயமும் விஷமஜ்வரம், பித்தஜ்வரம், ஆம வாத ஜ்வரம், முதலியவைகளில் நல்ல குணமளிக்கிறது. நொச்சி—* **Vitex Negundo.** *பேதமுச்க்—* **Salix Caprea.]**

**ஏலாதிகணம் :—** ஏலம், குக்கில், தேவதாரு, குந்துருக்கம், (பரங்கி சாம்பிறாணி) முராமாம்சி, தூணியாங்கம், அரேணுகம், தகரம், சண்டைக்கிழங்கு, கச்சோரம், திரவியப்பட்டை, செஞ் சந்தனம், புலிநகம் (நாகணம்) சாம்பிறாணி, நான்முகப்புல், சோகை புல், குங்குமப்பூ, வாஸனை கோஷ்டம், மட்டிப்பால், பிரியங்கு, ஜடாமாம்ஸி கிராம்பு அகில், லவங்கப்பட்டை, பச்சிலை, நாக கேஸரம், இவை ஏலாதிகணமாகும். விஷம், கபவாத நோய்கள் இவைகளைப் போக்கவல்லது.

*[முராமாம்ஸீ, தூணியாங்கம், சண்டக்கிழங்கு, கச்சோலம், நான்முகப்புல், சோகைப்புல், இவை மலையாள தேசத்தில் கிடைப்பவை. சோரகம் என்பதற்கு கச்சோலம் என்ற திரவ்யம் மலையாளத்தில் கிடைக்கின்றது. ஹிமாலயப் பிராந்தியத்தில் கிடைக்கும் சோரகம் விசேஷ குணமும் மணமும் உள்ளதாகக் காணப்படுகின்றது. நாகணத்திற்கு பதில் புலிசிமிட என்ற நறு மணமுள்ள வேர் மலையாளத்தில் உபயோகிப்பது வழக்கம்.*

பிரியங்கு என்பதற்கு ஞாழல் பூ என்ற பூ மலையாளத்திலும் தமிழ் நாட்டிலும், வழக்கிலிருக்கின்றது. வடநாட்டில் கோதுமை உருவத்திலுள்ள கவுளா गवुला என்ற நல்ல வாஸனையும் புஷ்டியும் தரும் விதை உபயோகத்திலிருக்கின்றது. இது சிலாக்யம். நாககேஸரம் என்பதற்கு சிலர் சிறுநாகப்பூவையும் சிலர் நாககேஸர் என வட இந்தியாவில் கிடைக்கும் தாமரைக்குஞ்சரம் போலுள்ள நல்ல வாஸனையுள்ள மஞ்சளான திரவியத்தை உபயோகிக்கின்றனர். இந்த கணத்தில் அஷ்டாங்கஹ்ருதயம், ஸுச்ருதம் இவைகளிலுள்ள கணத்திரவ்யங்களைக்காட்டிலும், திரவ்யங்கள் குறைவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் குணத்தில் விசேஷமான பேதம் இருக்காது ]

**அஷ்டவர்க்கம்:—** காகோலி, க்ஷீரகாகோலி, ஜீவகம், ருஷபகம், மேதா, மகாமேதா, ருத்தி, விருத்தி, இவ்வெட்டும் அஷ்டவர்க்கமாகும். பித்த வியாதிகளைப்போக்கி நல்ல புஷ்டியளிக்கவல்லது

**திரிஸுகந்தி—சதுர்ஜாதம்:—** லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம் இம்மூன்றும் திரிஸுகந்தி எனவும், நாககேஸரம் சேர்ந்து அம்மூன்றும் சதுர்ஜாதம் எனவும் பெயர் பெறும். வாத கப நோய்களைப் போக்கி விஷ தோஷத்தைப் போக்கும். நல்ல காந்தியளிக்கும்.

**வருணாதிகணம் :—** மாவிலங்கை, சிகப்புப் பூவுள்ள முள் குறிஞ்சி, கருப்பு பூவுள்ள முள்குறிஞ்சி, முருங்கை, முள்முருங்கை கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, தர்ப்பை வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு, மருதம்பட்டை, புங்கம்பட்டை, வில்வவேர், முன்னைவேர் கோடிவேலி வேர், நாகபலா, காட்டு (பேய) முன்னைவேர், அழிஞ்சிப் பூ, கர்கடகசிருங்கி, வேலிப்பருத்தி, இவை வருணாதிகணமாகும். வாத கபங்களால் உண்டாகி உள்ளவயவங்களில் ஏற்பட்டு குத்து வலி, அதிகமாயுள்ள குல்மம்—வித்ரதி நோய்களிலும், மற்ற வாத கபப்பிரதான நோய்களிலும் மிகச்சிறந்த குணமளிக்கும்.

**மஹத்பஞ்சமூலம் :—** குமிழம்வேர், முன்னைவேர், பாதிரிவேர், பெருவாகைவேர், பில்வவேர் இவ்வைந்தும் பெரிய பஞ்சமூலமாகும் வாத கப நோய்களிலும் மேதஸ் அதிகமானவர்களுக்கும் அலஸக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் நல்ல குணமளிக்கும்.

**லகுபஞ்சமூலம் :—** கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, ஓரிலை, மூவிலை, நெரிஞ்சில் இவ்வைந்தின் வேர்களும் சிறுபஞ்சமூலமாகும். வாத பித்த நோய்களில் இது மிகவும் சிறந்தது.

**தசமூலம் :—** மஹத்—லகு பஞ்சமூலங்கள் சேர்ந்து தசமூலம் (பத்து வேர்கள்) ஆகின்றது. திரிதோஷங்களின் சீர்கேட்டிலும் முக்கியமாக வாத கப நோய்களிலும், காஸம்—ஸந்நிபாதம், தலைவலி சுவாஸம், விக்கல், இந்நோய்களிலும் மிகுந்த பலனளிக்கும்.

ஆக வைத்யன் குறிகளைக்கொண்டு, வாதநோய், பித்தநோய், கபநோய் என்பதுபோன்ற பாகுபாடுகளைக்கண்டு இந்த பதினெட்டு கணங்களைக்கொண்டு, தைலம், கிருதம், சூர்ணம், கல்கம், பத்து, ஸேகம் (கஷாயம் முதலியவைகளை உடல்மேல் ஊற்றுதல்) அவகாஹனம் (கஷாயம் முதலியவைகளில் உடல் முழுகியிருத்தல்) பானகம், ஆஸ்தாபனம், அனுவாஸனம், நஸ்யம், அஞ்சனம் இம் முறைகளில் தேவைக்கேற்ப ஔஷதங்களை அமைத்துக்கொண்டு சிகித்ஸை செய்யவேண்டும்.

ஆனி ஆடி மாதங்களில் வாயுவும், மார்கழி தை மாதங்களில் பித்தமும், சித்திரை வைகாசி மாதங்களில் கபமும் விருத்தியடைந்து அதனதன் வியாதிகளை அந்த காலங்களில் ஏற்படுத்துமாகையால் அந்நோய்கள் வராமலிருக்க அந்தந்த மாதங்களில் அந்த அந்த தோஷங்களின் சுத்தியைச் செய்துகொள்ளவேண்டும்.

சுத்தி முறையாவது—முதலில் பாசனம், பிறகு ஸ்னேஹவிதி, பிறகு கிரமமாக ஸ்வேதவிதி, வாந்தி, விரேசனம், அனுவாஸனம், நிரூஹணம், நஸ்யம் என்ற முறையில் சுத்தி செய்துகொள்ள வேண்டும்.

**பாசனம் :—** ஜடராக்னியின் பலவீனத்தால் ஜீர்ணமாகாத ஆகாரசத்தை ஜீர்ணம் செய்வது பாசனம். வாதரோகங்களில் சித்தரத்தை அல்லது சுக்காலும், பித்தரோகங்களில் பர்பாடகம் அல்லது ஆடாதோடையாலும், கப நோய்களில் வேம்பு அல்லது திரிபலையாலும், கஷாயம் செய்துகொண்டு சாப்பிட பாசனமாகும். இவ்விதம் பாசனமான பின்னர் வாத ரோகங்களில் ராஸ்னாதி தைலத்தாலும், பித்த ரோகங்களில் வாஸாதி கிருதத்தாலும், கப ரோகங்களில் ஷட்பல கிருதத்தாலும் ஸ்னேஹவிதி செய்துகொள்ள

வேண்டும். அல்லது வாத பித்த கப நோய்களில் முறையே பலாதி தைலம், மஹாதிக்த கிருதம், தான்வந்தரகிருதம் இவைகளால் ஸ்நேஹகர்மம் செய்துகொள்ளலாம். இருதோஷங்களாலும் முத்தோஷங்களாலும் உண்டான ரோகங்களில் வியாதிக்கேற்ப இந்த ஸ்னேஹங்களைக் கலந்துகொள்ளலாம்,

### ராஸ்னாதி தைலம்.

முன்சொன்ன ராஸ்னாதிகணத் திரவ்யங்களை வகைக்கு நான்கு பல அளவு (**16** தோலா) எடுத்து இடித்து இரு துரோண (**4096** தோலா—சுமார் **25** ½ பக்கா படி) ஜலத்தில் கஷாயமிட்டு நான்கில் ஒரு பங்கு மீதமாகச் சுண்டவைத்து வடிகட்டிக்கொள்ளவும். நல்லெண்ணெய் ஒரு பிரஸ்தம் (**256** தோலா எடை—சுமார் **120** அவுன்ஸ்) எடுத்து அதற்கு அரைக்கால் பங்கு ஏலாதிகணமும், காகோல்யாதிகணமும் (**32** தோலா) எடுத்து பால்விட்டுக் கல்கமாக அரைத்துக் கலக்கி முன் சொன்ன கஷயாம் சேர்த்து தைலம் காய்ச்சி எடுக்கவும். இது சிறந்த வாதஹர தைலமாகும்.

*[ஒரு துரோணம்—2048 தோலா; பிரஸ்தம்—128 தோலா பலம்—4 தோலா; என்ற அளவில் இந்த முறைகள் கணக்கிடப் படுகின்றன. திரவத்திரவ்ய அளவுமாத்திரம் பரிபாஷைப்படி இருமடங்காக்கிக் கொடுக்கப்படுகின்றது.]*

### பலா தைலம்.

சிற்றுமுட்டி வேர் **400** தோலா எடுத்து இடித்து இரு துரோண ஜலத்திலிட்டு கால் பாகம் மீதமாகக் கஷாயமாக்கிக்கொள்ளவும். அவ்விதமே தசமூலம் **400** தோலா எடுத்து இரு துரோண ஜலத்தில் கால்பாகம் மீதமாக கஷாயமாக்கிக் கொள்ளவும் இதில் நல்லெண்ணெய் **256** தோலா, பசும்பால் எண்ணெய்க்கு நான்கு பங்கு. ராஸ்னாதிகணம், காகோல்யாதிகணம், ஏலாதிகணம், இம்மூன்றும் **32** தோலா. இவைகளைப் பால்விட்டு அரைத்துக் கல்கமாக்கி எண்ணெய்யுடன் கலந்து பால், கஷாயம் இவ்விரண்டையும் சேர்த்து தைல பாகத்தில் எரித்து எடுத்துக்கொள்ளவும். உத்தமமான வாதஹர தைலமாகும்

**மற்றொரு முறை :-** நல்லெண்ணெய், **256** தோலா, கஷாயத்திற்காக சிற்றுமுட்டி **400** தோலா இடித்து இருதுரோண ஜலத்தில்

கால்பாகம் மீதமாகக்கூடிய மட்டும் எடுத்துக்கோள்ளவும். பசும் பால் நல்லெண்ணெய்க்கு நான்கு பங்கு; கல்கத்திரவ்யங்கள்:— கல் பாசி, சந்தனத்தூள், பச்சிலே, ஏலம், சீந்திற்கோடி, சித்தரத்தை, சிற்றுமுட்டி, நாகபலா ஜாடாமாஞ்சி, வாஸனேகோஷ்டம், தண்ணீர் விட்டான்கிழங்கு, தேவதாரு, அஸாருன், அகில், காகோல்யாதி கணம், இவை எல்லாம் சேர்த்து **32** தோலா, இவைகளை தைல மாக முறைப்படி எரித்து எடுத்துக்கோள்ளவும்.

**ஸஹசரதைலம் :—** முள்குறிஞ்சி **400** தோலா எடுத்து இருதுரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாக கஷாயமாக்கிக்கோள் ளவும். நல்லெண்ணே **2** பிரஸ்தம், பசும்பால் **8** பிரஸ்தம், இரண்டா வது பலாதைல முறையில் கூறப்பட்டுள்ள கல்பாசி முதலிய கல்க திரவியங்கள் **32** தோலா, இதை தைலமுறைப்படி தாயாரித்துக் கோள்ளலாம். நல்ல வாதஹர தைலம்.

**குடுசீதைலம்:—**முள்முறிஞ்சிக்குப் பதிலாக சீந்திற்கோடியை (**400** தோலா) கஷாயமாக்கி ஸஹசர தைலத்திற்குபோல் மற்ற நல்லெண்ணெய் முதலியவைகளை அவ்வளவிலேயே சேர்த்துக் காய்ச்சி தைலமுறைப்படி எடுக்கவும். இதுவும் நல்ல வாதஹர தைலம்.

**பிரஸாரிணீ தைலம் :—** முள்முறிஞ்சியின் ஸ்தானத்தில் முதியார் கூந்தலேக் கஷாயமிட்டு மற்றவைகளை ஸஹசர தைலத் தைப்போல் சேர்த்து தைலம் காய்ச்சி எடுக்கவும். இதுவும் நல்ல வாதஹரம்.

**தசமூல தைலம்:—** தசமூலம், யவையரிசி, கோள்ளு, இலந்தைப் பழம், இவை வகைக்கு **100** தோலா வீதம் எடுத்து இருதுரோணம் ஜலத்தில் கஷாயமிட்டு கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி பால் எண்ணெய் கல்கதிரவ்யம் முதலியவைகளை ஸஹசர தைலத்திற்குப்போல் அவ்வளவிலேயே சேர்த்துக் காய்ச்சி தைலம் வடிக்கவும். இதுவும் நல்ல வாதஹர தைலம்.

**வாஸா கிருதம்:—** பசுநெய் **2** பிரஸ்தம், ஆடாதோடை, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, நிலவேம்பு, திராயந்தீ, சீந்திற்கோடி, வெப்பாலேயரிசி, கடுகுரோகிணி, சிறுகாஞ்சூரி, திரிபலே, பர்படகம் இவை எல்லாம் **32** தோலா எடுத்துக் கல்கமாக்கி அடுப்பிலேற்றி

நெய் நன்கு பாகமடைவதற்காக சுத்த ஜலம் 8 பிரஸ்தம் சேர்த்து நெய் பாக முறைப்படிக் காய்ச்சி வடித்துக்கொள்ளவும். இது பித்த நோய்களைப் போக்கும்.

**ஷட்பல கிருதம்:—** பசுநெய் இரு பிரஸ்தம், சுக்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கோடிவேலிவேர், இந்துப்பு, அல்லது யவச்சாரம், இவை வகைக்கு 4 தோலா பாலிலரைத்துக் கல்கமாக்கி பசும்பால் 8 பிரஸ்தம், சுத்த ஜலம் 8 பிரஸ்தம் சேர்த்து நெய்பாக முறைப்படி காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். இது கப ரோகத்தில் சிறந்த ஸ்னேக மருந்து ஆகும். (இந்த யோகத்தில் சிலர் இந்துப்பையும், சிலர் யவச்சாரத்தையும், சேர்க்கின்றனர்.)

**மஹாஷட்பல கிருதம்:—** பசுநெய் 2 பிரஸ்தம், இஞ்சிச் சாறு 8 பிரஸ்தம், சுக்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கோடிவேலிவேர், இந்துப்பு, ஸௌவர்சல உப்பு, கந்தக வேடியுப்பு, யவச்சாரம், சத்திச்சாரம், புங்கம்பட்டை, இவை எல்லாம் சேர்த்து 24 தோலா இவை கல்கமாக அரைத்து நெய்யுடன் கலக்கி இஞ்சிச் சாறு சேர்த்து முறைப்படி நெய் காய்ச்சிக்கொள்ளவும். இது விசேஷமாக அக்னிதீப்தி உண்டாகும். நல்ல பசி உண்டாகும்.

**ஸ்வேத முறை:—** முக்கரட்டைவேர், சிற்றாமணக்குவேர், யவையரிசி, ஆளிவிதை, பருத்திவிதை, இவைகளைக் காடியிலிட்டு வேகவைத்து, அவைகளால் வேது (ஒத்தடம்) கொடுக்க எல்லாவித வாத நோய்களும் போம்.

**வமன முறை:—** மலங்காரைக்காய் கஷாயத்திலோ, வேப்பம்பட்டை கஷாயத்திலோ, வெட்பாலையரிசி, வசப்பு திப்பிலி, அதிமதுரம், இந்துப்பு இவைகளின் சூர்ணத்தை மேம்பொடியாகப் போட்டுச் சாப்பிட நன்கு வாந்தியாகும். இவ்விதம் வமனம் செய்விப்பதால் கப ரோகங்கள் போகும்.

**விரேசன முறை:—** வாதநோய்களில் பேதிக்கு சிற்றாமணக்கெண்ணெய்யும், பித்த நோய்களில் பிந்து கிரந்தமும், கப நோய்களில் குக்குலு மேம் போடியுடன் திரிபலா கஷாயமும் சாப்பிடத் தகுந்தவை

**நிரூஹண முறை:—** கோ மூத்திரம் 32 தோலா, சுமார் 13 அவுன்ஸ்) எடுத்து அதில் வெல்லம் 8 தோலா, புளியம்பழம் 8 தோலா, சோம்பு, இந்துப்பு, பெருங்காயம் மலங்காரைக்காய் இவை

களின் சூர்ணம் சிறிதளவு சேர்த்து எல்லாவற்றையும் கரைத்து, வடிகட்டி, (நிரூஹண பஸ்தி முறைப்படி) பஸ்தி (எனிமா) கொடுக்கவும்.

**அனுவாஸன முறை:—** நல்லெண்ணெய் **1** பங்கு, பசும் பால் **2** பங்கு, ஜலம் **4** பங்கு, திப்பிலி, அதிமதுரம், வாஸனை கோஷ்டம், வில்வவேர், வசம்பு, சோம்பு, புஷ்கரமூலம், கோடி வேலிவேர், பூலாங்கிழங்கு. மலங்காரைக்காய், தேவதாரு இவை களில் கல்கம் $\frac{1}{8}$ பங்கு, சேர்த்து தைல பாக முறைப்படி காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். மூலநோய், குல்மம், அதிஸாரம், கிராணி, கணுக்கால், குதம், ஆண்குறி, பெண்குறி, இடுப்பு முதலிய பிரதேசங்களில் வாயுவினால் ஏற்படும் வலிகளில் அனுவாஸன முறைப்படி பஸ்தி (எனிமா) கொடுக்கச் சிறந்தது.

**நஸ்ய முறை:—** முருங்கை விதை, துளசி விதை, சுக்கு, ஜீரகம், திப்பிலி, மிளகு, ஓமம், கரிஉப்பு, மல்லிவிதை, இவைகளை சம அளவில் சேர்த்து அரைத்து மூக்கில் நஸ்ய முறைப்படி நஸ்ய மிடவும்.

இவ்விதம் வாயு நோய் முதலியவைகளுக்கு பொதுவான சிகித்சை முறை கூறப்பட்டது. மேல் ஜ்வரம் முதலிய தனிப் பட்ட நோய் பிரிவுகளுக்கேற்ற மருந்துகளால் சிகித்சை முறை கூறப்படுகின்றது.

**லங்கனம்:—** ஜ்வரத்தின் ஆரம்பம், அதிலும் கபஜ்வரம், அஜீரணமான வயிற்றுப்போக்கு, ரக்தபித்தம், கபத்தினால் ஏற்பட்ட வாந்தி, தலைவலி, கண்ணோய்கள், விஸூசிகா (காலரா போன்ற அதிஸாரம்) விஸ்போடகம் (அம்மை போன்றவை) வாய்நோய்கள், அஜீர்ணம் முதலிய நோய்களிலும், பிரஸவித்தவுடனும், அடி காயம் பட்டவுடனும், பலத்திற்கேற்றவாறு லங்கனம் (பட்டினி கிடப்பது) நல்லது.

**லங்கனம் நன்றாக அமைந்ததற்கறிகுறி:—** மலம், மூத் திரம், அபானம் இவை ஒழுங்காக வெளியேற்றுதல், சரீரம் லகுவாக இருத்தல், சோம்பல், சிரமம், அகலுதல், சுருசுருப்பு, ஏப்பம், வாய், வயிறு, ஹிருதயம், இவை சுத்தமாயிருத்தல், வியர்வை ஏற்படுதல், சாப்பாட்டில் விருப்பம் ஏற்படுதல் இவையாகும்.

இவ்விதம் லங்கனம் நன்கு ஏற்பட்டபின் நோயாளியின் தோஷங்கள்; தேகம், தேகநிலே, பலம், காலம், வியாதி நிலே, ஒத்து கொள்வதும், ஒத்துக்கோள்ளாததும் இவைகளை நன்கு தீர ஆராய்ந்து பிறகு பத்தியமும் ஔஷதமும் குறிப்பிட வேண்டும்.

**பத்தியமுறை:—** அறுபதாங் குறுவை, சிகப்பு சம்பா இவைகளாலான அன்னத்தை நெய் வேகவைத்த பயத்தம் பருப்பு துவரம்பருப்பு இவைகளுடன் சேர்த்தும்; கோதுமை கஞ்சி, யவையரிசி சத்துமா இவைகளை ஓமம், இந்துப்பு, நெய் இவைகளுடனே மோருடனே சேர்த்தும்; சீவல் பக்ஷி, மான், கருப்பு தித்திரி, வெண் தித்திரி, மயில், ஆமை, உடும்பு, முயல், இருவாய் சத்தான் இவைகளின் மாம்ஸரஸம், மாம்ஸம், மாம்ஸத்தினுலான லேகியம் இவைகளை தித்திப்பு மாதுளேப்பழத்துடன் சேர்த்தும்; சர்க்கரையுடன் சேர்த்துக் காய்ச்சிய பாலும், கடலே, இளம் முள்ளங்கி, சிறுகீரை சிவப்புக்கீரை, புடலிலே, சக்ரவர்த்திக்கீரை, தூதுவளே, கத்திரி பூஷணிக்காய் இக்கரிகாய்களும் சேர்த்து சமைக்கப்படும் ஆகாரங்கள் பத்தியமாகும். இவ்வாகாரங்களை சாப்பிடுபவனுக்கு நோய்கள் வராது.

எந்த ரோகிக்கு எது உகந்ததோ அதை வைத்யன் அவனுக்கு பத்தியமாகக் கோடுக்கவேண்டும், இவ்விதம் ஏற்றதான பத்யமுறையைக் கடை பிடிக்கும் நோயாளிக்கும் நோயில்லாதவனுக்கும் நோய்களின் பீடை விலகும்.

இந்நூலில் கீழ்கண்ட கிரமப்படி வியாதிகளுக்கு சிகித்ஸை கூறப்படுகின்றது கிரமமாக ஜ்வரம், அதிஸாரம், கிரகணீ, அர்சஸ் பகந்தரம், வீக்கம், உதரம், குல்மம், வித்திரதி, கண்டமாலே, விஸ்போடகம், யானேக்கால், வாதரக்தம், விஸர்ப்பம், குஷ்டம், வெண் குஷ்டம், பிரமேகம், பாண்டு, சுவாசம், காஸம், ரக்தபித்தம், நாவரட்சி, வாந்தி, விக்கல், சூலம், மலபந்தம், நீர்சுருக்கு, க்ஷயம் கிருமி இவைகளின் சிகித்ஸை காய சிகித்ஸை என்ற பிரிவிலும் பிறகு சாலாக்யம் (கண், மூக்கு, காது, தோண்டை நோய்கள்) சல்யம் ( ஸர்ஜரி ) பூதவித்யை, பால சிகித்ஸை, விஷ சிகித்ஸை, ரஸாயனம், வாஜீகாணம் இவைகளும் கிரமமாக கூறப்படுகின்றன.

**ஜ்வர சிகித்சை :—** சோம்பல், வியர்வை இன்மை, அரோசகம், தூக்கமின்மை, வயிற்று உப்புசம், பசியின்மை, உடல் முழுவதும் வலி இவைகளுடன் ஜ்வரமிருந்தால், சரீரத்தில் ஆகார ரஸம் ஜீர்ணமாகாத நிலையிலிருப்பதாக அறிந்துகொண்டு, உபவாஸம் வென்னீர் அருந்தல் இவைகளால் சிகித்சை செய்யவும்.

நாவரட்சி, வாந்தி, எரிச்சல், முகம் காய்ந்து போதல் இவைகளுடன்கூட ஜ்வரமுள்ளவனுக்கு விளாமுச்சம் வேர், பர்பாடகம், பத்மகம், செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர் ஆக இந்த ஷடங்கம் என்ற ஆறு திரவ்யங்களைச் சேர்த்துத் தயாரித்த சீத கஷாயத்தின்மூலம் சிகித்ஸை அளிக்கவேண்டும்.

[*சீத கஷாயம் தயார் செய்யும் முறை ;— விளாமுச்சம்வேர் முதலியவைகளை சமனெடையாகச் சேர்த்து இரண்டு தோலா திரவ்யத்தை இரு பிரஸ்த ஜலத்தில் கஷாயமாக்கிப் பாதி மீதமாக காய்ச்சி எடுத்து வடிகட்டி நன்கு குளிர்ந்தவுடன் கொடுக்கவும்.*]

ஜ்வரமுள்ளவன் தனது பலத்திற்கேற்ப உபவாசமிருந்து ஆகார ரஸம் நன்கு ஜீர்ணமானவுடன் நல்ல பசி ஏற்பட்டபிறகு பத்திய ஆகாரமும், மருந்தும் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும்.

ஜீரகம் மல்லிவிதை, கண்டங்கத்திரி, நெருஞ்சில் இவைகளின் கஷாயத்தில் தயார்செய்த அறுவதாங் குறுவைக் கஞ்சியையோ, சிறுகாஞ்சூரிவேர், கண்டங்கத்திரி இவைகளின் கஷாயத்தில் தயார் செய்யப்பட்ட சம்பா அரிசிக் கஞ்சியையோ சாப்பிட வேண்டும்.

[*கஞ்சி (யவாகூ) தயாரிக்கும் முறை :— கஷாய திரவியங்களை சமனெடையில் ஒன்று சேர்த்து 4 தோலா எடுத்து நான்கு பிரஸ்த ஜலத்திலிட்டுப் பாதி மீதமாகும்வரை காய்ச்சி வடிகட்டி அதில் 32 தோலா அரிசி போட்டு கஞ்சி காய்ச்சிக்கொள்ளவும். சுகமாக ஜீர்ணமாவதன் பொருட்டு பெருங்காயம் ஒரு உளுந்தளவு சேர்த்துக்கொள்வதுமுண்டு.*]

குளிர், தூக்கம், அரோசகம், உடல் கனத்தல் இவைகளுடன் கூடிய கப ஜ்வரத்தில் பயத்தம் பருப்பு ஜலமும் அன்னமும் கொடுக்கலாம், நாவரட்சி, வாந்தி, எரிச்சல், இவைகளுடன் கூடிய

அதிகமான பித்தத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில் நெல் பொரி, சர்க்கரை தேன் சேர்த்து ஆகாரமாகக் கொடுக்கலாம். அதிகவலி, நடுக்கத் துடன் கூடிய வாத ஜ்வரத்தில் (ஆகார ரஸம் ஜீர்ணமாகியிருந்தால்) சீவல் பக்ஷி, மான், மயில், தித்திரி இவைகளின் மாம்ஸரஸத்தில் (சூப்பில்) மாதுளம்பழச்சாறு சேர்த்து கொடுக்கலாம்.

பிறகு (ஆமம் ஜீர்ணமாகியபின்) வாத ஜ்வரத்தில் சுக்கு கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சூரி, சீந்தில்கொடி இவைகளையும் பித்த ஜ்வரத்தில் நிலவேம்பு, சிறுகாஞ்சூரி, கோரைக்கிழங்கு, பர்பாடகம் இவைகளையும், கபஜ்வரத்தில் ஆடாதோடை, கோரைக்கிழங்கு, சுக்கு, சிறுகாஞ்சூரி இவைகளையும் கஷாயமாக்கிக் கொடுக்க ஜ்வரமிறங்கும்.

சுக்கு சீந்திற்கொடி ஆடாதோடை, கண்டங்கத்திரி வேர் இவைகள் வகைக்கு ஒரு தோலா சேர்த்து இடித்து **64** தோலா ஜலத்தில் கஷாயமிட்டுக் கால்பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி **2–4** குந்துமணி எடை திப்பிலிச் சூர்ணம் மேம்பொடி போட்டு சாப்பிட எல்லா ஜ்வரங்களும் குணமாகும்.

கடுகுரோகிணி, கடுக்காய், கண்டந்திப்பிலி, சரக்கொன்னைப் புளி, கோரைக்கிழங்கு, இவைகளைக் கஷாயமிட்டு சாப்பிட வலி யுடன் கூடியதும், அன்னரஸம் ஜீர்ணமாகா நிலையிலுள்ளதுமான வாத கப ஜ்வரம் விலகி நல்ல பசியும் ஜீர்ணமுமுண்டாகும்.

திப்பிலி, கொடிவேலி வேர், கடுக்காய், நெல்லிமுள்ளி இவை களால் ஆன கஷாயம் எல்லா ஜ்வரங்களையும் போக்கி நல்ல ஜீர்ண சக்தியை உண்டாக்கும்.

கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, ஆடாதோடை இவைகளின் கஷாயம் திப்பிலி மேம்பொடியுடன் கொடுக்கப்பட ச்வாஸ காஸங் களுடன் கூடிய ஜ்வரத்தைப் போக்கும்.

சிறுகாஞ்சூரி, வெட்டிவேர், கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளை சமனெடை சேர்த்தெடுத்து (ஒரு தோலா அளவு) வென்னீரில் அரைத்து **8** தோலா அளவு வென்னீரில் கரைத்துத் துணியால் வடிகட்டி சூடோடு சாப்பிட நல்ல அக்னிபலமுண்டாகி ஜ்வரம் தணியும்.

சீந்திற்கோடி, பத்மகம், சேஞ்சந்தனம், வேப்பம்பட்டை, மல்லிவிதை இவைகளின் கஷாயம் நாவரட்சி, எரிச்சல், அரோசகம் இவைகளுடன் கூடிய பித்தகப ஜ்வரத்தைப் போக்கும்.

முத்தோஷங்களாலும் ஏற்பட்ட (ஸந்நிபாத) ஜ்வரத்தில் வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, தேவதாரம், கடுகுரோகிணி, திரிபலை, மஞ்சள், கண்டங்கத்திரி, பேய்புடல் இவைகளின் கஷாயமோ, தசமூலத்தின் கஷாயமோ திப்பிலி மேம்போடியுடன் சாப்பிட ஜ்வரம் தணியும்.

விஷமஜ்வர (முறை ஜ்வர) ங்களில் பேய்புடல், அதிமதுரம், கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு கடுக்காய் இவைகளின் கஷாயமோ; திரிபலை சீந்திற்கோடி ஆடாதோடை இவைகளின் கஷாயமோ கோடுக்கச் சிறந்தது. மூன்றும் நாள் வரும் ஜ்வரத்தில் விசேஷமாக சுக்கு, விளாமுச்சம் வேர்; கோரைக்கிழங்கு, மல்லி, திப்பிலி, சந்தனம் இவைகளின் கஷாயத்தை தேன் சர்க்கரை சேர்த்துக் கோடுக்கலாம். நான்காம் நாள் வரும் ஜ்வரத்தில் கடுக்காய் மூவிலைவேர், சுக்கு, தேவதாரு, நெல்லிமுள்ளி, ஆடாதோடை இவைகளின் கஷாயத்தை தேன் கற்கண்டு சேர்த்து சாப்பிட ஜ்வரம் தணியும்.

மூன்று—ஐந்து அவ்விதமே ஏழு அல்லது பத்து திப்பிலிகள் வீதம் தினம் அளவை அதிகரித்துப் பிறகு குறைத்து சாப்பிடவும். பிப்பலி வர்த்தமானம் என்ற இந்த முறையை ஸேவிப்பவனுக்கு சுவாஸம், காஸம், ஜ்வரம், உதரம், அர்சஸ், வாதரக்தம், க்ஷயம் இவை ஏற்படாது.

*[அதாவது ரோகியின் பலத்திற்கேற்றவாறு முதல்தினம் 3 திப்பிலிகள், இரண்டாம் நாள் 6 திப்பிலிகள், மூன்றும் நாள் 9 திப்பிலிகள் இவ்விதம் 10 நாள் வரை கிரமமாக அளவை அதிகரிக்கச்செய்து பிறகு தினம் மூன்று திப்பிலிகள் வீதம் திப்பிலிகளைக் குறைத்து 19-வது நாள் முடித்தல்தான் பிப்பிலீவர்த்தமானம். இவ்விதம் 5-7-10 திப்பிலிகள் வீதம் அளவை அதிகரிப்பதும் குறைப்பதும் வழக்கம், திப்பிலி மிகவும் அத்யுஷ்ணமானதால் இக்காலத்தில் இவ்வளவில் மருந்தை சாப்பிடுவது உசிதமல்ல. தேக பலத்திற்கேற்றவாறு அளவு விஷயத்தில் மிகக்கவனம் செலுத்துவது அவசியம்]*

இவ்விதம் (லங்கனம் வேன்னீர், கஞ்சி, பாசன கஷாயங்கள் இவைகளைச் சாப்பிடுவதால்) கபம் குறைக்கப்பட்டு ஜீர்ண ஜ்வர மானபின், வாதம் கொஞ்சம் அதிகரிக்க ஆரம்பித்ததும், வாதம் முதலிய தோஷங்களின் சீர்கேட்டைப் போக்கும் திரவ்யங்கள்பால் இவைகளால் தயார் செய்யப்பட்ட கிருதங்கள்—ஷட்பல கிருதம்—மஹாஷட்பல கிருதம் இவைகளை உபயோகிக்க வேண்டும்,

**ஷட்பல கிருதம் :—** சுக்கு, கோடிவேலி வேர், செவ்யம், திப்பிலி, கண்டந்திப்பிலி, யவச்சாரம், இவை வகைக்கு **4** தோலா இவைகளைக் கல்கமாக்கி நெய் இரண்டு பிரஸ்தத்தில் கலக்கி **8** பிரஸ்தம் சுத்த ஜலம்விட்டு முறைப்படி காய்ச்சப்பட்ட நெய் ஷட்பல கிருதமாகும். ப்லீஹோதரம், ஜ்வரம், அர்சஸ், குல்மம், இந்நோய் களில் நல்ல குணமளிக்கும்.

**மகாஷட்பல் கிருதம் :—** புங்கம்பட்டை, கோடிவேலிவேர், பஞ்சகோலம், ஸௌவர்சிலை உப்பு, ஜீரகம், கருஞ்ஜீரகம், வெடியுப்பு யவச்சாரம், கந்தக வெடியுப்பு, பெருங்காயம், கோட்டைக்கரந்தை, இந்துப்பு, இவை வகைக்கு **2** தோலா எடுத்துக் கல்கமாக்கி **2** பிரஸ்தம் நெய்யில் கலக்கி அத்துடன் காடி **8** பிரஸ்தம், இஞ்சிச் சாறு **8** பிரஸ்தம் சேர்த்து முறைப்படி நெய் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இதைச்சாப்பிட அரோசகம், பசியின்மை, ப்லீஹோ தரம் சுவாஸம் இவைகள் போகும்.

*[முன் ஸ்னேஹ விதியில் கூலப்பட்டுள்ள ஷட்பல கிருதத் தில் பாலும் இந்துப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு ஜலத்தில் பாகம். மஹாஷட்பல கிருதத்தில் முன் கூறப்பட்டுள்ளதைக் காட்டிலும் இதில் இருஜீரகங்கள், யவக்ஷாரம், வெடியுப்பு, பெருங் காயம், கொட்டைக்கரந்தை, காடி இவை அதிகமாக சேர்க்கப் படுகின்றன என்ற மாறுதல் கவனிக்கவேண்டியது. அதனுல் ஜ்வரத்தில் கொடுக்க இவ்விரு கிருதங்களே உசிதமென இந் நூலாசிரியர் அபிப்பிராயப்படுகிருர் எனத்தெரிகிறது ]*

**பிப்பல்யாதி கிருதம் :—** திப்பிலி கீழ்காய்நெல்லி, கோரைக் கிழங்கு, அதிவிடயம், முள்ளுக்கத்திரிவேர், மூவிலைவேர், நன்னரி, சுக்கு, விளாமுச்சம் வேர், வேப்பாலையரிசி, வில்வவேர், கடுகு ரோகிணி, திராயந்தீ, சந்தனம், திராக்ஷை, நெல்லிமுள்ளி, கோடி வேலிவேர், இவை வகைக்கு ஒரு தோலா எடுத்துக்கல்கமாக்கி,

நெய் இரண்டு பிரஸ்தத்தில் கலக்கி ஜலம் 8 பிரஸ்தம் சேர்த்து முறைப்படி காய்ச்சி வடிகட்டிக் கோள்ளவும். காஸம், சுவாஸம், ஹலீமகம், அரோசகம், வாந்தி, குல்மம், ஜ்வரம் முதலிய ரோகங்கள் போகும்.

**லாக்ஷாதி தைலம்.**

நல்லெண்ணெய் இரண்டு பிரஸ்தம், கோம்பரக்கு ரஸம் இரு பிரஸ்தம், தயிர் தெளிவு 8 பிரஸ்தம், மருள் வேர், கோரைக்கிழங்கு தேவதாரு, கடுகு ரோகிணி, அதிமதுரம், அமுக்கறுக்கிழங்கு, சித்தரத்தை, அரேணுகம், சோம்பு, சந்தனம், கோஷ்டம், மஞ்சள், இவை எல்லாம் சேர்த்து 32 தோலா எடுத்துக் கல்கமாக்கி எல்லா வற்றையும் கலந்து தைலம் காய்ச்சி வடிகட்டிக்கோள்ளவும். ஜீர்ண ஜ்வரத்தைப் போக்குவதில் நிகரற்றது

*[கொம்பரக்கு ரஸம் அல்லது சாயம் எடுக்கும் விதம் :— 64 தோலா அளவு கொம்பரக்கு எடுத்து இடித்து கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் சேர்த்து ஊரவைத்துக் கசக்கி அதன் சாயம் ஜலத்தில் நன்கு எறியவுடன் அந்த ஜலத்தை வடிகட்டிக்கொள்ளவும். இவ்விதம் இரு பிரஸ்த ஜலத்தில் அதன் சாயம் பூரவும் ஜலத்தில் ஏருமாறு செய்துகொள்ளவேண்டும் வேறுமுறை:– கொம்பரக்குடன் அதற்குப் பத்தில் ஒருபங்கு லோத்திரப்பட்டை, 100-ல் ஒருபங்கு சத்திச்சாரம், கொஞ்சம் இலந்தை இலை இவைகளை 16 பங்கு ஜலத்திலிட்டு நாலில் ஒருபங்கு மீதபாகக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். இதுவும் கொம்பரக்கு ரஸம் எடுக்க ஒரு சிறந்த வழி ]*

**ஷட்குந்தர தைலம்.**

ஸர்ஜிக்ஷாரம், மஞ்சிட்டி, கோஷ்டம், சுக்கு, கோம்பரக்கு, மஞ்சள், மருள்கிழங்கு இவை வகைக்கு சமனேடை சேர்த்து 32 தோலா எடுத்துக் கல்கமாக்கி இரண்டு பிரஸ்தம் நல்லெண்ணெயில் கலக்கி 12 பிரஸ்தம் மோர் விட்டு தைல முறைப்படி காய்ச்சிய தைலம் ஜீர்ண ஜ்வரத்தைப் போக்கவல்லது.

**அதீஸார சிகிச்சை.**

ரத்தத்துடனும், பால் அவயவங்கள், ஆஸனவாய்,துடையிடுக்கு மூத்திரப்பை இவைகளில் வலியுடனும், வாயுவினால் மலப்ர

விருத்தி தடைபட்டும் ஏற்படும். ஆமா (அஜீர்ண) திஸாரத்தில் சீர்கேடடைந்த வாத பித்த கபங்களின் நிலைக்கேற்றபடி உபவாஸம் கஞ்சி முதலியவைகளை யருந்துதல் முதலிய பத்திய முறைகளால் முதலில் சிகித்ஸை செய்யவேண்டும்.

பஞ்சகோல கஷாயத்தில் தயார் செய்த அரிசிக்கஞ்சி அல்லது எளிதில் ஜீர்ணமாகக்கூடியதும் மருந்து திரவியங்களால் பக்குவம் செய்யப்பட்டதுமான நெற்பொறிக்கஞ்சி, லகுவான அன்னவகை, தித்திப்பு மாதுளைச்சாறு சேர்த்து தயாரிக்கப்பட்ட கஞ்சி மற்றும் இதுபோன்ற ஆமாதிஸாரத்தைப் போக்கக்கூடிய பத்தியமுறைகளால் முதலில் சிகித்சை செய்யவேண்டும்

சுக்கு, கடுககாய், கோரைக்கிழங்கு, வசம்பு, அதிவிடயம், தேவதாரு, இவைகளின் கஷாயமும், சுக்கு கோரைக்கிழங்கு, அதிவிடயம் இவைகளின் கஷாயமும், சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், சீந்திற்கொடி இவைகளின் கஷாயமும் ஆமாதிஸாரத்தைப் போக்கவல்லவை.

*[முதல் கஷாயத்திற்கு மற்ற நூல்களில் தேவதார்வாதி ஷட்கம் எனவும், இரண்டாவது கஷாயத்திற்கு திரிகார்ஷிகம் எனவும், மூன்றாவதற்கு சாதுர்பத்திரம் எனவும் பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது.]*

வெட்பாலையரிசி, அதிவிடயம், கோரைக்கிழங்கு, வில்வப்பிஞ்சு வெட்டிவேர் இவைகளின் கஷாயம் வலி, ரக்தம், அஜீர்ணம் இவைகளுடன் கூடிய வயிற்றுப் போக்கில் சிறந்தது.

வெட்பாலையரிசி, கடுக்காய், அதிவிடயம், ஸெளவர்ச்சில உப்பு வசம்பு, பெருங்காயம் இவைகளின் கஷாயம் கலிங்க ஷட்கம் எனப்பெயர் கொண்டது. ரக்தாதிஸாரம்; வலி இவைகளைப் போக்கும்.

வில்வப் பிஞ்சு, யவையரிசி, நெரிஞ்சில், சிற்றாமணக்கு, சீந்தில் இவை வகைக்கு சமனெடை சேர்த்து பதினாறு பங்கு காடியில் கலந்து அத்திரவத்தில் கடுக்காய்களை வேகவைத்துக் காயவைக்கவும். பிறகு அதை தேனுடன் சாப்பிட மலம் கட்டி வெளிப்படுவேதுடன் வலி ரத்தம் உள்ள ஆமாதிஸாரத்தில் நல்ல குணமளிக்கும்.

சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சீந்திற்கோடி, நில வேம்பு, வேட்பாலையரிசி இவைகளின் கஷாயம் ஜ்வரம் வலியுடன் உள்ள ஆமாதிஸாரத்தைப் போக்கும்.

கோரைக்கிழங்கு, இலவம்பிசின், லோத்திரப்பட்டை, காட்டகத்திப்பூ, பில்வப்பிஞ்சு, வேட்பாலையரிசி இவைகளைச் சூர்ணம் செய்து வெல்லம் மோருடன் கலக்கிச் சாப்பிட நதிவேகம்போன்ற கடுமையான பேதியும் நிற்கும்.

கோரைக்கிழங்கின் கஷாயம் நன்கு ஆறியவுடன் தேன்சேர்த்து சாப்பிட கடும் அதிஸாரம் நிற்கும். அல்லது வேட்பாலைப்பட்டை, கஷாயத்தில் வெல்லத்தை பாகுசெய்து அம்பஷ்டாதிகணம் பிப்பல் யாதிகணம் இவைகளின் சூர்ணமும் தேனும் சேர்த்துக் கிளறிய லேகியமும் பக்வாதிஸாரத்திற்கு ஏற்றது.

*[அம்பஷ்டாதிகணம் :— வட்டத்திருப்பி, அதிமதுரம் தொட்டாச்சுருங்கி, படுகரணை, புரசு, சிறுகாஞ்சூரி, லோத்திரப் பட்டை, காட்டகத்திப்பூ, வில்வப்பழசத்து, பெருவாகை, தாமரைகுஞ்சலம் இவையாகும். விரணங்களை ஆற்றவும், பக்வ அதிஸாரத்தைப் போக்கவும் சிறந்தது.]*

பெருவாகைப் பட்டையை அரிசி கழுவிய ஜலத்தால் அரைத்து கல்கமாக்கி அதன்மேல் குமிழ இலையைச்சுற்றி மண் பூசி அவித்தெடுத்து உள் கல்கத்தின் சாற்றை தேன் சேர்த்து சாப்பிட அதிஸாரம் குணமாகும்.

*[வலியில்லாமல் பக்வமாயும் பலநிறமுள்ள அதிஸாரத்தில் இது மிகச் சிறந்தது]*

தித்திரிபக்ஷியின் இறகுகளைப் பிய்த்து, குடல் மலம் அலகு இவைகளை அகற்றி, அதன் வயிற்றில் பஞ்சவல்கலத் திரவியங்களின் கல்கத்தை நிரப்பி, மேல் குமிழ இலைகளால் சுற்றி மண் கவசமிட்டு கருங்காலித்தணலிலிட்டு அவித்தெடுத்து அதன் சாறு பிழிந்து ஆற வைத்துத் தேன் சேர்த்து சாப்பிட அதிஸாரம் நிற்கும்.

### கிரகணீ சிகித்சை.

வலியுடன் கூடிய கிரகணியில் அதிஸாரத்தில் கூறியுள்ள பாசன கஷாயங்களால் அஜீர்ணம் பக்வமடைந்ததும், பிறகு

கோரைக்கிழங்கு—இலவம்பிசின் முதலிய திரவ்யங்கள் சேர்ந்த யோகங்களால் மலத்தை இறுக்கவேண்டும். பிறகு பின்கூறப்படும் கல்யாணக கிருதம் போன்ற பசி தூண்டும் மருந்துகளால் சிகித்ஸை செய்யவேண்டும்.

**பூநிம்பாதி சூர்ணம் :—** நிலவேம்பு, வெட்பாலையரிசி, திரிகடு கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி இவை வகைக்கு ஒருதோலா, கொடிவேலிவேர் **2** தோலா, வெட்பாலைப்பட்டை **16** தோலா, இவைகளைத் தூள்செய்து வெல்லம் கரைத்த ஜலத்துடன் சாப்பிட கிராணி நோய் தீரும்.

[*அளவு—வேளைக்கு சுமார் வீசம் தோலா முதல் கால்தோலா வரை.*]

**கிரந்திகாதி சூர்ணம்:—**கண்டந்திப்பிலி, திரிகடுகம், இந்துப்பு கந்தக வெடியுப்பு, ஸௌவர்சில உப்பு, யவச்சாரம், சத்திச்சாரம், செவியம் கொடிவேலிவேர், ஜீரகம், ஓமம், சோம்பு, பெருங்காயம் இவைகளை சமனெடை சேர்த்துத் தூள் செய்து மாதுளம் பழச் சாற்றில் ஊரவைத்துக் காயவைத்துக்கொள்ளவும். இதை மோர் வென்னீர், காடி, கொள்ளும் யவையரிசியும் இலந்தை விதையும் சேர்த்துக் காய்ச்சிய கஷாயம், இவைகளில் ஒன்றுடன் சாபபிட அக்னிமந்தம், கிராணி, மூலநோய் குல்மம் இவைகள் நீங்கும்.

[*அளவு : வீசம் தோலா முதல் அரைக்கால் தோலா வரை*]

**சாங்கேரி கிருதம் :—** நெய் இரு பிரஸ்தம், தயிர் **8** பிரஸ்தம் புளியாரை கீரைச்சாறு இரு பிரஸ்தம்—சுக்கு, நெரிஞ்சில், திப்பிலி, யானைத்திப்பிலி, வட்டத்திருப்பி, கொடிவேலி வேர், வில்வப்பிஞ்சு, கோத்தமல்லி விதை, ஓமம், கண்டந்திப்பிலி, இவைகள் வகைக்கு சமனெடை சேர்த்து **32** தோலா எடுத்துக் கல்கமாக்கி கிருதபாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். கிராணி நோய் தீரும்.

[*அளவு : அரை தோலா முதல் ஒரு தோலா வரை*]

**கல்யாண குடம் :—** நெல்லிக்காய் சாறு **400** தோலா, வெல்லம் **200** தோலா இவைகளைப் பாகு வைத்து அதில் வட்டத் திருப்பி, மல்லி விதை, ஓமம், ஜீரகம் கோட்டக்கரந்தை, செவியம் கொடிவேலிவேர், இந்துப்பு, யானைத்திப்பிலி, குராசாணிஓமம், வாய்விளங்கம், கண்டந்திப்பிலி, திரிகடு, திரிபலை, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, இவை வகைக்கு ஒருதோலா, செவந்தை

வேர் பட்டை **32** தோலா இவைகளைத் தூள் செய்துபோட்டு நல்லெண்ணெய் **32** தோலா சேர்த்துக்கிளறி லேகியபாகத்தில் இறக்கிக்கொள்ளவும்.

இதை ஆகாரத்திற்கு முன் சாப்பிட கிராணி, மூலநோய், காசம், க்ஷயம், சுவாஸம், வீக்கம், தொண்டை வியாதிகள், வயிற்று நோய்கள் எல்லாம் நீங்கும்

[*அளவு : அரை தோலா முதல்* 1 *தோலா வரை*]

**பல்லாதக குடம் :—** சுத்திசெய்த சேங்கொட்டை ஆயிரம் (எண்ணிக்கையில்) எடுத்து இருதுரோண ஜலத்தில் கஷாயமாக்கி, நான்கில் ஒரு பங்கு மீதமாக வற்றியவுடன் வடிகட்டி, அதில் வெல்லம் **400** தோலா கரைத்துப் பாகுசெய்து அதில் தந்தீமூலம், சேவதை வேர், யானைத்திப்பிலி, செவியம், ஓமம், வட்டத்திருப்பி, கொடிவேலி வேர், கண்டந்திப்பிலி, திரிகடு இவைகளை வகைக்கு **8** தோலா அளவு எடுத்துத் தூள்செய்து பாகில் கலந்து கீழ் இறக்கி ஆறியவுடன்; ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ (நாககேஸரம்) வகைக்கு நான்கு தோலா தூள் கலந்துகொள்ளவும். குல்மம், அக்னிமந்தம், மூலநோய், கிராணி, பாண்டு, வீக்கம், முறை ஜ்வரம், கபம், உதரம், வெண்குஷ்டம், பவுத்திரம், கிருமி நோய் இவைகளில் மிக நல்லது.

[*அளவு : அரை தோலா.*]

## அர்சஸ் சிகித்ஸை.

காது, கண், மூக்கு, முகம், ஆண்–பெண் குறிகள், குதத் துவாரம் இவைகளில் ஏற்படும் அர்சஸ் (மாம்ஸ முளை) வாதத்தினல் ஏற்படின் கருத்தும்; பித்தத்தால் பவழம் போன்று சிவந்தும்; கபத்தினல் வெளுத்தும் காணப்படுகின்றன. மூன்று தோஷங்களின் கூட்டால் ஏற்படுபவையும், பிறவியிலேயே (தாய் தந்தையரின் கெட்ட பீஜத்தால் ஏற்பட்டு) உண்டானவையும் மிகுந்த வேதனையளிப்பவை; அஸாத்யமாகவுமிருக்கும்.

வயிறு உப்புதல், துடை சோருதல், அக்னிமந்தம், குல்மம், மண்ணீரல் பெருத்தல், உதரம், வீக்கம், சோகை, ஆஸனவாயில் வலி, இழுப்பு, இருமல், தொண்டை எரிச்சல், நாக்கில் ஜலம் ஊறுதல் இவை அர்ச நோயில் போதுக்குறிகள்.

அர்ச நோய்க்கு மருந்துகள், சத்திரமுபயோகித்தல், க்ஷாரம் வைத்தல், சுடுதல் என நான்கு விதமாக கிசிச்சை செய்யலாம். நாட்படாத நோயில் மருந்துகளாலும்; நாட்பட்டவைகளிலும் ரக்தம் பித்தம் இவைகளால் ஏற்பட்டவைகளிலும் க்ஷாரத்தாலும், பெருத்த உடலுள்ளவர்களுக்கும் வாதம் கபம் இவைகளால் ஏற்பட்டவை களிலும் சுடுதலாலும், நல்ல சத்தும் பலமும் உள்ளவனுக்கு சத்திரத்தாலும் கிசித்ஸை செய்யவேண்டும்.

மோர் யவையரிசியின் சத்துமா, வெல்லம் சேர்ந்து தயாரித்த கடுக்காய், காங்காயன வடகம், ஸூரண வடகம், பிராண வடகம் ஆகியவை நாட்படாத அர்சநோயைப் போக்கும் மருந்துகளாகும். பிப்பல்யாதிகணத்தின் சூர்ணத்தை மோரில் கலக்கி சாப்பிடுவதால் கபத்தாலுண்டாகும் மூலநோய் போகும். சாப்பாட்டிற்குமுன் கரு எள்ளுடன் சேங்கோட்டை சேர்த்துச்சாப்பிட மூலநோயே ஏற்படாது

**காங்கயண வடகம் :—** பெருங்கடுக்காய் **20** தோலா, மிளகு **4** தோலா, ஜீரகம் **4** தோலா, திப்பிலி **4** தோலா, கண்டந்திப்பிலி **8** தோலா, செவ்வியம் **12** தோலா, கொடிவேலி வேர் **16** தோலா, சுக்கு **20** தோலா, சுத்திசெய்த சேங்கோட்டை **32** தோலா, காட்டு கருணைக்கிழங்கு **64** தோலா, யவச்சாரம் **8** தோலா இவைகளைத் தூள் செய்து அதற்கு இரண்டு பங்கு வெல்லம் சேர்த்து இடித்து வடகம் தயார் செய்துகொள்ளவும். (அளவு ½ தோலா) சுடுதல், க்ஷாரமுறை, சத்திரசிகித்ஸை இவைகளால் குணமடையாத மூல நோயும் இதனுல் குணமடையும். காங்காயன முனிவர் உபதேசித்தது.

**ஸூரண வடகம் :—** காட்டுக்கருணைக்கிழங்கு **64** தோலா, ஸமுத்திராப்பச்சை விதை **64** தோலா கொடிவேலி வேர் **32** தோலா நிலப்பனைக்கிழங்கு **32** தோலா, தாளீசபத்திரி, திரிபலை, வாய் விளங்கம், திப்பிலி, சுக்கு, கண்டந்திப்பிலி, சுத்திசெய்த சேராங் கோட்டை இவை வகைக்கு **16** தோலா, ஏலரிசி, லவங்கப்பட்டை மிளகு, இவை வகைக்கு **8** தோலா இவைகளை ஒன்ருக்கி இடித்து தூள்செய்து, தூளிற்கு **2** பங்கு வெல்லம் சேர்த்து வடகம் தயார் செய்துகொள்ளவும் (அளவு ½ முதல் **1** தோலா) இதைச்சாப்பிட மூலநோய், மண்ணீரல் பெருக்கம், சோகை, குல்மம், கிராணி, வயிற்றுவலி, ஆஸனவாயில் வலி, இழுப்பு, யானைக்கால், வீக்கம்;

வித்திரதி (விப்புருதிக்கட்டி) கல்லீரல் வீக்கம், கிரந்தி—அர்புதநோய் நீங்கும்.

**பிராணத வடகம்:—** தாளீச பத்திரி, கோடிவேலி வேர், மிளகு, செவியம் வகைக்கு **4** தோலா, திப்பிலி **8** தோலா, கண்டந் திப்பிலி, **8** தோலா, சுக்கு **12** தோலா ஏலரிசி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாககேசரம், இவை வகைக்கு **4** தோலா இவைகளைத் தூள்செய்து சூர்ணத்திற்கு மூன்று பங்கு வெல்லம் சேர்த்து இடித்து வடகம் செய்யவும். காஸம்,சுவாஸம், அக்னிமந்தம், மூலநோய், மண்ணீரல் வீக்கம், பிரமேகம் முதலிய நோய்கள் நீங்கும்.

(அளவு ½ தோலா முதல் 1 தோலா வரை)

### பகந்தர சிகித்ஸை.

ஆஸன வாயின் உள் நான்கு பக்கங்களிலும் சினப்புகள் உண்டாகும். வாதம், பித்தம், கபம், ஸந்நிபாதம் இவைகளாலும் அவ்விடத்தில் ஏற்படும் விரணங்களாலும், புரை ஓடும் விரணமாக ஏற்படும். பகந்தரபிடகை என இவைகளுக்குப் பெயர். இவை பழுத்து பலவிரணங்களுண்டானால் குணமாகாது.

*[ஆஸனவாய் சினப்புகள் மாத்திரம் ஏற்பட்டிருக்கும் ஆரம்ப நிலையில் பிடகை எனவும், வியாதி முற்றி புரையோடி புண்கள் ஏற்படும் கடுமையான நிலையில் பகந்தரம் எனவும் பெயர் என ஸுசுருதர் கூறுகின்றார்].*

சதபோனகம் உஷ்டிரகிரீவம், பரிஸ்ராவி, சம்பூகாவர்த்தம், உன்மார்க்கி என இந்நோய் ஐவகைப்படும். சினப்பு பழுக்காமல் கவனத்துடன் சிகித்சை செய்யவேண்டும்.

*[இவை முறையே, வாதம், பித்தம், கபம் ஸந்நிபாதம் விரணம் இவைகளால் உண்டாகும் பகந்தரத்தின் பெயர்கள். சதபோனகம்—சல்லடை போன்ற பல துவாரங்களுள்ளது. உஷ்டிர கிரீவம்—ஒட்டைக்கழுத்துப் போலுள்ளது. பரிஸ்ராவி—குழகுழப்பான நீர்வடிவது சம்பூகாவர்த்தம்—கிளிஞ்சல்போல் சுழியுள்ளது. உன்மார்க்கி—எதிர்நோக்கி புரையோடுவது என இவைகளின் பெயராலேயே வியாதிநிலை சுருக்கமாக அறிந்து கொள்ளலாம் ]*

நோய் உண்டானவுடன் பழுக்காத நிலையில் அட்டைவிட்டு கெட்ட ரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். பழுத்ததும் விரணத்தின் கடுமையான நிலைக்கு செய்யும் சிகித்சை செய்யவேண்டும்.

புரையோடிய விரணம் சுக்கிராசயம், ஆஸனத்துவாரம், உள் மடிப்புகள், குதத்திற்கும் பால் குறிக்கும் நடுவிலுள்ள தைய்ல் (ஸீவநீ) இவைகளில் சம்பந்தப்படாமலும் விரணங்கள் அதிகமாகாமலுமிருந்தால் சத்திரத்தால் கிழித்து விரண கிகித்ஸையோ, க்ஷாரத்தால் அல்லது பழுக்கக் காய்ச்சிய லோக சலாகையால் சுடுவதோ செய்து புண்ணை ஆற்றவேண்டும்.

**சோத சிகிச்சை :—** உடலின் ஒரு பாகத்திலோ, உடல் முழுவதுமோ ஏற்படும் வீக்கம் சோதம் எனப்படும். இவ்வீக்கத்தை போக்க **(1)** வெல்லமும் இஞ்சியும் **(2)** தேவதாருவும் சுக்கும், **(3)** நிலவேம்பும் சுக்கும் இம்மூன்று யோகங்களும் நல்ல குணம் அளிக்கவல்லவை.

**கிருஷ்ணாதி சூர்ணம் :—** திப்பிலி, கோடிவேலி வேர், சுக்கு, கோரைக்கிழங்கு, ஜீரகம், கண்டங்கத்திரி, வட்டத்திருப்பி, மஞ்சள், யானைத்திப்பிலி, கண்டந்திப்பிலி இவைகள் வகைக்கு சமனெடை எடுத்துச் சூர்ணம் செய்துகொள்ளவும். வென்னீருடன் கலக்கிச் சாப்பிட வீக்கம் வடியும்.

(*அளவு :* $\frac{1}{16}$ — $\frac{1}{8}$ *தோலா அளவு.*)

**கம்ச ஹரீதகீ :—** தசமூல கஷாயம் **8** பிரஸ்தம் தயாரித்து **400** தோலா வெல்லத்தைக்கரைத்து, பெரிய நூறு கடுக்காய்களை அதில் போட்டு வேகவைத்து பாகாக ஆனவுடன் இறக்கி அதில் திரிகடுகம், ஏலரிசி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை இவை வகைக்கு **8** தோலா, யவச்சாரம் **16** தோலா இவைகளின் சூர்ணத்தைக் கலந்து கிளறி தேன் **128** தோலா கலந்து வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு கடுக்காய் எடுத்துச் சாப்பிடவும். சரகர் கூறிய இம்முறை எல்லாவித வீக்கங்களிலும் சிறந்த குணமளிக்க வல்லது.

[*தசமூல கஷாயம் தயார் செய்யும் முறை :— தசமூலம்* 128 *தோலா எடுத்து* 16 *பங்கு (சுமார்* 12¾ *படி) ஜலத்தில் கஷாயமிட்டு நான்கில் ஒருபங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்*].

## உதர சிகிச்சை.

உதர நோயில் செம்மரப்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுல்லி, பெரிய தந்தீமூலம் (எலியால் வேர்) இவை சமனெடை சேர்த்துக் கஷாயமிட்டு அதில் திரிகடுசூர்ணமும் யவச்சாரம் மேம் பொடியாகச் செய்து சேர்த்துச் சாப்பிடக் குணமளிக்கும். அல்லது கள்ளிப் பாலில் பாவனை செய்யப்பட்ட திப்பிலி சூர்ணத்தைச் சாப்பிடுவதும் நல்லது (*அளவு* 1—2 *குந்துமணி எடை*).

**நாராயண சூர்ணம் :—** யவக்ஷாரம், சத்திச்சாரம், ஐந்து உப்புகள், கோட்டக்கரந்தை, கோத்தமல்லி விதை, அசமதா ஓமம், பூலாங்கிழங்கு, திரிகடு, ஜீரகம், கருஞ்ஜீரகம், வாய்விளங்கம், கங் குட்டம், கோஷ்டம், கோடிவேலிவேர், வசம்பு, கண்டந்திப்பிலி, குரோசாணி ஓமம், சோம்பு, திரிபலை, புஷ்கரமூலம் இவை வகைக்கு ஒரு தோலா, சேவதைவேர் இரண்டு தோலா, பேய்க் கும்பட்டி **2** தோலா, எலியால் (பெரிய தந்தீமூலம்) **3** தோலா, நாட்டு நில வேம்பு **4** தோலா, இவைகளை ஒன்று சேர்த்து நன்கு சூர்ணம் செய்துகொள்ளவும். வென்னீர், யவை, இலந்தைக் கோட்டை, கோள்ளு; இவைகளின் கஷாயம், மோர், மத்யம், தயிர் தெளிவு, சாராயம், ஆஸவம் இவைகளில் ஏதாவதொன்றின் அனு பானத்துடன் சாப்பிட எல்லாவித உதர ரோகங்களும் போகும்.

*[சரகத்தில் அனுபானங்கள் விஷயத்திலுள்ள குறிப்பு பின் வருமாறு:— உதரத்தில்—மோர், குல்மத்தில்—இலந்தைக்கொட்டை கஷாயம், வயிறு உப்புசத்தில்—ஸுரையும், வாதரோகத்தில்— பட்டைச் சாராயமும், மலக்கட்டில்—தயிர் தெளிவு, மூலநோயில்— மாதுளம் பழச்சாறு, வயிற்றில் கத்திரிப்பு வலியில்—புளிவஞ்சிச் சாறு, அஜீர்ணத்தில்—வென்னீர் இதுபோன்று வியாதிக்கேற்ப அனுபானத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.]*

**படோலாதி சூர்ணம் :—** பேய்புடல், திரிபலை, மஞ்சள், வாய் விடங்கம் இவை வகைக்கு **2** தோலா, அவுரி விதை **6** தோலா, சேவதை வேர் **8** தோலா, கம்பிப்பாலை **2** தோலா, இவைகளைத் தூள் செய்து கோ மூத்திரத்துடன் கலக்கி சாப்பிட உதரம், சோபம், காமாலை, பாண்டு, முற்றிய காமாலை இவைகளைப் போக்கவல்லது.

(*அளவு : கால் முதல் அரை தோலா*)

**விஸ்ராதி சூர்ணம் :–** கோட்டக்கரந்தை, இந்துப்பு, திரிபலே அவுரி வேர், திப்பிலி, வசம்பு, சேவதைவேர், ஸ-ூவர்சலே உப்பு, கடுகு ரோகிணி, தராப்பூண்டு, சீயக்காய், பிரும்மதண்டி இவை சம எடை சேர்த்துச் சூர்ணம் செய்து தகுந்த அனுபானத்துடன் சாப்பிட எல்லா உதரங்களும் நீங்கும்.

[*அனுபானங்கள்— மாதுளம்பழச்சாறு, திரிபலே கஷாயம், மாமிசரசம், கோமூத்திரம், வென்னீர் முதலியவை சரகத்தில் கூறப்பட்டுள்ளன. குல்மம், மண்ணீரல், வீக்கம், உதரம், வெண் குஷ்டம், குஷ்டம், அஜீர்ணம், வீக்கம், பாண்டு, காமாலே போன்ற ரோகங்கள், நன்கு மலசுத்தி செய்து குணம் தரவல்லது*]

**ரோஹீதக கிருதம் :—** செம்மரப்பட்டை **400** தோலா, இலந்தைக்கோட்டை **512** தோலா, இவைகளே **8** துரோண ஜலத்தில் கஷாயமிட்டு **2** துரோணம் மீதமாகக் காய்ச்சி அதில் நெய் **8** பிரஸ்தமும் பஞ்சகோலம் **20** தோலா, செம்மரப்பட்டை **20** தோலா இவைகளேக் கல்கமாக்கியும் சேர்த்து நெய் பாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். இதைச் சாப்பிட மண்ணீரல், கல்லீரல் பெருக்கத்தால் ஏற்படுமே உதரம் போகும்.

**தசமூல கிருதம் :—** தசமூல கஷாயம் **8** பிரஸ்தம், தயிர் தெளிவு **8** பிரஸ்தம், நெய் **2** பிரஸ்தம், பஞ்சகோலம், யவச்சாரம் இவை **32** தோலா, இவைகளே நெய்பாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். உதரம், மூலநோய், குல்மம், கிரகணி நோய்கள் நீங்கும்.

## குல்ம சிகித்சை.

**ஹிங்குவாதி சூர்ணம் :—** பெருங்காயம், கோடிவேலி வேர், சேவியம், இந்துப்பு, கந்தக வேடியுப்பு, ஸ-ூவர்சிலே உப்பு, புளி வஞ்சி, யவச்சாரம், சத்திச்சாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, மாதுளம் வித்து, புளி, கண்டந்திப்பிலி, ஓமம், பூலாங்கிழங்கு, கோட்டக் கரந்தை, அசமதஓமம், வட்டத்திருப்பி, கடுக்காய், வேண் ஜீரகம், புஷ்கரமூலம், வசம்பு, மல்லிவிதை, இவைகளே வகைக்கு சமனேடை எடுத்துத் தூள் செய்து புளிப்பு மாதுளம் பழச்சாற்றில் நன்கு புளிப்பேறும் வரை பாவனே செய்து காயவைத்துக்கொள்ளவும். வேன்னீர் முதலிய (மோர், காஞ்சிகம், தயிர் தெளிவு, மத்யம் முதலிய) அனுபானங்களுடன் சாப்பிட சூலே, குல்மம், மூலநோய்; கிராணி நோய்கள் நீங்கும்.

[*அளவு : $\frac{1}{16}$ தோலா முதல் $\frac{1}{8}$ தோலா வரை*]

**ஹிங்குவாதி கிருதம் :—** வசம்பு தவிர மற்ற பெருங்காயம் முதலிய முன்கூறப்பட்ட சூர்ணத் திரவியங்களை (**32** தோலா) கல்கமாக்கி நெய் ஒரு பங்கு (இரண்டு பிரஸ்தம்), தயிர் நான்கு பங்கு (**8** பிரஸ்தம்), புளிப்பு மாதுளம்பழச்சாறு நான்கு பங்கு (**8** பிரஸ்தம்) சேர்த்து கிருதபாக முறைப்படி காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். குல்மம் சூலை முதலியவைகளில் நல்ல குணமளிக்கும்.

*[அளவு : ½—1 தோலா]*

**பிந்து கிருதம் :—** நெய் இரண்டு பிரஸ்தம், கருஞ்சேவதை, வெண் சிவதை, கோடிவேலி வேர், இவை வகைக்கு **12** தோலா கடுக்காய் **200** தோலா இவைகளை **16** பிரஸ்தம் ஜலத்தில் நான்கில் ஒரு பங்கு மீதமாகும்படி காய்ச்சப்பட்ட கஷாயம், கல்கத்திற்காக— கமேலா **8** தோலா, அவுரி விதை **8** தோலா, கள்ளிப்பால் **16** தோலா இவைகளை முறைப்படி சேர்த்து காய்ச்சிய நெய் சாப்பிட பேதியாகி குன்மநோய் விலகும்

*[அளவு : ரோகியின் குடல் நிலையறிந்து எவ்வளவு தடவை பேதியாகவேண்டுமோ அவ்வளவு சொட்டு இக்கிருதம் கொடுப்பது வழக்கம். இந்த யோகம் கூறுமிடத்து* **श्यामा त्रिवृद्वांह्निपलत्रयं च** *என்ற மூலத்திற்கு உரை எழுதும் சந்திரடர்* **श्यामा** *என்பதற்கு ஸமுத்திராப்பச்சை வேர் எனப்பொருள்பட* **वृद्धादारक :** *என்று குறிப்பிட்டுள்ளார். ஆனல் ஸம்பிரதாயத்தில் கருஞ்சிவதைதான் எடுப்பது வழக்கமென அதுவே இங்கு தரப்பட்டுள்ளது ]*

**மஹா பிந்து கிருதம் :—** நெய் ஒரு பிரஸ்தம் கல்கத்திற்காக சேவதை வேர் **4** தோலா, கள்ளிப்பால் **4** தோலா, கமேலா **4** தோலா, நெல்லிக்காய் சாறு **16** தோலா, இந்துப்பு ¼ தோலா (பாகத்திற்காக ஜலம் **4** பிரஸ்தம்) இவைகளைச் சேர்த்து நெய் காய்ச்சிச் சாப்பிட குல்மம், உதரம், மண்ணீரல் பெருக்கம் இவைகளைப் போக்கும். இதுவும் பேதியாகும் நெய்.

## வித்ரதி சிகித்சை.

**வருண கஷாயம் :—** மாவிலங்கைப்பட்டை கஷாயத்தில் (சுமார் **2—4** தோலா பட்டையை **16** மடங்கு ஜலத்தில் நான்கில் ஒரு பங்கு மீதமாகக் காய்ச்சியதில்) சுத்த அன்னபேதி, இந்துப்பு, கோமூத்திர சிலாஜது, பெருங்காயம், இவைகளின் சூரணத்தை

(**4—8** யவ (கிரைன்) அளவு) மேம்பொடியாகப்போட்டு சாப்பிட உடலின் உட்புறத்தில் ஏற்பட்டுப் பழுக்காத பெரிய உருவுள்ள வலி அதிகமான விப்புருதிக்கட்டி (வித்ரதி) குணமாகும்.

வித்ரதிகள் பழுத்து சீழ் அதிகமாக கசிந்து வரும் நிலைமையிலும், புரையோடும் விரணங்கள், மற்ற ஆறாப் புண்கள், பகந்தரம் கண்டமாலை முதலிய நோய்களில் திரிபலா குக்குலுவும், திரிபலா கிருதமும், எளிதில் ஜீர்ணமாகும் லகுவான ஆகாரமும் ஹிதமளிக்கும்.

**திரிபலா குக்குலு :—** திரிபலை மூன்றும் சேர்ந்து **12** தோலா திப்பிலி **8** தோலா, சுத்தி செய்த குக்குலு **20** தோலா இவைகளை இடித்து ஒன்றாக்கி வைத்துக்கொள்ளவும்.

*[8—16 யவ அளவு மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு சாப்பிட்டு வரலாம். திரிபலை கிருதம் பின்னர் கூறப் படுகின்றது.]*

## கண்டமாலை–கலகண்ட சிகித்சை.

கண்டமாலையிலும், கலகண்டத்திலும், திப்பிலி மேம்பொடியுடன் கோக்குமந்தாரைப் பட்டை, திரிபலை இவைகளின் கஷாயமும், திரிபலா கிருதமும், யவை பாசிப்பயறு; இவைகளாலான ஆகாரமும் மிகவும் ஹிதமானவை.

**தும்பீ தைலம் :—** நல்லெண்ணெய் **2** பிரஸ்தம், பேய்ச்சுரை சாறு **8** பிரஸ்தம், பிப்பல்யாதிகணத் திரவியங்கள் (**32** தோலா) கல்கம் இவைகளால் தயார் செய்யப்பட்ட தைலம் கலகண்டம், கண்டமாலை இவைகளைப் போக்கவல்லது.

*[மேல் பூசவும் உள்ளுக்குச் சாப்பிடவும் உபயோகிக்கலாம்]*

## விஸ்போட சிகித்சை.

**நிம்பா மிருதாதி கஷாயம் :–** வேப்பம்பட்டை, சீந்திற்கொடி கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, ஆடாதோடை, காஞ்சூரி வேர், நிலவேம்பு பர்படகம், பேய்புடல், திரிபலை, இவைகள் வகைக்கு சமனெடை சேர்த்துக் கஷாயமிட்டு சாப்பிட பாகமடைந்த விஸ்போடகங்கள் (Poxes) குணமாகும்.

**ச்லீபத சிகித்சை:—** சுக்கு கஷாயம், சீந்திற்கோடி கஷாயம், தேவதாரு கஷாயம் இவைகளை (முறையே கப—பித்த—வாதங்களால் உண்டான) ச்லீபத ரோகத்தில் (யானைக்கால்) சாப்பிட குணம் தரும். மேல் வெண்கடுகு அரைத்துப் பத்துப்போடுவதும் நல்லது.

**வாத ரக்த சிகித்சை :—** சுத்தமான கோமூத்திர சிலாஜதுவை தசமூல கஷாயத்திலோ, லகு பஞ்சமூல கஷாயத்திலோ, சீந்திற் கோடி கஷாயத்திலோ, சிற்றுமுட்டி வேர் கஷாயத்திலோ சாப்பிட வாத ரக்தநோய் விலகும். (சிலாஜதுவின் அளவு **4–8** யவ அளவு)

## விஸர்ப சிகித்சை.

**கதிராஷ்டக கஷாயம் :—** ஆடாதோடை பட்டை, திரிபலை, பேய்ப்புடல், சீந்திற்கோடி, வேப்பம்பட்டை, கருங்காலிகட்டை, இவைகளின் கஷாயம் விஸர்பத்தில் ஹிதம் தரும்.

**தசாங்கமூலம்:—** வாகைப்பட்டை, மஞ்சள், மரமஞ்சள், கோஷ்டம், அதிமதுரம், ஜடாமாஞ்சி, அசாரூன், ஏலரிசி, வெட்டி வேர், சந்தனத்தூள் இவைகளைத் தூள்செய்து ஜலம் விட்டரைத்து பத்துப்போட விஸர்பத்தின் (அக்கியின்) வலி எரிச்சல் அடங்கி நோய் குணமாகும்.

## குஷ்ட சிகித்சை.

**நவ கஷாயம் :—** திரிபலை, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, வசம்பு, மஞ்சிட்டி, கடுகுரோகிணி, மஞ்சள் இவைகளைக் கஷாய மிட்டுச் சாப்பிட்டுவர பித்தத்தாலும், கபத்தாலும் ஏற்படும் குஷ்ட விகாரங்கள் தணியும்.

**திக்தக கிருதம் :—** வேப்பம்பட்டை, திரிபலை, பேய்ப்புடல், கடுகுரோகிணி, சிறுகாஞ்சூரி, மரமஞ்சள் ஆடாதோடை பட்டை, தராப்பூண்டு, பர்படகம் இவை வகைக்கு **8** தோலா வீதம் எடுத்து இரண்டு துரோணம் ஜலத்தில் நான்கில் ஒரு பங்கு மீதமாகக்காய்ச்சி வடிகட்டி அத்துடன் நெய் இரண்டு பிரஸ்தம், கல்கத்திற்காக கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, நிலவேம்பு திப்பிலி, தராப்பூண்டு சேஞ்சந்தனம் வகைக்கு **2** தோலா வீதம் எடுத்துக் கல்கமாக்கி, நெய் காய்ச்சிக்கொள்ளவும். விஸர்ப்ப நோய் இதனால் நீங்கும்.

[*அளவு : $\frac{1}{2}$ முதல் 1 தோலா*]

**மஹா திக்த கிருதம் :—** பசு நெய், இரண்டு பிரஸ்தம், நெல்லிக்காய் சாறு நான்கு பிரஸ்தம், ஜலம் **16** பிரஸ்தம், கல்கத்திற்காக — நிலவேம்பு, கோரைக்கிழங்கு, வேப்பம் பட்டை, வெட்பாலையரிசி, திப்பிலி, தராப்பூண்டு, சிறுகாஞ்சூரி, சீந்திற்கொடி, கடுகுரோகிணி, தண்ணீர்விட்டான் கிழங்கு, திரிபலை, அதிவிடயம், மருள்வேர், பேய்தும்மட்டி, ஆடாதோடைபட்டை, வட்டத்திருப்பி, பர்படகம், நன்னரி, மலை நன்னரி, மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம் பத்மகம், விளாமுச்சம் வேர், பேய்புடல், செஞ்சந்தனம், வசம்பு, சரக்கொன்னைப்புளி எழிலம்பாலைபட்டை, இவை வகைக்கு **2** தோலா, இவைகளைக்கொண்டு முறைப்படி நெய் தயார்செய்து சாப்பிட கலகண்டம், மண்டல குஷ்டம், அரிப்பு, பாண்டு, வீக்கம், ச்லீபதம், வாதரக்தம், குஷ்டம் **18** வகைப்பட்டது இவையெல்லாம் நீங்கும்.

**வஜ்ரக கிருதம் :—** நெய் **2** பிரஸ்தம், கண்டங்கத்திரிவேர், பேய்புடல், வேப்பம்பட்டை, புங்கம்விதை, ஆடாதோடைபட்டை, சீந்திற்கொடி, திரிபலை இவைகளின் கஷாயம் **8** பிரஸ்தம், (முன் சொன்ன கஷாய திரவியங்களையே கல்கமாகவும் போடவேண்டும்) நெய் பாக முறைப்படிக் காய்ச்சி வட்கட்டிக்கொள்ளவும். இதைச் சாப்பிட **18**-வித குஷ்டங்களும் போகும்.

**மஹாகாதிர கிருதம் :—**கருங்காலிக்கட்டை **1600** தோலா எடுத்து இடித்து **8** துரோண அளவு ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் கஷாயமாக்கி, நெய் **8** பிரஸ்தம் சேர்த்துக் கீழ்குறிப்பிடுபவைகளைக் கல்கமாக்கி சேர்க்கவும். கல்கதிரவியங்களாவன—திராப்பூண்டு, வெட்பாலையரிசி, புங்கம்விதை, பூர்ஜ இலை, நிலவேம்பு, வேப்பம் பட்டை, கோரைக்கிழங்கு. பர்படகம், ஆடாதோடை பட்டை, கடுகுரோகிணி, பேய்ப்புடல், சீந்திற்கொடி, திரிபலை, கருங்காலிக் கட்டை, பதிமுகம், மஞ்சள், மரமஞ்சள், சந்தனம், கண்டங்கத்திரி தேவதாரு, சரக்கொன்னைப்பட்டை, சிறுகாஞ்சூரி, எழிலம்பாலை பட்டை, வேங்கைவைரம், வாகை, சிம்சபாகட்டை, மருள்வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு. திப்பிலி, பேய்தும்மட்டி, வட்டத்திருப்பி வசம்பு, அதிவிடயம், நன்னரி இவை வகைக்கு **2** தோலா இவைகளை முறைப்படிக் காய்ச்சி நெய் வடிக்கட்டி எடுத்துக்கொள்ளவும். தோல் நோய்கள் யாவும் விசேஷமாக குஷ்டம், வெண் குஷ்டம், படர்தாமரை, அதிகமான ஊளைச்சதை, பிரமேகம், இவைகளைப்

போக்கி ஓஜஸ், மேதை, மங்களம், ஆயுள் இவைகளை அளிக்கும். விசேஷமாகப் பித்த கப நோய்களைப் போக்கவல்லது.

**கதிர கிருதம்:—** கருங்காலிக்கட்டைக் கஷாயத்துடனும், திரிபலை கல்கத்துடனும் முறைப்படி காய்ச்சப்பட்ட நெய் எல்லா குஷ்ட நோய்களையும் போக்கும்.

**திரிபலாதி கிருதம் :—** திரிபலை, சீந்திற்கொடி, கருங்காலிக் கட்டை, வேப்பம்பட்டை, பேய்புடல், ஆடாதோடை இவைகளின் கஷாயத்துடன் இவைகளைக் கல்கமாக்கித் தயார் செய்யப்பட்ட கிருதம் குஷ்ட ரோகங்களில் சிறந்தது.

**மரிசாதி தைலம் :—** கடுகெண்ணை **8** பிரஸ்தம், கோ மூத்திரம் **8** பிரஸ்தம், கல்கத்திற்காக மிளகு, சந்தனம், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, மனோசிலை, தாளகம், பசும் சாணத் தண்ணீர், சேவதை வேர், வேள்ளை அரளி வேர், எருக்கம்பால், வத்ஸநாபி இவை வகைக்கு **4** தோலா; இவைகளைத் தைலமாக காய்ச்சி வடிகட்டி மேலுக்குத் தடவ படை, தோல் பிளப்பு, சேற்றுப் புண், மண்டல குஷ்டம், தேமல், விசர்சிகை, அரிப்பு, வெண்குஷ்டம், விஸர்பம் இவை போகும்.

இந்த யோகத்தில் வத்ஸநாபி மாத்திரம் 8 தோலா சேர்க்கும்படி சந்திரடர் கூறுகிறார்.

**ஔஷதாயஸ்கிருதி:—** சிவப்பு லோத்திரப்பட்டை, தான்றி காய், நெல்லிமுள்ளி, சிகைக்காய், சங்கபுஷ்பி, புரசம்பட்டை, சிம்சபா கட்டை, சேவதை வேர், சமுத்திராப்பச்சை வேர், முன்னை பட்டை, கடுக்காய் இவை வைகக்கு **64** தோலா, இவைகளை **4** துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகும்படி காய்ச்சி வடிகட்டி புரசங்கட்டையில் செய்யப்பட்ட தொட்டியில் நிரப்பவும். **400** தோலா எடையுள்ள இரும்புத் தகடுகளை கருங்காலித் தணலில் பழுக்கக் காய்ச்சி இந்தக்கஷாயத்தில் சுருக்குக் கொடுக்கவும். இம்மாதிரி அவ்வளவு இருப்புத் தகடும் தூளாகி கஷாயத்தில் கரையும் வரை இவ்விதமே செய்து வரவும் பிறகு அந்த கஷா யத்தை கோமயநெருப்பில் பாகுபோன்றாகும்வரை காய்ச்சி, அதில் பிப்பல்யாதிகண சூர்ணம் **400** தோலா, நெய் **800** தோலா சேர்த்து கீழிறக்கி ஆறியபின் தேன் **800** தோலா அதில் சேர்த்துக்கொள்ள வும். இம்மருந்தின் சக்தி எந்த ரோகத்தாலும் தடைசெய்ய

இல்லாது. இதைச் சாப்பிட்டு வர ஆயுள், புத்தி, மேதை இவை தினந்தோறும் அதிகரிக்கும். உடல் ஸ்தூலத்தில் (பெருத்தல்) பிரமேகம், க்ஷயம், குஷ்டம், பாண்டு, ச்லீபதம், ஊருஸ்தம்பம் (துடை மரத்துப்போதல்) துடைவலி இவை ஏற்படாது.

[அளவு 6—12 யவ எடை இம்மாதிரி நியக்ரோதாதிகணம் போன்ற மற்ற குஷ்டத்தைப் போக்கடிக்கும் திரவியங்களாலும் அயஸ்கிருதி யுக்திக்கேற்ப தயார் செய்யலாம் என ஸுச்ருதரின் வாக்கு ]

## ச்வித்ர சிகித்சை.

ச்விதரம் என்பது வேண்குஷ்டம். தான்றிக்காய் தோல் பேயத்திவேர், இவைகளின் கஷாயத்தில் வெல்லம் சேர்த்து கார்போகரிசி சூர்ணத்திற்கு அனுபானமாக சாப்பிட வேண்குஷ்டம் புண்டரீக குஷ்டம் இவ்விரண்டும் மறையும்.

[இதன் உபயோக முறை சந்திரடர் கூறுவதாவது தான்றிக்காய் தோல் 2 தோலா, பேயத்தி வேர் 2 தோலா, இவைகளைக் கஷாயமிட்டு 16 தோலா கஷாயத்தில் கார்போகரிசி 1 தோலா வெல்லம் 1 தோலா அரைத்துக் கலக்கிச் சாப்பிட்டும், மேலுக்கு கடுகெண்ணெய்யை தடவிக்கொண்டு கிரீஷ்ம—சரத்—வர்ஷ ருதுக்களில் முடிந்தவரை இருக்கவேண்டும். பசுவின் மோர் மாதுளம் பழச்சாறு சேர்த்து கஞ்சியை சாப்பிட்டு வரவேண்டும் அதனல் கொப்புளங்கள் ஏற்படும். கொப்புளங்கள் உடைந்ததும், யானை அல்லது சிறுத்தையின் தோலை பொசுக்கி அதன் சாம்பலை எண்ணெய்யில் குழப்பி மேல் தடவ புண் ஆறும் ]

**நீலகிருதம்** :— சங்கங்குப்பி **400** தோலா, மணத்தக்காளிக் கீரை **400** தோலா, காகநாஸா (சிறுகோவை) **400** தோலா, இரும்புத்தூள் **128** தோலா, திரிபலை **768** தோலா இவைகளை நன்கு இடித்து **4** துரோண ஜலத்தில் வீசம்பங்கு மிகுதியாகும்படி காய்ச்சி வடிகட்டி நெய் இரண்டு பிரஸ்தம், திரிகடு, கார்போகரிசி, கண்டங்கத்திரி வேர், தந்தீமூலம், தேவதாரு, வெட்பாலையரிசி, கருசலாங்கண்ணி, சரக்கோன்னைப்புளி, மாவிலங்கம்பட்டை, வாலுளுவை இவை வகைக்கு **1** தோலா. இவைகளைக் கல்கமாக்கி எல்லாவற்றையும் சேர்த்துக்காய்ச்சி நெய் தயார் செய்து கோள்ளவும். இது வேண்குஷ்டம், குஷ்டம். மண்டைக்கரப்பான் இவைகளை நீக்கும்.

**மஹா நீலகிருதம் :—** சிறுகோவை, மருதோன்றி, துளசி, சரக்கோன்னை இவை வகைக்கு **400** தோலா, திரிபலை **768** தோலா, தந்தீமூலம், கோடிவேலி வேர், மணத்தக்காளி இலை, மாவிலங்கம்பட்டை, கண்டங்கத்திரி, மஞ்சள், மரமஞ்சள், வெட்பாலைப்பட்டை கருங்காலிக்கட்டை, எருக்கின் வேர், இவை எல்லாம் சேர்ந்து **400** தோலா, இவைகளை **8** துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு, அதில் பசுவின் நெய் **512** தோலா, கோமய ஜலம் **512** தோலா, பசுவின் தயிர் **512** தோலா பசுவின் மூத்திரம் **512** தோலா, பசுவின் பால் **512** தோலா, கல்கத்திற்காக—நிலவேம்பு, திரிகடு, நீலோத்பலக் கிழங்கு, கவுளா, புங்கின் விதை, இங்குண விதை, கார்போகரிசி, முருங்கைவிதை, அவுரிவிதை இவை வகைக்கு **4** தோலா இவைகளைக் கல்கமாக்கி நெய் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். இதைச் சாப்பிட வெண்குஷ்டம், அக்கி, விரணம், வித்திரதி, உன்மாதம், அபஸ்மாரம், மூலநோய், இளைப்பு, வெட்டை, தலையில் நோய், புற்று. குல்மம், கலகண்டம், தொண்டை நோய், கிரந்தி, அற்புதம், வீக்கம், வாதவியாதிகள், பிரமேகம், மயக்கம், முறைஜ்வரம், இவை நீங்கும்.

[*ஃ**யாமா** என்ற பதத்தின் பொருளான கவுளாவிற்குப் பதிலாக ஸமுத்திராப்பச்சை விதை சேர்க்கும்படி சந்திரடர் கூறுகிறார்.*]

## பிரமேக சிகித்சை.

கோரைக்கிழங்கு, தேவதாரு, திரிபலை இவைகளின் கஷாயம் தேனுடன் சாப்பிட பிரமேகம் போகும். நெல்லிக்காய் சாற்றுடன் மஞ்சளை அரைத்து கல்கமாக்கி தேன் சேர்த்துச் சாப்பிடுவதும் உத்தமம்.

**தான்வந்தர கிருதம் :—** தந்தீமூலம், தேவதாரு, பூலாங்கிழங்கு, வில்வப்பிஞ்சு, கோடிவேலி வேர், சுத்தி செய்த சேங்கோட்டை, எருக்கின்வேர், கடுக்காய், கள்ளிவேர், சிவப்புச்சாரணை வெள்ளைச்சாரணை, புங்கின் விதை. கழற்சி விதை, மாவிலங்கம் பட்டை, தசமூலம் இவை வகைக்கு **40** தோலா, கோள்ளு, இலந்தைக்கோட்டை, யவையரிசி இவை வகைக்கு **64** தோலா, இவைகளை **4** துரோண ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் கஷாயமிட்டு, அக்கஷாயத்துடன் நெய் **2** பிரஸ்தம், அடப்பங்காய், வாய் விளங்கம், வாஸனைப்புல், திப்பிலி, கமேலா, சுக்கு, சிறுதேக்கு,

சேவியம், யானைத்திப்பிலி இவை வகைக்கு 2 தோலா வீதம் சேர்த்துக் கல்கமாக்கி எல்லாம் ஒன்றாகக் கலந்து முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். இந்த கிருதத்தில் பிரமேகம், க்ஷயம், விக்கல், குல்மம், பாண்டு, ஹிருதயரோகம், மூலநோய் இவை நீங்கும்.

## பாண்டுரோக சிகித்சை.

**மண்டூர வடகம்**:— கண்டந்திப்பிலி, கோரைக்கிழங்கு, சேவியம், தேவதாரு, மரமஞ்சள், ஸ்வர்ணமாஷிக பஸ்மம், வாய் விடங்கம், திரிகடு, திரிபலை, கொடிவேலி வேர் இவை வகைக்கு சமனெடை இந்த சூர்ணத்திற்கு இரண்டு பங்கு சுத்தமான தூள் செய்த அயக்கிட்டம் (மண்டூரம்). மண்டூரத்திற்கு எட்டு பங்கு பசுவின் மூத்திரம். (பசுவின் மூத்திரத்தில் மண்டூரத்தூளைப்போட்டு அடுப்பிலேற்றிக் கிளறிக்கொண்டே வர பாகம் வந்த சமயத்தில் கண்டந்திப்பிலி முதலிய திரவியங்களின் தூளைப்போட்டுக் கிளறி எடுத்துக்கொள்ளவும்.) முறைப்படி வடகங்கள் செய்துகொண்டு அவைகளை மோர் அனுபானத்துடன் சாப்பிட பாண்டு, வீக்கம் பிரமேகம், சேவிடு, துடைமரத்துப்போதல் இவை நீங்கும்.

[*மண்டூரத்தைத் தூள் செய்ய: நூறு அல்லது அறுபது வருஷங்களுக்கு குறையாத பழைய மண்டூரத்தை உலையிலிட்டு சிவக்கக் காய்ச்சி கோமூத்திரத்தில் சுருக்குக்கொடுக்க தூளாகும். மண்டூர சூர்ணத்தைக்காட்டிலும் மண்டூர பஸ்மத்தைப்போடுவது சிறந்ததென சிலர் கருதுகின்றனர். அளவு* 6–12 *யவ அளவு*]

**விபீதக லவணம்**:— மண்டூரத்தை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி ஏழு தடவை கோமூத்திரத்தில் சுருக்குக் கொடுக்கவும். மண்டூரத்திற்குச் சமனெடை இந்துப்பையும் காய்ச்சி அதே கோ மூத்திரத்தில் சாய்க்கவும். பிறகு அவ்விரண்டையும் எடுத்து அரைத்துப் பானையிலிட்டு மூடி சந்துக்கு மண்சீலை செய்து தான்றி விறகால் எரித்து நன்கு காய்ந்தவுடன் இறக்கி ஆறியபின்னர் எடுத்து தூள் செய்து வைத்துக்கொள்ளவும். தேன் அல்லது மோருடன் இதைச் சாப்பிட பாண்டு நோயை அறவே ஒழிக்கவல்லது.

**நவாயஸ சூர்ணம்**:— திரிகடு, திரிபலை, கோடிவேலி வேர், கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், இவை வகைக்கு 1 தோலா

சூர்ணம் செய்து அத்துடன் அயஸ் பஸ்மம் 9 தோலா சேர்த்து நன்கு அரைத்து தேன் சேர்த்துச் சாப்பிட பாண்டு, பிரமேக பிடகை, உடல் பருத்தல், கிழத்தனம், குஷ்டம், உதரம் அக்னிமந்தம் இவை போகும்.

**ச்வாஸ காச சிகித்சை.**

**பார்ங்கீ ஹரீதகீ :—** தசமூலம் **400** தோலா, சிறுதேக்கு **400** தோலா, கடுக்காய் **100** (எண்ணிக்கையில்) இவைகளை **4** துரோண ஜலத்தில் ஒரு துரோணம் மிகுதியாகும்படி கஷாயம் செய்து, வடிகட்டி அக்கஷாயத்தில் **400** தோலா வெல்லத்தைக் கரைத்து வேந்த நூறு கடுக்காய்களையும்அதில் போட்டு பாகாக்கவும் நன்கு பாகானவுடன் இறக்கி ஆறினபின் அதில் ஏலரிசி, லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வகைக்கு ஒரு தோலா, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு **4** தோலா இவைகளைத் தூள் செய்து கலந்து தேன் **32** தோலா சேர்த்துக்கொள்ளவும். சுவாஸம், காஸம், சோஷம், விக்கல், கபநோய், வாந்தி, மார்பு நோய்கள், அருசி, மேகம், அபஸ்மாரம், இவைகள் நீங்கும்.

*[கஷாயம் செய்யும்பொழுது கடுக்காய்களை துணியில் முடித்துப் போடுவதும் வெந்தபின் கடுக்காய் விதைகளை அகற்றி நன்கு பிசைந்து துணியில் தேய்த்து நார் நீக்கி அதை வெல்ல ஜலத்தில் கரைத்துப் பாகாக்கிக்கொள்வது சிலர் ஸம்பிரதாயம். சிலர் வெந்த கடுக்காய்களை அவ்விதமே போட்டு பாகாக்கி சூர்ணம் கலந்த பின் முழுக்கடுக்காய்களாகவே சாப்பிட சௌகர்ய மாயிருக்குமென அவ்விதம் செய்வதுண்டு. சிலர் கஷாயம் செய்யும்பொழுது கடுக்காய் போடாமல் பிறகு பாகு செய்யும் பொழுது கடுக்காயை விதை நீக்கித் தூள் செய்து சேர்ப்பதும் வழக்குமுண்டு. கடுக்காயைத் தூள் செய்தோ, வேகவைத்துப் பிசைந்தோ கலந்து தயாரித்த லேகியம், வேளைக்கு ½—1 தோலா அளவும், முழுக்கடுக்காயை அவ்விதமே போட்டுத் தயாரித்த லேகியம் ½ தோலா அளவும், ஒரு கடுக்காயும் வேளைக்குச் சாப்பிடவேண்டும்.]*

**வியாக்கிரீ ஹரீதகீ :—** கண்டங்கத்திரி **400** தோலா, கடுக்காய் **100** (எண்ணிக்கையில்) இவைகளை இரு துரோண ஜலத்தில் கஷாயமிட்டு அரை துரோணம் மிகுதியான அக்கஷாயத் தில் வெல்லம் **400** தோலா சேர்த்து வெந்த அக்கடுக்காய்களையும்

சேர்த்துப் பாகாக்கி இறக்கி ஆறியபின் திரிகடுகம், வகைக்கு **4** தோலா சதுர்ஜாதம் (சூர்ணம்) வகைக்கு ஒரு தோலா, தேன் **24** தோலா, இவைகளைக் கலந்து சாப்பிடவும். கபரோகங்கள், சுவாஸம், வீக்கம். காஸங்கள் விக்கல், மார்வலி, அபஸ்மாரம் இவைகளை போக்கும், பசியை நன்கு தூண்டும். இது விதேஹரால் கூறப் பட்டது.

*(கடுக்காய் விஷயத்தில் முன் யோகத்தின் குறிப்புக்கள் கவனிக்கத்தக்கவை.)*

**சித்ரக ஹரீதரீ :—** கோடிவேலிவேர், தசமூலம் (எல்லாம் சேர்த்து) சீந்திற்கோடி, நெல்லிக்காய், இவை வகைக்கு **400** தோலா, இவைகளை **8** துரோண ஜலத்தில் இரு துரோணம் மிகுதி யாகும்படி கஷாயமிட்டு, அதில் வெல்லம் **400** தோலா, கடுக்காய்த் தூள் **256** தோலா, இவைகளைப்போட்டுப் பாகு செய்து, இறக்கி ஆறியபின் திரிகடுகம் **24** தோலா, திரிஜாதகம் 24 தோலா யவசாரம் 2 தோலா இவைகளின் சூர்ணம் கலந்து தேன் 32 தோலா விட்டுக் கிளறிக் கோள்ளவும். ராஜயக்ஷ்மா, சுவாஸம், கெட்டகபம், காஸம், விக்கல், வாந்தி' சளி, இளைப்பு, உரக்ஷதம், கபத்தினுல் ஏற்படும் தலைவலி, அக்னி மந்தம் இவைகள் நீங்கும்.

**வியாக்ரீ கிருதம் :—** கண்டங்கத்திரி, சீந்திற்கோடி, இவை களின் கஷாயம் அல்லது சாறு வகைக்கு 4 பிரஸ்தம்; நெல் 2 பிரஸ் தம்; கண்டங்கத்திரிவேர், சீந்தில்வேர் இவை வகைக்கு 8 தோலா கல்கம்; இவைகளை நெய்பாக முறைப்படி காய்ச்சி வடிக்கட்டி அந்த கிருதத்தை தேன் சேர்த்து சாப்பிட கப காஸத்தையும் பீனசத் தையும் போக்கும்.

**பார்ங்கீ கிருதம்—வாஸா கிருதம் :—** வியாக்ரீ கிருதம் தயார்செய்த விதத்தில் சிறுதேக்கை கஷாயமாகவும், கல்கமாகவும் செய்து சேர்த்துக் காய்ச்சிய நெய் பார்ங்கீ கிருதம் எனப்படும். இது சுவர்ஸத்தைப் போக்கும் அவ்விதமே ஆடாதோடை ஸ்வரஸம், ஆடாதோடைவேர் கல்கம் சேர்த்துக் காய்ச்சிய நெய் வாஸாகிருதம் எனப்படும், அது ரக்த பித்தத்தைப் போக்கும்.

**ரக்த பித்த சிகித்சை :—** யால்முதுக்கன் கிழங்கின் சாறு பசும்பால் (இவை வகைக்கு **4** பிரஸ்தம்) நெய் (ஒரு பிரஸ்தம்) அதிமதுர சூர்ணம் (கல்கம் **16** தோலா) இவைகளைக்கோண்டு

கிருதம் தயாரித்து சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். இவ்விதமே நாகபலாவை கஷாயமாகவும் கல்கமாகவும் சேர்த்து நெய் காய்ச்சி கொள்ளவும். அதே மாதிரி பால்முதுக்கன் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளை தனித்தனியே சேர்த்து நெய் காய்ச்சி கொள்ளலாம். அருகம்புல்; பால்முதுக்கன் கிழங்கு, கரும்பு, தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளின்சாறு, விளாமிச்சம்வேர், நீலோத்பலக் கிழங்கு, சர்க்கரை இவைகள் கல்கம் சேர்த்து நெய் தயார் செய்து கொள்ளலாம். அல்லது நெய் ஒரு பங்கு, பசும்பால் **4** பங்கு (பாகத்திற்காக ஜலம் **4** பங்கு) திராக்ஷை அல்லது தாமரைக்கிழங்கு கல்கம் சேர்த்தும் நெய் காய்ச்சிக் கொள்ளலாம். இந்த கிருத யோகங்கள் ரக்த பித்தத்தை போக்க வல்லவை.

*(இந்த ஏழு கிருத யோகங்களிலும் திரவியங்களின் அளவு ஸாமான்ய பரிபாஷைப்படி பின்வருமாறு. நெய் ஒரு பங்கு, கஷாயம் அல்லது ஸ்வரஸம் நெய்க்கு 4 பங்கு, கல்கம் நெய்க்கு அரைக்கால் அல்லது கால் பங்கு வெறும் ஸ்வரஸம் மாத்திரம் சேர்க்குமிடத்து பாகம் நன்கு ஏற்படுவதற்காக ஜலம் 4 பங்கு தனியே சேர்ப்பது வழக்கம்.)*

ஆடாதோடை கஷாயத்தில், நீலோத்பலக்கிழங்கு, தாமரை கேஸரம், கவுளா, லோத்திரப்பட்டை, படிக்காரம் (பொரித்தது) ரஸாஞ்சனம் இவைகளின் சூரணம் மேம்பொடியாக (சுமார் **4–12** கிரைன் அளவு)ப்போட்டு தேன் கல்கண்டு சேர்த்துச் சாப்பிட முற்றிய ரக்த பித்த ரோகம் போகும்.

**கண்ட கூஷ்மாண்டம் :—** முற்றிய பூஷணிக்காய் (விதை தோல் நீக்கப்பட்டது) **400** தோலா எடுத்துத் துறுவி நெய் **128** தோலா விட்டு வதக்கி அத்துடன் கல்கண்டு **400** தோலா சேர்த்து லேகியமாக்கி அதில் சுக்கு, ஜீரகம், திப்பிலி, இவைகளின் சூர்ணம் வகைக்கு **8** தோலா சேர்த்துக் கிளறி இறக்கி ஆறியவுடன் லவங்கப் பட்டை சிறுநாகப்பூ, (நாககேஸரம்) ஏலரிசி, லவங்கப்பத்திரி இவைகளின் சூர்ணம் வகைக்கு **2** தோலா சேர்த்து தேன் **64** தோலா விட்டுக் கிளறி வைத்துக்கொள்ளவும். மேல் நோக்கியோ, ஆஸனவாய் பால்குறி இவை மூலமாகவோ வெளிப்படும் ரக்த பித்தத்தைத் தடுத்து ஹிருதயத்திற்கு நல்ல பலமளிக்கக்கூடியது. மூத்திர கிருச்சிரம், அரோசகம், வாந்தி, தாகம், மூர்ச்சை, அபஸ்மாரம், உரக்ஷதம், மேல்நோக்கிய வாயு, உன்மாதம், ரக்தமூலநோய், இவைகளைப் போக்கும். தாதுபுஷ்டி, புத்திக்கூர்மை இவைகளை அளிக்கவல்லது.

*[மேலே கூறியபடி செய்யும்முறை அதிகமாக வழக்கில்லை. செய் முறையில் சில சௌகரியங்களையும் ஒரே விதமான அளவையும் உத்தேசித்துக் கீழ்க் கண்டவாறு செய்முறையில் மாறுதல் வழக்கிலுள்ளது. முற்றிய பூசனிக்காயை விதை தோல் நீக்கி துருவி துணியில் கட்டிப் பிழிந்து அந்தத் திரவத்தை தனியாக வைத்துக்கொள்ளவும். பிழியப்பட்ட அந்தச் சக்கையை வெயிலில் லேசாக உணர்த்தி அதை 400 தோலா எடுத்து நெய்யில் தேன் நிறமடையும்வரை வதக்கிப் பிறகு அதில் தனியாக வைக்கப் பட்டுள்ள திரவத்தையும் கல்கண்டையும் கலந்து பாகாக்கிப் பிறகு மற்ற சூர்ணங்களைக் கலந்து கொள்ளுவதுதான் வழக்கம். மணத்திற்காகவும், குணத்திற்காகவும் இதில் பச்சைக் கர்ப்பூரம் $\frac{1}{4}$—$\frac{1}{2}$ தோலா சேர்ப்பதுமுண்டு. ஆனால் புத்தகத்தில் கூறியபடி செய்வதே அதிகம் குணம் தர வல்லதாக தோன்றுகின்றது ]*

**ஏலாதிவடீ :—** ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, வகைக்கு அரை தோலா, திப்பிலி **2** தோலா, திராக்ஷை கல்கண்டு அதிமதுரம், பேரீச்சம்பழம், இவை வகைக்கு **4** தோலா, இவைகளில் தூள் செய்யவேண்டியவைகளைத் தூள் செய்துகொண்டு மற்றவைகளைச் சேர்த்தரைத்து, தேன் தேவையான அளவு சேர்த்து மாத்திரை செய்துகொண்டு சாப்பிட ஹிருதயம் நல்ல பலமடையும். நாவரட்சி, ரக்தபித்தம், உரக்ஷதம், ரக்தமூலம், மூர்ச்சை, தலை சுற்றுதல், இவைகளில் நல்ல குணமளிக்கும். தாதுபுஷ்டி அளிக்கும்.

**திருஷ்ணு சிகித்சை :—** திருஷ்ணு என்பது நாவரட்சி. நெற்பொரி, தாமரை விதை, ரஸாஞ்சனம், நீலோத்பலக்கிழங்கு, ஆலம் விழுது, தாமரைத்தண்டு, கோஷ்டம் இவைகளைச் சூர்ணம் செய்து தேன் சேர்த்து வடகம் செய்து வாயில் அடக்கிக்கொள்ள நாவரட்சி போகும்.

நெற்பொரி, தாமரைப்பூ, விளாமுச்சம்வேர், தாமரைத்தண்டு, சிங்காடங்காய், நீலோத்பலக்கிழங்கு, தாமரைக்கிழங்கு இவைகளைக் கொண்டு கஷாயம் செய்து ஆறியபின் தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட தாகமடங்கும்.

**வாந்தி சிகித்சை :—** திரிபலை, திப்பிலி, மிளகு, நெற்பொரி, ரஸாஞ்சனம், இலந்தைக்கொட்டைப்பருப்பு, இவைகளின் சூர்ணம்

அல்லது திரிகடு சூர்ணம், விளாம்பழம் உள்சத்து இவைகளையாவது தேன் சேர்த்து சாப்பிட வாந்தி நிற்கும்.

**விக்கல் சிகித்சை :–** பாதிரிப்பூ, பாதிரிப்பழம். இவைகளைத் தேனுடனே பூங்காவி, கடுகுரோகிணி இவைகளின் சூர்ணத்தை தேனுடனே சாப்பிட விக்கல் நீங்கும்.

**சூல சிகித்சை.**

**ஹிங்கு பஞ்சகம் :—** சுக்கு, ஸௌவர்சில உப்பு, மாதுளம் விதை, புளிவஞ்சி, பெருங்காயம் இவை வகைக்கு சமனெடை சேர்த்து சூர்ணம் செய்து (**4—6** யவ அளவு) சாப்பிட ஹிருதயத்தில் ஏற்படும் வலி நீங்கும்

**ஹிங்க்வஷ்டகம் :—** திரிகடு, ஓமம், ஜீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு; பெருங்காயம், இவை வகைக்கு சமனெடை சேர்த்து தூள்செய்து சாப்பிட ஹிருதயம் வயிறு இவைகளின் நடுவில் ஏற்படும் வலி, குல்மம், மூலம், கிரஹணீ இவை நீங்கும்.

**விச்வாதி சூர்ணம் :—** சுக்கு, ஸௌவர்சில உப்பு, பெருங் காயம், இவைகளை வகைக்கு சமனெடை சேர்த்து சூர்ணம்செய்து (**2—4** யவ அளவு) வென்னீரில் கலந்து சாப்பிட ஹிருதயம், முதுகு வயிறு, துடையிடுக்கு, இவைகளில் கபவாதத்தால் ஏற்படும் வலி நீங்கும்.

**தும்புர்வாதி சூர்ணம் :—** மல்லிவிதை, புஷ்கரமூலம், கடுக் காய், புளிவஞ்சி, கந்தகவெடியுப்பு, ஸௌவர்சில உப்பு, பெருங் காயம், இந்துப்பு, இவைகளை சமனெடை சேர்த்து சூர்ணம் செய்து (**6–10** யவ அளவு) சாப்பிட்டு மேல் யவை கஷாயம் சாப்பிட வலி, அபதந்திரகம் இவை நீங்கும்.

**தாதிக கிருதம் :–** நெய் இரண்டு பிரஸ்தம், புளிப்பு மாதுளைச் சாறு **8** பிரஸ்தம், தயிர் **8** பிரஸ்தம், கோஷ்டம், யவச்சாரம், கந்தக வெடியுப்பு, மாதுளம் விதை, புளி, இந்துப்பு, பெருங்காயம், கோடி வேலிவேர், ஜீரகம் கண்டந்திப்பிலி, சேவ்வியம், ஸௌவர்சிலஉப்பு, ஓமம், திரிகடுகம், புளிவஞ்சி இவைகளை (வகைக்கு **2** தோலா) கல்கமாக்கிக் கலந்து நெய் காய்ச்சும் முறைப்படி தயாரிக்கவும். ஹிருதயம், இடுப்பு, குடல், ஆஸனவாய், துடையிடுக்கு, மூத்திர பஸ்தி, இவைகளில் ஏற்படும் வலி, மூலம், குல்மம், இவைகளைப் போக்கும். (அளவு ½ தோலா)

**ஸப்தவிம்சக குக்குலு** ;– யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், திப்பிலி மிளகு, சுக்கு, திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, கோரைக் கிழங்கு, இந்துப்பு, ஸௌவர்சிலே உப்பு, கந்தக வேடியுப்பு, மல்லி விதை, கண்டந்திப்பிலி. கோடிவேலி, ஏலம், சேவ்யம், கோஷ்டம் ஸ்வர்ணமாக்ஷிகம் (பஸ்மம்) புஷ்கரமூலம், வாய்விளங்கம், அதி விடயம், யானைதிப்பிலி, இவை வகைக்கு சமனேடை சேர்த்துத் தூள் செய்து இதற்கு சமம் சுத்திசெய்த குக்குலு சேர்த்து நெய் சேர்த்து இடித்து எல்லாம் ஒன்று சேர்ந்தவுடன் **6–10** யவ அளவு மாத்திரைகள் செய்துகோள்ளவும். பால் வென்னீர், காடி, பயற்றங் கஞ்சி, இவ்வனுபானங்களுடன் சாப்பிட பாண்டு, க்ஷயம், அபஸ் மாரம், ஏப்பம், வீக்கம், பிரமேகம், ஹிருதயம், முதுகு, குடல், இடுப்பு, துடையிடுக்கு, வயிறு, தோள் இவைகளில் ஏற்படும் வலி, குஷ்டம், வெண் குஷ்டம் இவைகள் நீங்கும்.

## உதாவர்த்த சிகித்சை.

**உதாவர்த்தம் :—** மலம் தீய்ந்து கட்டி வெளி வாரதிருத்தல், கோமூத்திரத்தில் வெல்லத்தைக் கரைத்துப் பாகாக்கி வர்த்தி தயார் செய்யும் பாகத்தில், அதில் மலங்காரைக்காய், பெருங்காயம், நேர்வாளம், கள்ளிப்பால், இந்துப்பு, கந்தகவேடியுப்பு, ஒட்டடை இவைகளைப்போட்டு வர்த்தி செய்துகோண்டு ஆஸனத்துவாரத்தில் வைக்க, தீய்ந்து கட்டியான மலம் இளகி வெளிப்படும்.

## மூத்திர கிருச்சிர சிகித்சை.

ஏலரிசி, அரேணுகம், திப்பிலி, ஆடாதோடை, அதிமதுரம், நெரிஞ்சில் முள், சிற்றுமணக்கு வேர், கல்லூர்வஞ்சி இவைகளைக் க்ஷாயமிட்டு கோமூத்திர சிலாஜது கலந்து கோடுக்க நீர்சுருக்கு, கல்லடைப்பு இவை நீங்கும்.

## சோஷ சிகித்சை.

ஜ்வரம், ரக்தபித்தம், காசம், ருசியின்மை, ச்வாஸம், மலம் இளகிப்போதல், தோண்டைக்கம்மல், உடல் இளைப்பு, இவை எல்லாவற்றுடன் கூடிய ராஜயக்ஷ்ம நோய்க்கு பரிகாரம் கிடையாது.

போருள் வசதியும், புலன் அடக்கமும், நல்ல ஜீர்ண சக்தியும் நாட்படாத நோயும், தேகபலமும் உள்ளவனுக்கு இந்த நோய் சிகித்சைக்குட்படும்.

தசமூல கஷாயத்தில் தயார் செய்யப்பட்ட கிருதமும், வாஸா கிருதமும், ஷட்பல கிருதமும், ஆட்டுப்பாலும், நாகபலாவை ரஸாயனமாக உபயோகித்தலும், புணர்ச்சி நீக்குதலும் முதல் சிகித்சையாகும்.

**சியவனப்பிராசம் :**–கர்கடசிருங்கீ, கீழ்காய் நெல்லி, திரிபலை சிற்றுமுட்டி, சீந்திற்கோடி, பால்முதுக்கன் கிழங்கு, பூலாங்கிழங்கு, கீரைப்பாலை, தசமூலம், சந்தனத்தூள், கோரைக்கிழங்கு, நீலோத்பலக்கிழங்கு, ஏலரிசி, ஆடாதோடை, திராக்ஷை, அஷ்டவர்கம், புஷ்கரமூலம், வகைக்கு **4** தோலா, முற்றிய நெல்லிக்காய் **500,** இவைகளை இரு துரோண ஜலத்தில் நான்கில் ஒரு பங்கு மீதமாகக் கஷாயமிடவும். (நெல்லிக்காயை துணியில் முடித்துப் போடவும்.) வெந்த நெல்லிக்காய்களை எடுத்து (விதை நீக்கி துணியில் தேய்த்து நார் விலக்கி) நெய் **24** தோலா, நல்லெண்ணெய் **24** தோலா விட்டு தேன் நிறமாகும்வரை நன்கு வறுத்துக்கொள்ளவும்.

பிறகு கஷாயத்தில் **200** தோலா சர்க்கரையைக் கரைத்து வறுத்த நெல்லிக்காயையும் போட்டுப் பாகாக்கி கீழ் இறக்கி ஆறிய வுடன், தேன் **24** தோலா, மூங்கிலுப்பு **16** தோலா, சதுர்ஜாதம் (எல்லாம்) **8** தோலா, திப்பிலி **8** தோலா, இவைகளின் சூர்ணம் சேர்த்துக்கிளறி வைத்துக்கொள்ளவும். சோஷம், மூர்ச்சை, வாந்தி, நாவரட்சி, சுவாஸம், காசம், ஒளி மங்குதல் இவைகள் நீங்கும். மனம், புத்தி இவைகளின் நோய் ஏற்படாது. தலை சுற்றுதல், பிராந்தி ஏற்படாது. நரை, மூப்பு, திரை நீங்கி, நல்ல பிரக்ஞையும் பலமும் ஏற்படும்.

**அமிருதப்பிராசம் :**— பசுவின் நெய் இரண்டு பிரஸ்தம், திராக்ஷை கஷாயம், ஆட்டுமாம்ஸ கஷாயம், பசுவின் பால், பால் முதுக்கன் கிழங்கு கஷாயம் அல்லது சாறு, கரும்பின் சாறு, நெல்லிக்காய் சாறு. தண்ணீர்விட்டான்கிழங்கு சாறு, இவை வகைக்கு இரண்டு பிரஸ்தம், கல்கத்திற்காக அதிமதுரம், அஷ்ட வர்க்கம், சிறுதேக்கு, க்ஷீரகாகோலி, தண்ணீர்விட்டான்கிழங்கு, இலந்தைக்கோட்டை, நாகபலா, சிற்றுமுட்டி, திராக்ஷை, தாமரை கிழங்கு, பேரீச்சை, தேங்காய், சிங்காடங்காய், நீலோத்பலக்கிழங்கு, சாரைப்பருப்பு, நீர் அதிமதுரம், கர்கடகசிருங்கி, தாமரைத்தண்டு, பூனைக்காலி விதை, திப்பிலி, பூலாங்கிழங்கு, ஓரிலை, நன்னாரி,

இவை எல்லாம் **32** தோலா. இவைகளை முறைப்படி கிருதமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் ஆறியபின் சர்க்கரை **200** தோலா, தேன் ஒரு பிரஸ்தம், திப்பிலிசூர்ணம் **8** தோலா, சாதுர்ஜாதகம், மிளகு வகைக்கு **2** தோலா இவைகளைத் தூள்செய்து கலந்துகொள்ளவும். சோஷம், அபஸ்மாரம், பைத்தியம், மேகம். விக்கல், காமாலை, அரோசகம், சுவாசம்; காசம், ரக்தபித்தம், பெரும்பாடு, மயக்கம், ஹிருதய நோய், குல்மம், உரக்ஷதம், இவைகளில் நல்ல குணம் அளிக்கும்.

**சிவகுடிகை :**–சுத்தமான கோமூத்திர சிலாஜதுவை, திரிபலை கஷாயம், தசமூல கஷாயம், சீந்திற்கோடி சாறு அல்லது கஷாயம், சிற்றுமுட்டி கஷாயம், பேய்புடல் கஷாயம் அதிமதுர கஷாயம், கோமூத்திரம், பசுவின் பால் இவைகளில் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று தடவை பாவனை செய்யவும். பிறகு திராக்ஷை தண்ணீர் விட்டான்கிழங்கு, முதுக்கன்கிழங்கு, பால்முதுக்கன் கிழங்கு, ஓரிலை மூவிலை, புஷ்கரமூலம், வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, கர்கட சிருங்கீ, கடுகுரோகிணி, சிற்றரத்தை, கோரைக்கிழங்கு, கோட்டைக் கரந்தை, தந்தீமூலம், கோடிவேலிவேர், சேவ்யம், யானைத்திப்பிலி, பெருந்தண்ணீர்விட்டான் கிழங்கு, அஷ்டவர்கம் இவை வகைக்கு **4** தோலா எடுத்து இரண்டு துரோண ஜலத்தில் அரை துரோணம் மிகுதியாகக் கஷாயமிட்டு, அக்கஷாயத்தில் சிலாஜதுவிற்கு மூன்று பாவனை செய்யவும் இவ்விதம் பாவனை செய்த சிலாஜது **64** தோலா, நெல்லிமுள்ளி. கர்கடகசிருங்கி, திரிகடுகம் இவை ஐந்தும் வகைக்கு **8** தோலா, பால்முதுக்கன்கிழங்கு **4** தோலா, தாளீச பத்திரி **16** தோலா இவைகளின் சூர்ணம் சேர்த்து பசுவின் நெய் **16** தோலா நல்லெண்ணெய் **8** தோலா, தேன் **8** தோலா இவை களைச் சேர்த்து அரைத்துப் பிறகு சர்க்கரை **64** தோலா மூங்கிலுப்பு லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, லவங்கப்பட்டை, ஏலரிசி, இவை களின் சூர்ணம் வகைக்கு **4** தோலா, இவைகளைச் சேர்த்து ஒரு தோலா அளவு மாத்திரை உருட்டிக்கொள்ளவும். தினம் காலையில் ஒரு மாத்திரையை ஆகாரத்திற்கு முன் சாப்பிட்டு மேல் பயற்றங் கஞ்சி தெளிவு, மாம்ஸரஸம், ஆறிய வென்னீர், திராக்ஷ மது, கள்ளு, பசும்பால் இவைகளில் ஒன்றை அனுபானமாகக் கொண்டும் லகுவான ஆகாரமருந்தியுமிருக்க நல்ல வனப்பும் தாது புஷ்டியும் ஏற்படும்

வீக்கம், கிரந்தி. லிங்கப்புற்று, நடுக்கம், வாந்தி, பாண்டு, யானைக்கால், மண்ணீரல் பெருக்கம், மூலம், பெரும்பாடு, பிளவை, மேகங்கள், கல்லடைப்பு, மணலடைப்பு, ஹிருதய ரோகம், அர்புதம், அண்டவிருத்தி, விப்புருதி, கல்லீரல் பெருக்கம், யோணி ரோகங்கள், வாத வியாதி, துடைத்தம்பம், பவுத்திரம், ஜ்வரம், வயிற்றில் மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ வலி, நாவரட்சி, வாதரக்தம், உதரம், குஷ்டம், வெண்குஷ்டம், கிருமிநோய், காசம், சுவாசம், உரக்ஷதம், க்ஷயம், ரக்தபித்தம்; மதாத்யயம், பைத்தியம், மதம், அபஸ்மாரம், உடல் தூலித்தல், உடல் இளைத்தல், சோம்பல் காமாலை, நீர்சுருக்கு இவை நீங்கும். அகாலத்தில் ஏற்படும் நரை, திரை மூப்பு நீங்தி நல்ல திடகாத்திரமும், கருத்த கேசமும், நோயில்லா உடல் வலிவும், வனப்பும் கிடைக்கும். மூளைபலம் நாவன்மை, நல்ல ஞாபகசக்தி, தாரணசக்தி இவைகளைப்பெற்று அரும் வாழ்வு வாழலாம்.

*[சிலாஜதுவை பாவனைசெய்ய திரவம் தயாரிக்க—பாவனை செய்யவேண்டிய சிலாஜதுவிற்கு சமம் பாவனைத்திரவியத்தை எடுத்து 8—16 பங்கு ஜலமிட்டு இளந்தீயில் $\frac{1}{4}$ பங்கு மீதமாகக் கஷாயமிட்டு அதனுல் பாவனை செய்யவேண்டும். பாவனைக்கு சிலாஜது கரையுமளவு திரவம் விட்டு, வெயிலிலிட்டு அது காய்ந்த பிறகுதான் மறுபடியும பாவனைக்கு திரவம் விடவேண்டும் ]*

**சிலாஜது யோகம் :—** சிலாஜதுவை திரிபலை கஷாயம், சீந்திற்கோடி கஷாயம், தசமூலகஷாயம், ஸ்திராதிகண கஷாயம் காகோல்யாதிகண கஷாயம் இவைகளில் ஒவ்வொன்றிலும் ஏழு ஏழுதடவை பாவனை செய்து உபயோகிக்க க்ஷய நோயில் நல்ல குணம் தரும்.

## கிருமி சிகித்சை.

சிறு தேக்கு, துளசி, திரிபலை, எலியால் (எலிச்செவியிலை) இவைகளின் கஷாயத்தில் வாய்விளங்கம், திப்பிலி, கோடிவேலி வேர், முருங்கைவிதை இவைகளின் சூர்ணத்தை மேம்பொடியாகப் போட்டுச் சாப்பிடுவதாலும் அல்லது திப்பிலி, வாய்விளங்கம் இவை களின் கஷாயத்தாலும் கிருமிகள் நீங்கி அவைகளால் உண்டான ரோகங்களும் போகும்.

## காய சிகித்சையில் சில விசேஷ முறைகள்.

**சிற்ருமணக்கெண்ணெய் :—** சிற்ருமணக்கேண்ணெய்யை அண்டவிருத்தியில் சூடான பசும்பாலுடனும், வாதரக்தத்தில் ஆடாதோடை, சீந்திற்கோடி, சரக்கோன்னேப்புளி இவைகளின் சூடான கஷாயத்திலும், உதரம், வீக்கம், பக்வாசயத்தில் (சிறுகுடல் பெருகுடல்) வாயு உபத்திரவமதிகம் இவைகளில் கோமூத்திரம் அல்லது பசும்பாலுடனும் சாம்பிடுவேது நல்ல குணமளிக்கும்.

**குக்குலு :—** முக்கரட்டை, தேவதாரு, கடுக்காய், சீந்திற் கோடி, இவைகளின் கஷாயத்தில் அல்லது கோமூத்திரத்தில் குக்குலுவைக்கரைத்துச் சாப்பிட வீக்கம், பாண்டு, உதரம், உடல் தூலித்திருத்தல் இவை விலகும். சோபத்தில் (உடல் முழுவதும் வீக்கத்தில்) கோமூத்திரத்துடனும், குஷ்டத்தில் கருங்காலிகட்டை கஷாயத்துடனும் மேதஸ் (கொழுப்பு) அதிகமாக உள்ளவர்கள் மஹா பஞ்சமூல கஷாயத்துடனே பெருவாகை சாரத்தின் கஷாயத் துடனே குக்குலுவை கரைத்துக் சாப்பிட நல்ல குணமளிக்கும். விரணம், குஷ்டம், பவுத்திரம், புரை, இங்நோய்களில் திரிபலே கஷாயத்துடனும், கண்டமாலே, கலகண்டம் இங்நோய்களில் கோக்குமந்தாரைப்பட்டை திரிபலே திப்பிலி இவைகளின் சூர்ணம் சேர்த்தும், வாத வியாதியில் சுக்கு, சிற்ருமுட்டி, சீந்திற்கோடி, சிற்றரத்தை, நெரிஞ்சில், சிற்ருமணக்குவேர், மூவிலே வேர் இவை களின் கஷாயத்துடனும், வாத ரக்தத்தில் சீந்திற்கோடி கஷாயத் திலும் சாப்பிட நல்ல குணமளிக்கும்.

[*குக்குலு அளவு—வேளேக்கு 4 யவம் முதல் 16 யவம் வரை*]

மூல நோயில் கடுக்காய் சூர்ணத்தை வெல்லத்துடன் அல்லது கோமூத்திரத்துடன் சாப்பிடுவேதும், சேங்கோட்டையை கிரம விருத்தி முறையில் சாப்பிடுவேதும், பிரமேகத்தில் மஞ்சளே நெல்லிக் காய் சாற்றுடனும், குஷ்டத்தில் கோமூத்திரத்துடன் சாப்பிடுவேதும் மிகவும் சிறந்தவை.

குஷ்டத்தில் முன் கூறப்பட்டேள்ள அயஸ்கிருதியும், கருங்காலி வைரமும் (ஸ்னனம் பானம் முதலிய எல்லாவித உபயோகங்களி லும்) வெண் குஷ்டத்தில் கார்போகரியை தான்றிக்காய்த்தோல் பேயத்தி வேர் இவைகளின் கஷாயத்துடன் சாப்பிடலாம்.

சுக்கு, ஸௌவர்சிலே உப்பு, புஷ்கரமூலம், பெருங்காயம், இவைகளின் சூர்ணம், **(4—8** யவ அளவு) குல்மத்திலும், சூலத்திலும் சிறந்தது.

இவிஷங்களில் தங்கத்தின் உபயோகம் சிறந்தது.

சிற்றரத்தை வாதவியாதிகளில் சிறந்தது.

பிரமிப்பூண்டின் (வல்லாரையின்) சாறு வசம்பு, கோஷ்டம், சங்கங்குப்பி வேர், தங்க பஸ்மம் இவைகளுடன்கூட உன்மாதம், அபஸ்மாரம், இவைகளால் மனது கெட்டுள்ளவர்களுக்கு கொடுக்கச் சிறந்தது.

சீந்திற்கொடி, வாதரக்தம், யானைக்கால், வாந்தி, முற்றிய காமாலே, பாண்டு, காமாலே, மேதோரோகம் இவைகளில் நல்லது.

திரிபலே கண்ணேய்களில் நல்லது.

வெட்பாலேப்பட்டை அதிஸாரத்தில் சிறந்தது.

நிலவேம்பு, சிறுதேக்குடன் ஜ்வரத்தில் நல்ல குணமளிக்கும்.

ஆடாதோடை கஷாயம், சர்க்கரை தேன் சேர்த்து ரக்தபித்தத்தில் நல்ல குணமளிக்கும்.

பஞ்சாம்லகம் எனப்படும் இலந்தை,மாதுளே, கோருக்காய்புளி, புளி, புளியாரைக்கீரை எனும் இவ்வைந்து புளிப்பு திரவியங்களும் நாவரட்சியில் சிறந்தவை.

பிப்பலி வர்த்தமான முறை—மண்ணீரல் நோய்களிலும்,
சேம்மரப்பட்டை—கல்லீரல் வியாதிகளிலும்,
கோமூத்திரம்—உதரநோயிலும்,
வாகையின் கல்கம்—விஷம் தீண்டியவர்களுக்கும்,
பேய்பீர்க்கின் வேர்—அழிஞ்சில் வேர் கஷாயத்துடன் எலிகடி விஷத்திலும்,

திப்பிலி தசமூல கஷாயத்துடன் அல்லது திரிபலே கஷாயத்துடன் பிடரி, தாவாக்கட்டை, காது, கண், மூக்கு, வாய், புருவம், தொண்டை, கழுத்து, நெற்றிப்பொட்டு, தலே, இவைகளில் ஏற்படும் நோய்களிலும்,

சுக்கு, சித்தரத்தை கஷாயத்துடனே, நெரிஞ்சில் கஷாயத்துடனே, சீந்திற்கொடி கஷாயத்துடனே கால் முதல் இடுப்புவரையிலுள்ள பாகத்தில் ஏற்படும் வலிகளிலும் நல்ல குணமளிக்கின்றன.

**ஹிங்க்வாதி சூர்ணம்:—** பெருங்காயம், சீரகம், மல்லிவிதை கடுக்காய், கோடிவேலி வேர், புஷ்கரமூலம், இந்துப்பு, ஸௌவர்சில உப்பு, கந்தகவேடியுப்பு, இவைகளின் சூர்ணம், ஹிருதயம், முதுகு வயிறு, ஆஸனவாயு, பால்குறிகள் இவைகளில் ஏற்படும் வலியைப் போக்கும்.

காய சிகித்சை முற்றிற்று.

---

**சாலாக்கிய சிகித்சை :—** தலைநோக்கிச் செல்லும் சிரைகள் வழியாக அதனதன் சீர்கேட்டிற்குக் காரணமான அபத்தியங்களால் கெட்ட வாயு, பித்த கபங்கள், தலையை அடைந்து தொண்டை, அண்ணம், கழுத்து, நாக்கு, பற்கள், காது, கண், வாய், மூக்கு, தலை, இவைகளில் வியாதியை உண்டாக்குகின்றன

**கண்ணோய் சிகித்சை :—** கண்களில் ஏற்படும் **67** வித நோய்களும், அபிஷ்யந்தத்தாலேயே ஏற்படுபவையாகையால், அவ் வபிஷ்யந்த நோய் கபத்தினின்றேற்பட்டதால், கண்ணோய்களில் முதலில் லங்கனமும், பயற்றந்தெளிவுடன் கூடிய அன்னமுமே சிறந்த பத்தியமாகும். பிறகு கண்களை அலம்ப, திரிபலை, வெள்ளை லோத்திரப்பட்டை, சந்தனம், மரமஞ்சள், இவைகளின் கஷாயமும் மேல் பூச்சிற்கு, பூங்காவி சந்தனம், ஸ்வர்ணமாக்ஷிகம், கடுக்காய், இவைகளும் சிறந்தவை. பிறகு திரிபலை கஷாயம், படோலாதி கிருதம் திருபலா கிருதம் இவை உள்ளுபயோகத்திற்கேற்றவை. பிறகு வமன விரேசனம் முதலியவைகளால் தேகசுத்தியும், ரக்த சுத்தியும், அஞ்சனம் முதலியவைகளும் ஏற்றவை.

**படோலாதி கிருதம் :—** நெய் **2** பிரஸ்தம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை, கடுகுரோகிணி, திராப்பூண்டு, செஞ்சந்தனம், மர மஞ்சள், சிறுகாஞ்சூரி, ஆடாதோடை வேர், இவை எல்லாம் **200** தோலா, திரிபலை **400** தோலா இவைகளை இரண்டு துரோண ஜலத்தில் கால் பங்கு மிகுதியாகும்படி செய்யப்பட்ட கஷாயம், திப்பிலி, வெட்பாலையரிசி, செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு அதி மதுரம், நிலவேம்பு, இவைகளின் கல்கம் (நெய்க்கு நான்கில் ஒரு பங்கு), இவைகளால் தயார் செய்யப்பட்ட கிருதம், காது, மூக்கு, கண், வாய் நோய்களில் மிகச் சிறந்தது.

**மஹாத்ரைபல கிருதம் :–** நெய் (இரண்டு பிரஸ்தம்) திரிபலே கஷாயம், ஆட்டுப்பால், ஆடாதோடை இலேச்சாறு, கருசலாங் கண்ணிச்சாறு (இவை வகைக்கு **2** பிரஸ்தம்) காகோலி, திரிபலே, சீந்திற்கோடி, நீலோத்பலக் கிழங்கு, திப்பிலி, திராக்ஷை, சர்க்கரை, அதிமதுரம், கண்டங்கத்திரி (இவை வகைக்கு **4** தோலா–கல்கம்) இவைகளே முறைப்படி சேர்த்து கிருதம் காய்ச்சி சாப்பிட கண் நோய்கள் விலகும்.

**திரிபலா கிருதம்:–** திரிபலேயைக் கஷாயமும், கல்கமுமாகச் சேர்த்து கிருதம் காய்ச்சிச் சாப்பிட கண்ணோய், குஷ்டம் பிரமேகம் முகநோய், காதுநோய், தலேநோய், மூக்கு நோய், பவுத்திரம், புரை விரணம், கண்டமாலே இவை நீங்கும்.

வைத்யன் படோலாதி கிருதம், திரிபலே கிருதம், இவைகளில் ஒன்றால் நோயாளிக்கு ஸ்னேஹ சிகித்சை செய்து பிறகு வாந்தி விரேசனம் கொடுத்து தேக சுத்தி செய்தபின் தர்பணம், அஞ்சனம் முதலியவைகளால் சிகித்சை செய்யவேண்டும்.

வாதம் பித்த கபம் இவைகளினுல் ஏற்படும் திமிரநோயில் திரிபலேயை முறை நல்லெண்ணெய், நெய், தேன் இவைகளு டன் சாப்பிடுவதே நல்லது.

**ஸுதர்சனவர்தி :–** மிளகு, திப்பிலி, அரிதாளம், மனேசிலே, கடல்நுரை, குங்குமப்பூ, சங்கு, சுக்கு, சந்தனம், பதிமுகம், இவை வகைக்கு ஒரு தோலா, ரஸாஞ்சனம் **2** தோலா, இவைகளே ஒன்று சேர்த்து அரைத்து வர்த்திசெய்துகொள்ளவும். இதைத் தேனில் இழைத்துக் கண்ணிலிட திமிரம் இமைநோய், கண்ணீர் வடிதல், அரிப்பு, அஜகா, விழி கலங்கியிருத்தல் முதலிய கண்ணோய் களில் உபத்திரவத்தைப் போக்கும்.

சுத்தி செய்த ஸௌவீராஞ்சனத்தை நன்கு கல்வத்திலிட்டு அரைத்து கருசலாங்கண்ணிச்சாறு ஆட்டுப்பால், கோமூத்திரம், பசுவின்பால், திரிபலேகஷாயம், திராக்ஷை கஷாயம், இவைகளில் (**3—7** தடவை பாவனே செய்வதால்) சுத்தி செய்துகொள்ளவும். இதை கண்களிலிடுவதால் திமிர நோய் போகும்.

**சதுரங்க வர்த்தி :–** வெள்ளாட்டீரல், பொன்காவி, தாமரைக் கேசரம், அல்லிக்கேசரம், இவைகளை ஒன்ருக அரைத்து வர்த்தி செய்துகொண்டு கண்ணிலிட பகல் இரவுகளில் ஏற்படும் பார்வை மறைப்பைப் போக்கும்.

அரேணுகம், இந்துப்பு, ஸ்ரோதாஞ்சனம், (கருப்பு சுருமாக்கல்) திப்பிலி, இவைகளை ஒன்ருக ஆட்டுப்பாலிட்டரைத்து வர்த்தி செய்துகொண்டு கண்ணிலிட இரவில் ஏற்படும் பார்வைக்குறைவை போக்கும்.

ரஸாஞ்சனத்தையும் திரிகடுவையும் தேன் விட்டரைத்துக் கண்ணிலிட பில்லநோயும், தான்றிக்கொட்டையினுள்பருப்பைத் தேனிலரைத்துக் கண்ணிலிட்டாலும், ஸ்வர்ணமாக்ஷிகத்தைத் தேனிலரைத்துக் கண்ணிலிட்டாலும்; சுக்கிர (வெள்ளைப்–பூ) நோயும் விலகும்.

சந்தனம் ஒரு பங்கு, இந்துப்பு **2** பங்கு, கடுக்காய் தோல் **3** பங்கு, புரசம்பிசின் **4** பங்கு, இவைகளைத் தேன் விட்டரைத்துக் கண்ணிலிட பூ, முளை (அர்ம) களை அறுத்து வெளிப்படுத்தும்.

## மூக்கு நோய் சிகித்சை.

பெருங்காயம், திரிகடு, வாய்விளங்கம், காய்பல் (**कायफल—हिं**) வசம்பு, கோஷ்டம், முள்முருங்கைவிதை, கொம்பரக்கு, வெள்ளைச் சாரணை, வெட்பாலையரிசி, துளஸிவிதை (இவை எல்லாம் சேர்த்து ஒரு பங்கு) கடுகு எண்ணெய் (**8** பங்கு) ஆட்டு மூத்திரம் (**32** பங்கு) இதைத் தைலமாகக் காய்ச்சி வடிகட்டி நஸ்யமிட மூக்கு நோய்கள் அனைத்தும் தீரும்.

## காதுநோய் சிகித்சை.

காடி, துறிஞ்சிப்பழச்சாறு, தேன், கடலைப்புளிப்பு இவை களையோ, தேன், இஞ்சிச்சாறு, முருங்கைவேர் சாறு, வாழைக் கிழங்கின் சாறு இவைகளையோ ஒவ்வொரு திரவமும் நல்லெண் ணெய்க்கு அளவு சேர்த்து தைலம் வடித்துக்கொண்டு காதிலிட, காதுவலி நீங்கும். அவ்விதமே நல்லெண்ணெயில் சுக்கு மல்லி விதை, பெருங்காயம் இவைகளைக் கல்கமாக அரைத்துக் கலக்கி காய்ச்சி தைலம் செய்து கொள்ள அதுவும் காதுவலி நீக்கும். வில்வப்பசையை கல்கமாக்கி ஆட்டுப்பாலும், ஆட்டுமூத்திரமும் சேர்த்து நல்லெண்ணெய்யைக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ள அத் தைலம் செவிட்டைப் போக்கும்.

**க்ஷார தைலம் :—** பெருங்காயம், கோரைக்கிழங்கு, தேவதாரு, சதகுப்பை, முள்ளங்கி க்ஷாரம், பூர்ஜஇலை, கோஷ்டம், யவச் சாரம், இந்துப்பு, ஸௌவர்சிலை உப்பு, வெடியுப்பு, முருங்கைவிதை, சுக்கு, சத்திச்சாரம், வளையலுப்பு, வசம்பு, ரஸாஞ்சனம் இவைகளை (வகைக்கு **1** தோலா வீதம்) கல்கமாக்கியும், துறிஞ்சிப்பழச்சாறு, வாழைக்கிழங்குச்சாறு மதுசுக்தம் இவை (வகைக்கு **8** பிரஸ்தம்) களையும், நல்லெண்ணெய் (**2** பிரஸ்தம்) யையும் சேர்த்துத் தைலங் காய்ச்சி ஓரிரண்டு துளி காதிலிட செவிடு, காதில் இரைச்சல் போகும். மேலும் புருவம், தலை, மூக்கு இவைகளின் வலிகளைப் போக்கும்.

[*மதுசுக்தம் தயார் செய்யும் முறை:— எலுமிச்சம்பழச்சாறு 32 அவுன்ஸ், கண்டந்திப்பிலி சூர்ணம் 16 தோலா, தேன் 32 தோலா இவைகளை ஒன்றாகக் கலந்து ஒருமாதம் தான்யபுடம் வைத்தெடுக்கவும்.*]

## முகரோக சிகித்சை.

**குஞ்சாப்பிரப தைலம்:—** நல்லெண்ணெய் இரண்டு பிரஸ்தம், கருவேலம்பட்டை **400** தோலாவை **2** துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் காய்ச்சிய கஷாயம் ½ துரோணம், கோம்பரக்கின் கஷாயம், **8** பிரஸ்தம், பசுவின்பால் **8** பிரஸ்தம், கல்கத்திற்காக— செஞ்சந்தனம், அகர், பொன்காவி, கருங்காலி, வால்மிளகு, ஜாதிக் காய், ஆலம்மொக்கு, கிராம்பு, கோம்பரக்கு, வெள்ளைலோத்திரப் பட்டை, மஞ்சிட்டி, அதிமதுரம், கோரைக்கிழங்கு, பதிமுகம், ஏலரிசி, காட்டகத்திப்பூ, நாககேஸரம், காய்பல் இவை வகைக்கு ஒரு தோலா; இவைகளை தைலபாக முறைப்படி காய்ச்சித் தைலம் வடித்து ஆறியபின் பச்சைக்கர்பூரம் **1** தோலா சேர்த்துக் கொள்ள வும். பல்கூச்சம் முதலிய பல் நோய்களிலும் மற்ற வாய் நோய் களிலும் நல்ல குணமளிக்கும்.

[*இரிமேதாதி—அரிமேதாதி தைலம் என இதற்கு மற்ற நூல்களில் பெயர். திரவியங்களில் சில மாறுதல்கள் காணப்படு கின்றன. பற்களில் தடவவும், வாய்ப்புண் முதலியவைகளில் வாயிலிட்டுக் கொப்புளிக்கவும் உதவும் சிறந்த தைலம்.*]

வாய், தொண்டை, அண்ணம் இவைகளில் ஏற்படும் நோய்களில் திரிகடு, திரிபலை, காய்பல் இவைகளின் கஷாயமும், பர்படகம், காய்பல், சுக்கு, சிறுதேக்கு, மோர்புல், கோரைக்கிழங்கு மல்லி, தேவதாரு, வசம்பு, கடுக்காய் இவைகளின் கஷாயமும் நல்ல குணமளிக்கும்.

## சிரோ ரோக சிகித்சை.

**மாயூர கிருதம் :—** மயிலின் மாம்சம் (தோகை, மூக்கு, அலகு, குடல்பிச்சு இவைகளை நீக்கியது) சித்தாமுட்டி வேர், தசமூலம், அதிமதுரம், சித்தரத்தை இவை (வகைக்கு **12** தோலா,) எடுத்து (இரு துரோண ஜலத்தில்) கஷாயமிட்டு கால் பங்கு மீதியானதும் வடிகட்டி அதில் நெய் (**2** பிரஸ்தம்) பால் (**2** பிரஸ்தம்) கல்கத்திற்காக காகோல்யாதி கணம் (வகைக்கு **2** தோலா) சேர்த்து காய்ச்சி நெய் தயார் செய்துகொள்ளவும். இந்நெய் சிரோரோகங்களில் நல்லது.

**ஷட்பிந்து தைலம் :—** நல்லெண்ணெய் **2** பிரஸ்தம், கருசலாங்கண்ணிச்சாறு **8** பிரஸ்தம், பால் **8** பிரஸ்தம், கல்கத்திற்காக– அதிமதுரம், வாய்விடங்கம், சிற்ருமணக்கின் வேர், கீரைப்பாலை, சிற்றரத்தை, அஸாரூன், இந்துப்பு, சுக்கு, லவங்கப்பட்டை இவை வகைக்கு **4** தோலா இவைகளைத் தைலமாகக் காய்ச்சி (நஸ்யமாக உபயோகிக்க) கண்கள், பற்கள், தலை முதலிய இடங்களில் உண்டாகும் நோய்களில் நல்ல குணமளிக்கும்.

**பலிதக்ன தைலம் :** நல்லெண்ணெய் (**2** பிரஸ்தம்) வேங்கை வைரக்கட்டை கஷாயம் **8** பிரஸ்தம், கல்கத்திற்காக திரிபலை, அதிமதுரம் (வகைக்கு **8** தோலா) இவைகளை தைலமாகக் காய்ச்சி வடிகட்டி நஸ்யமாக உபயோகிக்க நரை கண்ணேய்கள் போகும்.

**மற்ருென்று :—** நல்லெண்ணெய் (**2** பிரஸ்தம்) கருசலாங்கண்ணிச்சாறு **8** பிரஸ்தம், கல்கத்திற்காக திரிபலை, அதிமதுரம் வகைக்கு **8** தோலா தைலமாகக் காய்ச்சி, நஸ்யம், தலைக்கு அப்பியங்கம், சிரோவஸ்தி இவைகளைச் செய்துகொள்ள நரை விலகும்.

## சல்ய சிகித்சை.

புற்று, ஜதுமணி (வலியில்லாது சிவந்து மண்டலம் காணுதல்) மச்சம், கிரந்தி வீக்கங்கள் (**Glandular Inflammations**) மூலநோய், பகந்தரம்,விரணம் கிரந்தி, அர்புதம், வீக்கம், மணல் தடிப்பு முதலிய ரோகங்களில் க்ஷாரம், தாஹம் சஸ்திர சிகித்ஸைகளைச் செய்யவேண்டும்.

படை, விப்புருதி, குல்மம், மங்குத்துவலி, பில்லம் எனும் கண் இமை ரோகம், கலகண்டம், கிலாஸம், பவுத்திரம், அக்கி, தலைநோய், யானைக்கால், அண்டவிருத்தி, உபதம்சம், வீக்கம், லிங்கநோய், அண்ணம், கழுத்து இவைகளில் உண்டாகும் நோய், பெரிய மச்சம் இவைகளில் ரக்த சிரைகளைப் போத்து ரக்தத்தை வெளிப்படுத்துவதும் அல்லது கோம்புசுரைக்குடுக்கை இவைகளால் ரக்தத்தை வெளிப்படுத்துவதும் நல்லது.

வாதாதி தோஷங்கள், தேசம், பலம் இவைகளை நன்கு ஆராய்ந்து அட்டை முதலியவைகளால் கெட்ட ரக்தத்தை வெளிப் படுத்த வேண்டும். சிறிதளவே ரக்தம் கெட்டிருந்தால் அதை கீழ்கண்ட முறைகளால் பாகம் அடையச் செய்து வெளிப்படுத்த வேண்டும். முருங்கவிதை, சனல் விதை, சத்துமா, எள்ளு, கடுகு, ஆளிவிதை இவைகளை மோர் அல்லது காடிவிட்டு கிளறி வீக்கங் களில் பத்துப்போட வீக்கம் பழுக்கும். பழுத்த வீக்கத்தை கீறி சோதன கஷாயங்களால் விரணத்தை அலம்பி சீழைப்போக்கி எள்ளுப்பொடியையும், வேப்பிலையையும் அரைத்து மேல் வைத்துக் கட்ட புண்ணில் உள்ள தோஷங்கள் விலகியதும், புண்ணை ஆற்ற வேப்பிலையை அரைத்துத் தேனும் நெய்யும் கலந்து மேல்பூசியும், யவஅரிசி சத்துவை நெய்விட்டுக் குழப்பிப் பூசியும் பஞ்சவல் கல சூர்ணத்தை நெய்விட்டுக் குழப்பித் தடவியும் (இவைகளில் ஒரு முறையால்) புண்ணை ஆற்றவேண்டும்.

**குக்குலுதிக்தம்** (லகு) நெய் (**2** பிரஸ்தம்), கண்டங்கத்திரி வேர், சீந்திற்கொடி, ஆடாதோடை வேர், வேப்பம்பட்டை, பேய்புடல் (வகைக்கு **40**தோலா) இவைகளின் கஷாயம் (ஜலம் **2** துரோணம் விட்டு கால்பங்கு மீதமாகக் கஷாயம்) கல்கத்திற்காக—திரிகடு திரிபலை (**6**-ம் வகைக்கு **6** தோலா) சுத்திசெய்த குக்குலு (**20** தோலா) இவைகளால் தயாரிக்கப்பட்ட கிருதம் புரை, புண்,

பகந்தரம், கண்டமாலை இவைகளில் உள்வெளி உபயோகங்களில் நல்ல குணமளிக்க வல்லது.

## வாதரோக சிகித்சை

தோல் மாமிசம், ரக்தம் இவைகளைப்பற்றி வாத நோய் உண்டாகி இருந்தால் கொம்பினால் ரக்தத்தை வெளிப்படுத்தியும், ஆமத்துடன் சரியாக பக்வமாகாத ரக்தத்தால் ஏற்பட்டிருந்தால், சித்தரத்தை சீந்தில் நெரிஞ்சில், சிற்றுமணக்கு வேர், சுக்கு இவைகளின் கஷாயத்தால் ஆமத்தை பாகம் செய்தும், சிகித்சை செய்ய வேண்டும்.

குடலில் ஏற்படும் வாதநோயில், பாலாதிதைலம் முதலியவைகளால் அனுவாஸன பஸ்திசெய்தும், ராஸ்னாதி கஷாயத்தால் நிரூஹ பஸ்திசெய்தும், மேலுக்குத் தடவ சதாவரிதைலம் உபயோகித்தும் சிகித்சை செய்யலாம்

**பலாதைலம்:—** நல்லெண்ணெய் **2** பிரஸ்தம்; சித்தாமுட்டி வேர் **400** தோலாவை இடித்து இருதுரோண ஜலத்தில் கால் பங்கு மிகுதியாகும்படி கஷாயம், கல்கத்திற்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சித்தரத்தை, நாகபலா, சித்தாமுட்டி, சோம்பு, ஓரிலைவேர், மூவிலைவேர், அரேணுகம், மஞ்சிட்டி, அஷ்டவர்கம், செஞ்சந்தனம், அசாரூன், ஏலரிசி, அமுக்கருக்கிழங்கு, அகர், லவங்கப்பட்டை, அதிமதுரம், லவங்கப்பத்திரி, ஜடாமாம்சி, கற்பாசி, கோஷ்டம், தேவதாரு இவைகளின் தூள் **32** தோலா, இதைத் தைலமிட்டுக் கொள்ளவும்

**ராஸ்னாதிகஷாயபஸ்தி :—** சித்தரத்தை, தசமூலம், மலங்காரைக்காய், சித்தாமுட்டி, திரிபலை (இவை வகைக்கு **4** தோலா) ஆட்டு மாமிசம் (**64** தோலா) ஜலம் **8** பிரஸ்தம், விட்டு இவைகளைக் கஷாயமிட்டு **2** பிரஸ்தம் மீதமாக வடிகட்டி, அதில் வசம்பு கோரைக்கிழங்கு, திப்பிலி, சதகுப்பை, மலங்காரைகவுளா, கோஷ்டம் இவைகளைக் (எல்லாம் **24** தோலா) கல்கமாக்கி அரைத்து இந்துப்பு **2** தோலா, தேன் **48** தோலா, நெய்யும் நல்லெண்ணெயும் வகைக்கு **24** தோலா, பசும்பால், கோமூத்திரம், காஞ்சிகம், தயிர்தெளிவு இவை வகைக்கு **12** தோலா, இவைகளை விட்டு நன்கு கடைந்து கஷாய பஸ்தியாகக் கொடுக்க கணுக்கால்

தோடை, முழங்கால், இடுப்பு, ஆசனம், குடல் இவைகளில் ஏற்படும் வாத நோய்கள் நீங்கும்.

*[இதில் கூறப்பட்டுள்ள அளவு 3 பஸ்திகளுக்காகும். 3 பஸ்திகள் தொடர்ந்து கொடுக்கப்படவேண்டும்; அல்லது ஒரு பஸ்திக்கு இதில் மூன்றில் 1 பங்கு தயார் செய்து கொடுக்கலாம்.]*

**சதாவரீ தைலம் :—** நல்லெண்ணெய் **2** பிரஸ்தம், தண்ணீர் விட்டான் கிழங்கின் சாறு **8** பிரஸ்தம், பால் **2** பிரஸ்தம், கல்கத்திற்காக — மஞ்சிட்டி, தேவதாரு, கோஷ்டம், அஸாரூன், ஏலரிசி, கிராம்பு, அகர், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நகம், நாக கேஸரம், கவுளா, அரேணுகம், வசம்பு, செஞ்சந்தனம், ஜடாமாம்சி ஸர்ஜரசம், (வெள்ளை குங்கிலியம்) விளாமுச்சம் வேர், நிரியாசிப் பிசின், கோரைக் கிழங்கு, ஸரள தேவதாருப் பிசின், கற்பாசி, இவை **32** தோலா இவைகளைக் கல்கமாக்கிச் சேர்த்து தைலம் வடித்து வாதநோய்களில் மேல்பூச்சுக்கு உபயோகிக்கலாம்.

**மத்யமசதாவரீ தைலம்:—** நல்லெண்ணெய் **2** பிரஸ்தம், தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு **2** பிரஸ்தம், பசும்பால் **2** பிரஸ்தம், ஏலரிசி, சித்தாமுட்டி, ஜடாமாம்சி, தேவதாரு, ஓரிலை, மூவிலை, சந்தனம், கற்பாசி, கோஷ்டம், அசாரூன், சதகுப்பை இவைகளின் கல்கம் (வகைக்கு **2** தோலா) இதனால் தயாரிக்கப்பட்ட தைலம் வாத நோய்களைப் போக்கும்.

**குடுசீ தைலம்:—** நல்லெண்ணெய் **8** பிரஸ்தம், சீந்திற் கொடி **400** தோலாவை இடித்து இரு துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயம் **8** பிரஸ்தம்; யவை, கொள்ளு, இலந்தை விதை இவைகளின் கஷாயம் **8** பிரஸ்தம், தசமூல கஷாயத்தில் **8** பிரஸ்தம், பால் **32** பிரஸ்தம், கல்கத்திற்காக—விளாமுச்சை, வெள்ளைக் குங்கிலியம், கச்சோரம், சந்தனம், ஏலரிசி, கடற்பாசி, வெட்டிவேர், வசம்பு, கவுளா, முராமாம்சி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப் பூ, அகர், தேவதாரு, ஜடாமாம்சி, மஞ்சிட்டி, அஸாரூன், கோஷ்டம், அரேணுகம்; சித்தாமுட்டி யானைக்குருந்தொட்டி, சோம்பு, அமுக்கருக்கிழங்கு: சிற்றாமணக்கின் வேர், பூனைக்காலி வேர், முக்கரட்டைவேர், சித்தரத்தை தண்ணீர்விட்டான்கிழங்கு, ஸரள தேவதாரு, இந்துப்பு, நன்னாரி வேர், ஓரிலை, மூவிலை, காகோள்யாதிகணம், இவை வகைக்கு

2 தோலா இவைகளை முறைப்படி தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். வாத ரோகங்களிலும், இளைத்த உடல்களுக்கு பலம் வரவும், தாதுபுஷ்டி ஏற்படவும், நரம்புத் தளர்ச்சி நீங்கவும், ஸ்திரீகளுக்கு சுகப் பிரவசம் ஏற்படவும், மழரின்மேல் தோலுக்கு மேன்மை ஏற்படவும், குழந்தைகளுக்கு பல்முளைக்கும் காலத்தில் உபயோகப்படுத்தவும் மிகவும் நல்லது.

**பிரஸாரிணீ தைலம், ராஸ்னுதி தைலம், ஸஹசர தைலம், பலா தைலம் :—** குடூச்யாதி தைலத்தில் கூறியபடி சீந்திற்கொடியின் ஸ்தானத்தில் முதியார் கூந்தல் சேர்த்து மற்றவை களை அவ்விதமே சேர்த்துத் தயாரிக்க பிரஸாரிணீ தைலமும், சித்த ரத்தை சேர்த்துத் தயாரிக்க ராஸ்னுதி தைலமும், கருங்குறிஞ்சி வேர் சேர்க்க ஸஹசராதி தைலமும், சித்தாமுட்டி வேர் சேர்க்க பலா தைலமும் தயாராகின்றது. குணங்கள் குடூச்யாதி தைலத்தைப் போலவே.

**தசாங்க தைலம் :—** நல்லெண்ணை 2 பிரஸ்தம், கஷாயத் திற்காக—முள்குறிஞ்சி வேர், சிற்றுமுட்டி வேர், பேராமுட்டி வேர், யானைக் குறுந்தோட்டிவேர், நெரிஞ்சில்முள், அமுக்கராக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, முதியார் கூந்தல், சிற்று மணக்குவேர், சீந்திற்கொடி வகைக்கு 40 தோலா, இவைகளை இடித்து 2 துரோணம் ஜலத்தில் கஷாயமிட்டு $\frac{1}{4}$ பங்கு மீதமாக்கி அத்துடன் பால் 2 பிரஸ்தம், தயிர் 2 பிரஸ்தம், கருப்பஞ்சாறு 2 பிரஸ்தம், தயிர் தெளிவு 2 பிரஸ்தம், கோம்பரக்கு கஷாயம் 2 பிரஸ் தம், காடி 2 பிரஸ்தம், இவைகளைச் சேர்த்து எண்ணெய் கலந்து கீழ்கண்டவைகளை கல்கமாக்கிச் சேர்த்து தைலம் காய்ச்சவும். கல்கத்திரவ்யங்கள்—ஜடாமாஞ்சி, கெளளா, கோஷ்டம், மஞ்சிட்டி, சிலாரஸ், தேவதாரு, அகில், அசாருன், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, ஏலரிசி, கிராம்பு, அரேணுகம், நாகணம், ஸரள தேவதாரு, விளாமுச்சம் வேர், வெட்டிவேர், செஞ்சந்தனம், கச்சோரம், நாக கேசரம், இவை எண்ணெய்க்கு நான்கில் ஒரு பங்கு, (எல்லாம் சேர்த்து 32 தோலா) இது தசாங்க தைலம் எனப்படும். வாத வியாதி, கிழவர், அரசர், ஸ்திரீகள், குழந்தைகள், இளைத்தவர், எலும்புருக்கி நோய் உள்ளவர், இவர்கள் இந்தத் தைலத்தை உப யோகிக்க நல்ல பலன் தரும்.

இந்த முறையில் சொல்லப்பட்டுள்ள கஷாயத் திரவியங்களை தனித்தனியே கஷாயமிட்டு மற்ற திரவ்யங்களையும் கல்கத் திரவியங்களையும் சேர்த்துத் தைலங்கள் காய்ச்சுவதும் உண்டு. இதுவும் முன்போல குணம் தரும். பத்து கஷாயத் திரவ்யங்களைக்கொண்டு பத்து தைலங்கள் தயாரிக்கலாம்.

**மத்யமப்பிரஸாரணீ தைலம் :—** நல்லெண்ணெய் **8** பிரஸ்தம், முதியார் கூந்தல் **400** தோலா எடை எடுத்து இரு துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயம் செய்துகொள்ளவும், சிற்று முட்டி **200** தோலா, அமுக்கருக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கச்சோரம், கொடிவேலிவேர், தசமூலம், (ஒவ்வொன்றும் தனித்தனியே) சீந்திற்கொடி, மூக்கரட்டை, சோம்பு, மலங்காரைக் காய் இவை வகைக்கு **4** தோலா, இத்திரவியங்களை இடித்து இரு துரோண ஜலத்தில் கால் பங்கு மீதமாகக் கஷாயமிடவும். இவ்விரு கஷாயங்களுடன் பால் **8** பிரஸ்தம், காஞ்சிகம் **8** பிரஸ்தம் சேர்த்துக் கீழ்கண்டவைகளைக் கல்கமாக்கிக் கலந்து தைலம் காய்ச்சவும். கல்கத்திற்காக—அஸாருன், நாகணம், கொடிவேலி வேர், சிற்றரத்தை, கோஷ்டம், கவுளா, வசம்பு. இந்துப்பு, சுந்தக வெடியுப்பு, சீந்திற்கொடி, திப்பிலி, அரேணுகம், சோம்பு, அதிமதுரம், ஜடாமாஞ்சி, யவக்ஷாரம், சுக்கு, வெட்பாலையரிசி இவை வகைக்கு **4** தோலா.

இந்த தைலத்தால் உடல் பிடித்துவிட்டுக்கொள்ள, பலம், மேன்மை அதிகமாகி, முடம், கூன், இளைப்பு, இளம்பிள்ளைவாதம், போன்ற வாத நோய்கள் நீங்கும்.

**மஹாபிரஸாரிணி தைலம் :—** நல்லெண்ணெய் **8** பிரஸ்தம், சிற்றுமுட்டி வேர். முள்குறிஞ்சி வேர், சீந்திற்கொடி, அமுக்கருக் கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, சிற்றுமணக்கு வேர், பூனைக் காலி வேர், யானைத்திப்பிலி, தசமூலம், (தனித்தனியாக) வகைக்கு **8** தோலா, முதியார்கூந்தல் **400** தோலா, இவைகளை இரண்டு துரோண ஜலத்தில் கஷாயமிட்டு கால்பங்கு மீதமாக்கிக் கொள்ளவும். ஆட்டு மாம்ஸம் **200** தோலாவை இரண்டு துரோண ஜலத்தில் ½ துரோணம் மிகுதியாகச் செய்த கஷாயம், தயிர்தெளிவு, **8** பிரஸ்தம், காஞ்சிகம் **8** பிரஸ்தம், காடி **8** பிரஸ்தம் இவைகளைச் சேர்த்து கீழ்கண்ட திரவியங்களைக் கல்கமாக்கிச் சேர்த்துக்

காய்ச்சித் தைலம் வடிக்கவும். கல்கத்திரவ்யங்களாவன— மஞ்சிட்டி, அஷ்டவர்கம், சந்தனம், வசம்பு, கோரைக்கிழங்கு, சோம்பு, திப்பிலி, சுக்கு, இந்துப்பு, பத்மகம், கோஷ்டம், கச்சோலம் விளாமுச்சம்வேர், வேட்பாலையரிசி, சித்தரத்தை, நாகணம், கோடி வேலிவேர், அதிமதுரம் இவை வகைக்கு **3** தோலா.

இது எல்லாவித வாத வியாதிகளையும் போக்குவதில் நிகரற்ற தேன விதேகர் முதலிய வைத்தியாசார்யர்கள் கூறுகின்றனர்.

**லகுப்பிரஸாரிணீ தைலம்** :— நல்லெண்ணெய், முதியார் கூந்தல், தசமூலம், ஆட்டுமாம்ஸம், இவைகளின் கஷாயத்தில் காடி, தயிர், காஞ்சிகம், இவைகள் சேர்த்து யவக்ஷாரம், காஞ்சூரி, திப்பிலி, கோடிவேலிவேர், சுக்கு, சித்தரத்தை கோஷ்டம், தேவதாரு, அரேணுகம், அஸாரூன், அஷ்டவர்க்கம் இவைகளைக் கல்கமாக்கி தைலம் வடித்து வாத வியாதிகளில் உபயோகிக்கவும். நல்ல குணமளிக்கும்.

[*அளவு* ***விபரம்*** *— நல்லெண்ணெய் 8 பிரஸ்தம், முதியார் கூந்தல் முதலியவை மொத்தம் 400 தோலா, இரு துரோண ஜலத்தில் அரை துரோணம் மிகுதியாக கஷாயம் காடி முதலியவை வகைக்கு 8 பிரஸ்தம், கல்கத்திரவியங்கள் வகைக்கு 4 தோலா,*]

**குடுசி தைலம்**: – நல்லெண்ணெய் **8** பிரஸ்தம், சீந்திற்கொடி கஷாயம் **8** பிரஸ்தம், பால் **8** பிரஸ்தம், கல்கத்திரவியங்கள்— ஏலரிசி, லவங்கம், அஸாரூன் லவங்கப்பட்டை, கெளளா, வசம்பு ஸரள தேவதாரு, லவங்கப்பத்திரி, சோம்பு, கோஷ்டம், குந்துருக்கம் சிறுநாகப்பூ, நாகணம், ஜடாமாஞ்சி, அரேணுகம் வகைக்கு **4** தோலா, இவைகளை முறைப்படி தைலம் காய்ச்சிக் கொள்ளவும். வாத வியாதிகளில் நல்ல குணமளிக்கும்.

**ஸுகந்திபலா தைலம்** :— நல்லெண்ணெய் (**8** பிரஸ்தம்), சிற்றுமுட்டி வேர் கஷாயம் (**32** பிரஸ்தம்), பால் (**32** பிரஸ்தம்), கீழ்கண்ட கல்க திரவியங்கள்—அஸாரூன், அகர் குங்குமப்பூ, குந்துருக்கம், கிராம்பு, லவங்கப்பட்டை, கஸ்தூரி, ஸரளதேவதாரு, தேவதாரு, பச்சிலை, ஏலரிசி, நாகணம், நாககேசரம், கேஷ்டம், ஞாழல்பூ, ஜடாமாஞ்சி, குங்கிலியம், அரேணுகம் இவைகள் (வகைக்கு **4** தோலா) இவைகளை முறைப்படி தைலம் காய்ச்சவும். தனிகர்கள், அரசர்கள், ஸ்திரி, சிசுக்கள், வயோதிகர்கள் உபயோகிக்க வாத வியாதிகள் நீங்கும்.

## க்ஷாரங்கள் தயாரித்தல்.

புரசம்பட்டை, வாழைத்தண்டு, நாயுருவி இவைகளின் சாம்பலை ஒரு துரோணம் எடுத்து **12** துரோண ஜலத்தில் கரைத்து காய்ச்சவும். அந்த சாம்பல் ஜலம் பிசிப்பிசிப்புடன் தெளிந்து சிவந்த நிறமடையும் வரை காய்ச்சி பட்டு கம்பிளி துணிகளால் (**21** தடவை) வடிகட்டி துணியில் தங்குபவைகளை அப்புறப்படுத்தவும். அல்லது ஜலத்திற்கு பதில் கோமூத்திரத்தில் கரைத்து இவ்விதம் வடிகட்டவும். இவ்விதம் வடிகட்டிய **4** துரோண அளவுள்ள திரவத்தில் **32** தோலா எடையுள்ள சங்குத்துண்டுகளைக் காய்ச்சி சுருக்குக் கொடுக்கவும். சங்கு முழுவதும் அதில் கரையும் வரையில்- பிறகு தந்தீமூலம், பெரியதந்தீமூலம், அதிவிடயம், கந்தக வெடியுப்பு, நிலப்பனை, வசம்பு, புங்குஇலை, பெருங்காயம், குடுகுடுப்பை பூண்டு (பிரும்மதண்டி), ஸத்திச்சாரம், கோடிவேலி வேர், கலப்பைக் கிழங்கு, இவைகளின் தூள் வகைக்கு **2** தோலா போட்டுக் காய்ச்சவும். அது மெல்லியதாகவோ, குழம்பாகி கெட்டியாகவோ ஆகாமல் நடுத்தரமாகக் காய்ச்சவும். இந்த க்ஷாரத்தை மூலநோய் முளை முதலியவைகளில் தடவ மூலம் திரும்பி உண்டாகாது.

*[இது தீக்ஷ்ண க்ஷாரமுறை. இதில் தந்தீமூலம் முதலிய கல்கதிரவியம் போடாமல் தயார் செய்ய அது மத்யமக்ஷாரமாகும். சங்கும் போடாமலிருப்பது மிருது க்ஷாரமாகும்.]*

## பூதவித்யை.

**ஸித்தார்த்தக கிருதம்:—** வெண்கடுகு, திரிகடு, மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, மஞ்சிட்டி, பெருங்காயம், வெண்காக்கரட்டான் வேர், திரிபலை, புங்கவிதை, ஓரிலை, கவுளா, வாகை விதை, தேவதாரு இப்பதினெட்டு சரக்குகளையும் (வகைக்கு ஒரு தோலா) கல்கமாக்கி கோமூத்திரம் **8** பிரஸ்தம், நெய் இரண்டு பிரஸ்தம் சேர்த்து கிருதபாக முறைப்படி காய்ச்சவும். இதை (நஸ்யமாகவோ உள்ளுக்கோ) உபயோகிக்க உன்மாதம், அபஸ்மாரம் மற்றும் கிரஹ பீடைகள், துர்தேவதை பீடைகள் விலகும்.

**கல்யாணக கிருதம்:—** நெய் இரண்டு பிரஸ்தம், கல்கத் திரவியங்கள்—தாளீசபத்திரி, திரிபலை, முசுமுசுக்கை, ஞாழல்பூ, மூவிலை, தந்தீமூலம், மாதுளங்கட்டை, சந்தனம், தேவதாரு,

மஞ்சள், மரமஞ்சள், பேய்தும்மட்டி வேர், நீலோத்பலக்கிழங்கு, ஜாதிப்பூ, அரேணுகம், பதிமுகம், வாய்விளங்கம், மஞ்சிட்டி, கோஷ்டம், முள்ளுக்கத்திரி, ஏலரிசி, நன்னாரி, மாகாளி, தகரவிதை நாககேஸரம் இவைகளை (வகைக்கு ஒரு தோலா) கல்கமாகச் சேர்த்து (கல்கபாகத்திற்காக 8 பிரஸ்தம் ஜலம்சேர்த்து) முறைப்படி காய்ச்சிக்கொள்ளவும். மூன்று நான்காம் முறைகளில் வரும் முறை ஜ்வரத்தையும், மார்பு துடிப்பையும், மலட்டுத்தன்மையும், அபஸ்மாரம், இவேஷம், உதரம், வாதநோய், பைத்தியம், நாட்பட்ட ஜ்வரம் முதலிய நோய்களையும் போக்கவல்லது.

**மஹா கல்யாணக கிருதம் :—** நெய் இரண்டு பிரஸ்தம், பசும்பால் 8 பிரஸ்தம், கல்யாண கிருதத்தில் கல்கத் திரவியங்களாக கூறப்பட்டுள்ள தாளீசபத்திரி முதலியவைகளில் அரேணுகம், தேவ தாரு, பேய்தும்மட்டி வேர், திரிபலை, முசுமுசுக்கை நீங்கலாக மற்றவைகளைக்கொண்டு தயாரித்த கஷாயம் 8 பிரஸ்தம், காகோல் யாதிகணம் (32 தோலா) கல்கமாக்கி இவைகளை ஒன்றுசேர்த்து நெய் தயாரிக்கவும். கல்யாண கிருதத்தைப்போல் நல்ல குணம் அளிக்கக்கூடியது.

*[இதிற் சேர்க்கப்படும் பசும்பால் முதலீற்றுப் பசுவினுடைய தாக இருக்கவேண்டுமென அஷ்டாங்க ஸங்கிருஹத்தில் கூறப் பட்டுள்ளது ]*

**பல கிருதம் :—** நெய் இரண்டு பிரஸ்தம் பசுவின் பால் 8 பிரஸ்தம், காகோலி, க்ஷீரகாகோலி, ஜீவகம், ருஷபகம், மேதா, அமுக்கராக்கிழங்கு, கற்கண்டு, கடுகுரோகிணி, கோஷ்டம், தேவ தாரு, பெருங்காயம், தகரவிதை, ஏலரிசி, வசம்பு, சந்தனம், கீரைப் பாலை, திரிபலை, ஓமம், மஞ்சள், மரமஞ்சள், நிலக்குமிழ், தண்ணீர் விட்டான் கிழங்கு, மஞ்சிட்டி, கோரைக்கிழங்கு, பதிமுகம், அதி மதுரம், திராக்ஷை இவை (வகைக்கு ஒரு தோலா) களைக் கல்க மாக்கி (ஜலம் 8 பிரஸ்தம் சேர்த்து) கலக்கி நெய் காய்ச்சிக்கொள்ள வும். கிரஹபாதையுள்ள குழந்தைகளுக்கும், வீரியம் குன்றிய ஆண்களுக்கும், வாதரோகிகளுக்கும், மலடான ஸ்திரீகளுக்கும் நல்ல குணம் தரவல்லது. வமன விரேசனங்களால் தேகசுத்தி செய்தபின்னர் இதை உபயோகிக்கவும்.

**மஹாபஞ்ச கவ்யம் :—** நெய் 2 பிரஸ்தம், கஷாயத்திற்காக-சிறுதேக்கு, பேயத்திக்காய், திரிபலே, யானைத்திப்பிலி, சரக்கொன்னை பட்டை, வெட்பாலைப்பட்டை, பெருங்குரும்பை, தசமூலம், நாயுருவி வேர், ஏழிலம்பாலைப்பட்டை இவை எல்லாம் சேர்த்து (வகைக்கு சமனெடையாக) **400** தோலாவை **2** துரோண ஜலத்தில் கஷாய மிட்டு ¼ பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டிய கஷாயம், கோமூத்திரம், **2** பிரஸ்தம், பசுந்தயிர் **2** பிரஸ்தம், பசுவின்பால் இரண்டு பிரஸ்தம், கல்கத்திற்காக—திரிகடுகம், வசம்பு, வாய்விளங்கம், கோடிவேலிவேர், நிலவேம்பு, கடுகுரோகிணி, சேவதை வேர், வட்டத்திருப்பி, புஷ்கரமூலம், நன்னாரி; மலை நன்னாரி, மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம், காஞ்சூரி வேர், புங்கம் இலை, அவுரிவிதை, இவை (வகைக்கு ஒரு தோலா) கல்கமாக்கி முறைப்படி நெய் காய்ச்சவும். ச்வாஸம், அபஸ்மாரம், பிரமேக பிளவை, நாட்பட்ட ஜ்வரம், பைத்தியம் இவைகளைப் போக்கவல்லது.

**மண்டுகபர்ணீ கிருதம் :-** வல்லாரையிலைச்சாறு **8** பிரஸ்தம் நெய் இரண்டு பிரஸ்தம், கல்கத்திற்காக—கோஷ்டம், வசம்பு, சங்கங்குப்பி இவை **32** தோலா. இவைகளால் தயாரிக்கப்பட்ட நெய் அபஸ்மாரத்திலும், மேதைக்குறைவுள்ளவனுக்கும் நல்ல பலன் தரக்கூடியது.

**ஸாரஸ்வத கிருதம் :—** நெய் **2** பிரஸ்தம், ஆட்டுப்பால் **8** பிரஸ்தம், கல்கத்திற்காக-வட்டத்திருப்பி, வசம்பு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, சுக்கு, கல்யாண முருங்கம்பட்டை, இவை வகைக்கு **2** தோலா. இவைகளை முறைப்படி நெய் காய்ச்ச—ஊமை, ஜடன், திக்கிவாயன் இவர்களுக்கு மிக நல்லது.

**தசாங்க தூபம் :-** கோஷ்டம், சிலாரஸ், குக்கில், கச்சோரம், வசம்பு, கவுளா, தேவதாரு, குந்துருக்கம், முராமாஞ்சி, சாம்பிருணி இவைகளைக்கொண்டு தயாரித்த தூபம் சுக்ராசாரியரால் உபதேசிக்கப்பட்டது. சௌபாக்கியத்தைக் கொடுக்கும்.

**விஜய தூபம் :—** கல்பாசி, குக்கில், பச்சிலை, முராமாஞ்சி, சண்டைக்கிழங்கு, கச்சோரம், துளசி, குந்துருக்கம், கோஷ்டம், நான்முகப்புல், சாம்பிருணி இவைகளால் தயாரிக்கப்பட்ட தூபம் எல்லாவிடத்திலும் வெற்றியளிக்கவல்லது. கிரஹ பீடைகள் நாட்பட்ட ஜ்வரங்கள், இவிஷங்கள் இவைகளில் மிகச்சிறந்தது.

## கௌமார தந்திரம்—(பால சிகித்ஸை).

குழந்தைகளுக்கேற்படும் வயிற்றுப்போக்கில் வெள்ளை லோத்திரப்பட்டை, யானைத்திப்பிலி, வெட்டிவேர், சிறுநாகப்பூ, வில்வப்பிஞ்சு இவைகளின் கஷாயமோ, லேகியமோ, தேனுடன் கொடுக்கச் சிறந்தது. (அளவு : ஒரு வயது சிசுவிற்கு—**2, 4** யவம் சூர்ணம்; கஷாயம் ¼ அவுன்ஸ்.)

குழந்தைகளுக்கேற்படும் வாய்ப்புண்ணில் ஜாதிஇலை, பூ இவைகளை அரைத்து தேன்விட்டுக்குழப்பி நாக்கில் தடவுவதும் ஆஸனவாய்கோதிப்பில் ரஸாஞ்சனத்தை ஜலம் விட்டரைத்துத் தடவுவதும் மிக நல்லது.

திப்பிலி, அதிவிடயம் கர்கடகசிங்கி, இம்மூன்றின் சூர்ணம் தேனுடன் கொடுக்க வாந்தி, குமட்டல், இருமல், ஜ்வரம் இவை நீங்கும். தனித்திப்பிலி சூர்ணம் காசம், ஜ்வரம் இவ்விரண்டையும் நீக்கும்.

## விஷதந்திரம்.

ஸ்தாவர ஜங்கம விஷங்களின் தீண்டலால் மயங்கியுள்ள வருக்கு, மஞ்சள் சூர்ணத்தை கோமூத்திரத்துடனே வாகையின் பஞ்சாங்கத்துடனே கலக்கி சாப்பிடக் கொடுக்கலாம்.

மண்டலி முதலிய பாம்புகளின் விஷத்தில் விளா, பெருங் குமிழ், வாகை, நெல்லி இவைகளின் புஷ்பத்தை குளிர்ந்த ஜலத்தில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கலாம்.

## பிராசேதச சூர்ணம்.

எழிலம்பட்டை, வெட்பாலைப்பட்டை, வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, கோஷ்டம், விளாமுச்சம் வேர், அசாருன், ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம், வெள்ளை லோத்திரப்பட்டை இவைகளை ஸம எடை சேர்த்துச் சூர்ணம் செய்துகொள்ளவும். இரும்பு, தங்கம், வெள்ளி இவைகளாலான பாத்திரத்திலிட்டு வைத்து தேனில் குழைத்துச் சாப்பிட எல்லாவித விஷங்களும் நீங்கும்.

புறு மலம், மனிதன் தலைமயிர், மாட்டுக்கொம்பு, மயில் தோகை, யவை உமி, நெல்லுமி, பருத்திவிதை, பழைய பூமாலை (சிவ நிர்மால்யம்) இவைகளைத் தூபமாக்கி, பாம்பு—எலி குடியிருக்கு மிடத்தில் புகை போட அவை அவ்விடத்தில் வசிக்காது.

**ஆஸ்தீகாகதம் :—** நருவிளிப்பட்டை, நாயுருவி, சீந்திற்கோடி சரக்கோன்னைப்பட்டை, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி இவை களின் சூர்ணத்தைக்கோண்டு எல்லாவித விஷங்களையும் போக்கலாம்.

கோஷ்டம், வசம்பு, மலங்காரைக்காய், தேவதாளிப்பீர்க்கு விதை, இவைகளின் சூர்ணத்தை கோமூத்திரத்துடனே பேய் பீர்க்கின் கஷாயத்துடனே சாப்பிட எலி விஷம் நீங்கும்.

நல்லெண்ணெய், எருக்கம்பால், எள்ளின் கல்கம், வெல்லம் இவைகளை ஸமனேடை சேர்த்துச் சாப்பிட்டாலும், கோள்ளுக்காய் வேளை வேரின் சூர்ணத்தையோ, ஊமத்தை விதையுடன் அரிசி சேர்த்து தயார் செய்த அப்பளத்தை சாப்பிடுவதாலோ நாய் கடித்த விஷம் நீங்கும்.

## ரஸாயனம்.

திப்பிலியையும், சேங்கோட்டையையும் வர்த்தமான முறை யில் ஸேவிப்பதும், தங்கம், சிலாஜது, குக்குலு, நெல்லிக்காய், உள்ளிப்பூண்டு, திரிபலை இவைகளை ரஸாயன முறைப்படி சாப்பிடு வதும், தேகத்தை நோய் ஏற்படாமல் காப்பாற்றுகின்றது மேருகன் இலையைக் காயவைத்து தூள்செய்து காலையில் நெய், தேன், பால், தயிர் தெளிவு இவைகளுடன் சாப்பிட முப்பு நீங்கி, உடலில் பல மேற்படும். சிற்றுமணக்கேண்ணெய்யும், வேப்பெண்ணெய்யும் சரீரத்தில் நோயணுகாவண்ணம் பாதுகாக்கவல்லது. வாலுளுவை எண்ணெய்யும் புரசம் வித்தெண்ணெய்யும் நரை திரை போக்க வல்லது.

**ஆமலக ரஸாயனம்:—** பனிகாலத்தில் உண்டாகும் நெல்லிக் காயை வேங்கைக்கட்டை கஷாயத்தில் வேகவைத்தோ அல்லது விதைநீக்கி எள்ளு சேர்த்தோ சாப்பிட சரீரத்தில் நோயணுகாது.

தங்கசூர்ணத்தை (அல்லது பஸ்மத்தை) சர்க்கரை, வசம்புட னே, நெல்லிமுள்ளி சூர்ணத்துடனே திரிபலையுடனே நெய்யுடனே சாப்பிட நல்ல ரஸாயனமாகும்.

## வாஜீகரணம்.

தண்ணீர்விட்டான் கிழங்கு, யானைக்குறுந்தோட்டி, நிலக் குமிழ், நெரிஞ்சில், நெல்லிமுள்ளி, இவைகளைத் தனித்தனியாகத்

தூள்செய்து ஒவ்வொன்றையும் நெய், சர்க்கரை, தேன் சேர்த்து சாப்பிட்டோ அல்லது எல்லாவற்றையும் ஒன்ருக்கித் தூள்செய்து நெய், தேன், சர்க்கரை சேர்த்து சாப்பிட்டோ வர தாதுபுஷ்டியும் போக சக்தியும் அதிகமாகும்.

சிற்ருமுட்டி வேர், பேராமுட்டி வேர், யானைக்குறுந்தோட்டி வேர், இவைகளின் சூர்ணத்தை தேன், நெய், சேர்த்து சாப்பிட்டாலும், காட்டுளுந்து வேர், காட்டுப்பயறு வேர் இவைகளின் சூர்ணத்தைத் தேன் சேர்த்துச் சாப்பிட்டாலும், சீந்திற்கொடி, நெல்லிக்காய், நெரிஞ்சில் முள் இவைகளின் சூர்ணத்தைத் தேன் சேர்த்துச் சாப்பிட்டாலும் போக சக்தி அதிகமாகும்.

வமனம் முதலியவைகளால் சரீரசுத்தி செய்துகொண்ட பின்னர், நெரிஞ்சில்முள், அதிமதுரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்ருமுட்டி, பேராமுட்டி, யானைக்குறுந்தோட்டி இவைகளின் சூர்ணத்தைப் பாலுடன் சாப்பிட யானை பலத்தைப் பெறலாம்.

## முடிவுரை.

இந்த சிகித்ஸா கலிகா என்ற பூங்கோத்து நற்பொருள் ஆகிற மணத்துடன் வைத்யர்களாகிற வண்டுகளால் அனுபவிக்கத் தகுந்ததாய், நானூறு ச்லோகங்களாகிற தாமரைப்பூக்களால் வனையப்பட்டிருக்கிறது. ஸுச்ருதர் முதலானோரின் சாஸ்திர ஸமுத்திரத்திலுள்ள யோக ரத்னங்களால் அழகாக்கப்பட்டிருக்கின்றது. வைத்யச்ரேஷ்டர்களின் கழுத்துக்களில் வேதகாலம் இது தரிக்கப்பட்டு விளங்கட்டும்.

**ஆசார்ய தீஸடர் இயற்றிய சிகித்ஸாகலிகா முற்றிற்று.**